
தேவியின்
கண்மணி
லட்சுமி பிரபா
ரூ.20/-
இந்த இதழுடன் அழகிய
தினசரி காலண்டர்
கேட்டு வாங்குங்கள்
நெஞ்சம் இரண்டின்
சங்கமம்

அழகோ அழகு



# மாய்ஸ்சுரைசர்

பெண்களின் அழகுக்கு அழகு சேர்க்கும் பொருட்களில் இன்று முக்கியமானதாக விளங்குவது மாய்ஸ்சுரைசர்கள் என்றால் அது மிகையல்ல. கடைகளில் கிடைக்கும் மாய்ஸ்சுரைசர்களை பொருத்தவரை விலை அதிகமாக இருப்பதுடன், வேதியல் பொருட்கள் கலந்திருப்பதுகாரணமாக சரும பிரச்சினைகள் ஏற்படவும் வாய்ப்புண்டு. அதேநேரத்தில் வீடுகளில் நாமே இயற்கையான முறையில் தயாரிக்கும் மாய்ஸ்சுரைசர்களை பயன்படுத்துவதால் தோல் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதுடன் பக்கவிளைவுகளும் வராமல் தவிர்க்கலாம். பொதுவாக ஒவ்வொருவர்களின் தோல் பிரச்சினைக்கு ஏற்ப பலவகை மாய்ஸ்சுரைசர்களை தயாரிக்கலாம். அவற்றை எப்படி உருவாக்குவது என்பதை அறிந்து கொண்டு பயன்பெறலாம்தானே!



### பால் மாய்ஸ்சுரைசர்:

**இ**ரண்டு தேக்கரண்டி எலுமிச்சை சாறுடன், 1 தேக்கரண்டி ஆலிவ் எண்ணெயை எடுத்து 1க்கு 3 என்ற அளவில் பாலுடன் சேர்க்கவும். இதனை நன்றாக கலத்து குளிர்சாதனப் பெட்டியில் வைத்தால், தினமும் பயன்படுத்த உங்களுக்கு ஒரு மாய்ஸ்சுரைசர் தயார்.

### குளியலுக்குப் பிறகு பயன்படுத்தும் மாய்ஸ்சுரைசர்:

**பா**தாம், எள் மற்றும் தேங்காய் போன்ற முக்கியமான எண்ணெய்களில் 10 தேக்கரண்டிகள் எடுத்துக் கொள்ளவும். அவற்றை ஒன்றாக கலக்கி ஒரு பாட்டிலில் வைக்கவும். குளித்து முடித்த பின்னர் இந்த கலவையை உடலில் தடவினால் உங்களுடைய சருமம் மென்மையாகவும், பட்டுப் போல் பளபளப்பாகவும் மாறிவிடும்.





### புத்துணர்விற்கான மாய்ஸ்சுரைசர்:

**வெ**ள்ளரிக்காயுடன், ஒரு தேக்கரண்டி எலுமிச்சை சாறு மற்றும் இரண்டு தேக்கரண்டி ஆலிவ் எண்ணெய் ஆகியவற்றை கலக்கி வைத்துக் கொள்ளுங்கள். அதனை குளிர்சாதனப் பெட்டியில் வைத்து உங்களுக்கு தேவைப்படும் போதெல்லாம் பயன்படுத்துங்கள்.



## தேங்காய் எண்ணெய் மாய்ஸ்சுரைசர்:

**தே**ங்காய் எண்ணெய் ஒரு சிறந்த மாய்ஸ்சுரைசர் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. தேங்காய் எண்ணெயை, லாவண்டர் எண்ணெய்யுடன் சேர்த்து கலக்கி தொடர்ந்து பயன்படுத்தவும்.





## வறண்ட சருமத்திற்கான கற்றாழை மாய்ஸ்சுரைசர்:

**க**ற்றாழை சாற்றை இரண்டு தேக்கரண்டிகள் எடுத்துக் கொண்டு, பாதாம் எண்ணெய் மற்றும் ஆலிவ் எண்ணெய் ஆகியவற்றை ஒரு தேக்கரண்டி அளவிற்கு எடுத்து ஒன்றாக கலக்கவேண்டும். இந்த கரைசல் உங்களுடைய வறண்ட சருமத்தை ஈரப்பதமாக வைத்திருக்க உதவும்.

## ரோஜா இதழ் மாய்ஸ்சுரைசர்:

**ரோ**ஜா இதழ்களை ரோஸ் வாட்டரில் போட்டு கொதிக்க வைக்கவும். இதனை வடிகட்டியபின் 2 தேக்கரண்டி கற்றாழை சாறை சேர்க்கவும். இதனை குளிர்சாதனப் பெட்டியில் வைத்து, தேவைப்படும் போது எடுத்து பயன்படுத்தலாம். இந்த மாய்ஸ்சுரைசரை சென்சிடிவ் சருமங்களில் பயன்படுத்தலாம்.





# நெஞ்சம் இரண்டின் சங்கமம்

**வே**டந்தாங்கல் பறவைகள் சரணாலயம்!

பறவைகளின் 'கலகலத்வனி' சங்கீதமாய் செவிகளில் பாய்ந்தது.

கடல் போன்று அகண்ட ஏரி. ஏரி தண்ணீரில் வளர்ந்திருந்த அடர்ந்த புதர்களிலும், ஏரிக்கரையோரத்து மரங்களிலும் வித வித மான பறவைகள்.

இதமான தட்ப வெப்பத்திற்காகவும், குஞ்சு பொரித்து சந்ததி பெருக்க தோதான சூழ்நிலைக்காகவும் எந்தெந்த தேசத்தரு லிருந்தோ பறந்து வந்த வெளிநாட்டுப் பறவைகள்.

மேட்டின் மீது கரையோரமாய் நின்றபடி பைனாகுலர் வழியே தூரத்தில் ஏரியை சுற்றிலும் பார்வையால் வலம் வந்தாள் வந்தனா.

அதோ அந்தப் புதர் மேலே ஒரு பெரிய அலகோட வெள்ளைப் பறவை இருக்கு பாரேன். உடம்புல ஆங்காங்கே பேனா மையைத் தெளிச்சு விட்ட மாதிரி புளூ கலர்லே வட்ட வட்டமாய் புள்ளிகள்.

என்ன அழகு? இறைவனோட படைப்புல எத்தனை எத்தனை அதிசயங்கள். அந்தப் பறவையோட அலகு கனகாம்பர நிறத்துல இருக்கே. நீ பாரேன் குமுதா.

விழிகள் விரிய ரசித்துப் பார்த்து வந்தனர். பைனாகுலரை தனது தோழியிடம் நீட்டினாள்.

தலைக்கு மேல ஒரு காக்கா குருவி பறந்தாக்கூட ரசனையோட அன்னாந்து பார்க்கிறவள் நீ. உன் அளவுக்கு என்னால அணு அணுவா இயற்கையை ரசிக்கத் தெரியாதுப்பா.

கதை, கவிதை, படங்கள்லே வர்ற இயற்கை காட்சிகளை வாசித்து

-லட்சுமி பிரபா

**த**ந்தையின் இனிஷியலை மகனுக்கும், தாயின் இனிஷியலை மகளுக்கும் வைக்கும் பழக்கம் கேரளாவில் உள்ளது.

-பிரசன்னா, சென்னை.

விட்டு வருணிச்சுப் பேசிட்டிருப்பே.

இப்போ. இவ்ளோ அழகான இயற்கை பிரதேசத்துக்கு நேர்ல வந்துட்டே இனி கேட்கவா வேணும்? சரியான ரசனைப் பைத்தியம் நீ என்று கிண்டலடித்தபடியே பைனாகுலரை வாங்கிப் பார்த்தாள் குமுதா.

அப்புறம் இந்த இடத்துக்கு எதுக்கு வருவாங்களாம்?

வித விதமான வெளிநாட்டுப் பறவைகளை ரசிக்க மட்டும் தான். இங்கே கூட்டம் வருதுன்னு நெனச்சுட்டிருக்கியா? சரியான முட்டாள் வந்தனா நீ.

ஏய்... குமுதா! என்னடி? பைத்தியம் முட்டாள்னு கிண்டல் பண்ணிட்டிருக்கே? எத்தனை கூட்டம் வந்திருக்கு? இவங்க எல்லாரும் ரசிக்கத்தானே வந்திருக்காங்க?

பாதிப்பேர் ரசிக்கத் தான் வர்றாங்க. இழுத்தாள் குமுதா.

அப்போ... மீதிப்பேரு?

அங்க பாரேன்.

அவள் சுட்டிக்காட்டிய திசையில் பார்வையால் பயணித்தாள் வந்தனா.

ஒரு மரத்தடியில் இருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்திருந்த காதலர்கள் ஏகாந்தமாய் பேசியபடி உலக நினைப்பை மறந்து கிறங்கிக் கிடந்தனர்.

சே... குமுதா! நீ ரொம்ப மோசம்.

*''இந்த டாக்டர் பேஷன்ட் வந்தா பல்ஸ் எப்படி இருக்குனு பாக்க மாட்டார்''*

*''பின்னே...?''*

*''பர்ஸ் எப்படி இருக்குது தான் பார்ப்பார்...''*

**-பர்வீன் யூனுஸ், சென்னை.**



எப்படி டி உன் கண்ணுக்கு மட்டும் இதெல்லாம் படுது?

நம்மை சுத்தி நாலாப்புறமும் என்ன நடக்குதுன்னு பார்த்துக் கணும். அதெப்படி உனக்கு இவங்க கண்ணுல படாம போயிட் டாங்க?

எதுலே கவனமா இருக்கணுமோ. அதுலே மட்டும் தான் கவனமா இருக்கணும். கவனத்தை சிதற விடக்கூடாது. அர்ஜுனனுக்கு மரத் துக்கிளை தெரியலை, இலை தெரியலை. கனி, காய் எதுவும் தெரி யலை. குருவியோட கண் மட்டும் தான் தெரிஞ்சதாம்.

அப்படியொரு கவனத்தோட இருந்ததால் தான் வில்லுக்கு அர்ஜு னர்'னு பேரு வாங்க முடிஞ்சது.

சின்ன விஷயமா இருந்தாலும், அததுக்கு தகுந்த உதாரணம் காட்டி வியாக்கியானம் பேசிடுவியே? உன்னை ஜெயிக்க முடியா துப்பா. தப்பு தான். நான் சொன்னது தப்பு தான்.

கண்ணுல... இதைப்போல கண்ட கண்ட காட்சிகள் படத்தான் செய்யும். பாலையும், நீரையும் சேர்த்து வச்சா பாலை மட்டும் பிரிச்சு எப்படி அன்னப்பறவை குடிக் குதோ? அதை மாதிரி நாமளும் நல்ல விஷயத்தை மட்டும் எடுத் துக்கணும்.

சரி... சரி... விடு. உங்கப்பாவும், எங்கப்பாவும் கால், ஓய்ஞ்சு போயி தூரத்துல சிமெண்ட் பெஞ்சுல உட்கார்ந்துட்டாங் களே? நாமளும் போலாமா?

என்னடி குமுதா? பாதி தானே சுத்திப் பார்த்திருக்கோம். மீதியைப் பார்க்காம எப்படி போறது? இன்னும் நிறைய பறவைகள் அந்தப் பக்கமா இருக்குமே?

எவளோ நேரமானாலும் பரவாயில்ல. நிதானமா, திருப்

***''மாமியாரை எவ்வளவு நம்பிக்கையோட ஏ.டி.எம்ல பணமெடுக்க அனுப்புறே! உன்னை நினைச்சா பெருமையா இருக்குடீ...''***

***''அட, நீ வேற! இப்ப வெல்லாம் ஏ.டி.எம்ல பணமெடுக்க வரபொம்பளைகளை அடிச்சு, கை- காலை உடைச்சு திருடுறாங்களே, அதான் அனுப்பினேன்.''***

**-அ. யாழினி பார்வதம், சென்னை.**



தியா சுத்திப் பார்த்துட்டு வாம்மா'ன்னு எங்கப்பா சொன்னாரே?

சே! எனக்கு போர் அடிக்குது வந்தனா.

ரொம்பத்தான் சலிச்சுக்கிறியேடி. லட்சக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து, இந்த பறவைங்க சொல்லி வச்சாப்பல சீசன் சீசனுக்கு கரெக்டா பறந்து இங்க வந்து டேரா போடுதே?

என்ன அதிசயம்? ஆகாயமார்க்கமா சரியா வேடந்தாங்கலுக்கு வர்றதுக்கு அதுகளுக்கு எப்படி வழி தெரியுது?

நினைக்க நினைக்க ஆச்சரியமா இருக்கே?

நான் முழுசா சுத்திப் பார்த்துட்டு தான் வருவேன்.

கால் கடுக்குது. நான் அந்த ஸ்டோன் பெஞ்சுல உட்கார்ந்துக்குறேன். நீ ஆசை தீர ஒரு ரவுண்ட் போயிட்டு வர்றியா வந்தனா?

கண்டம் விட்டு கண்டம் பறந்து வழி கண்டுபிடிச்சு வந்து சேர்ந்திருக்கே பறவைங்க? இந்த இயற்கையின் அதிசயத்தைப் பார்க்க குடுத்து வச்சிருக்கணுமே? போடி உனக்கு ரசனையே இல்ல. சரி நான் மட்டும் போயிட்டு வர்றேன்.

நடக்க யத்தனித்தாள் வந்தனா.

பறவைங்களுக்கு வழி எப்படித் தெரிஞ்சதுன்னு நான் சொல்லவா?

சொல்லேன். ஆவலாய் குமுதாவின் முகத்தை ஊன்றிப் பார்த்தாள்.

இந்தப் பறவைங்க. இந்தியப் பைலட் ஒருத்தரை பிடிச்சு லஞ்சம் குடுத்திருக்கும். அந்த பைலட் பாராசூட்டுலே முன்னாடி பறந்து வந்து வழி காட்டியிருப்பாரு.

உன் தலை... போடி!

இரண்டடி நடந்தவள், சட்டென்று நின்றாள்.

என்னடி நின்னுட்டே?

ஏய் குமுதா. இதோ... இந்தப் புதர்லே பாரேன். கரையின் அருகாமையிலிருந்த புதரை சுட்டிக் காட்டினாள்.

மிகப்பெரிய அலகை கொண்டிருந்த சாம்பல் வண்ணப் பறவை. இரண்டு கை அகலத்திற்கு பெரிய முட்டையிட்டது.

தண்ணிக்குள்ளே முட்டை இடாம பத்திரமா சேதாரம் ஆகாம எப்படி முட்டை போடுது கவனிச்சியா? சே... அதிசயம்டி. எவ்ளோ

பெரிய முட்டை.

சிலாகித்தாள் வந்தனா.

முட்டையைப் பார்த்து அதிசயப் படறியேடி?

இதெல்லாம் என்னைப் பொறுத்தவரை சாதாரணம் என்றபடி அருகில் வந்தாள் குமுதா.

இவ்வளவு பெரிய சைஸுல நான் முட்டையை பார்த்ததே இல்ல. பறவைக்கேத்தபடி முட்டையும் பெரிசாத்தான் இருக்கு.

குமுதாவின் கமெண்ட்சை காதிலேயே போட்டுக் கொள்ளாமல் கூர்ந்து பறவையையே பார்த்தாள் வந்தனா.

புதரிலிருந்த இலை, பெரிய காம்புகளை, அலகால் கொத்திப் பிய்த்து எடுத்து முட்டையின் மீது பாதுகாப்பாய் மறைவாய் வைத்து விட்டு அந்தப் பறவை ஏரியின் மைய பகுதியை நோக்கி பறந்தது.

கூ.... குக்கூ... கூ... கூ...

குயிலோசையைக் கேட்டதும் அருகிலிருந்த மரத்தை அன்னாந்து பார்த்தாள்.

ஜோடிக் குயில்கள் ஒன்றாய் அமர்ந்தபடி போட்டா போட்டி போட்டுக் கொண்டு கூவின.

நிற்பதுவே... நடப்பதுவே... பறப்பதுவே நீங்களெல்லாம்.

சொப்பனந்தானோ? பல தோற்ற மயக்கங்களா?

கற்பதுவே, கேட்பதுவே கருதுவதே... நீங்களெல்லாம்

அற்ப மாயைகளோ?- உம்முள் ஆழ்ந்த பொருள் இல்லையோ?

மகாகவி பாரதியாரின் பாடலை... அவளையும் அறியாமல் மெல்லிய குரலில் பாடினாள் வந்தனா.

குயில் தோத்துப் போச்சு போ. நிஜமாவே சொல்றேன்டி. நீ பார்க்கிற எதிலேயும் அதிசயமில்ல. நீதான் அதிசயம். அழகுன்னா... அப்படியொரு அழகு.

அழகுக்கு ஏத்த குணம், திறமை, படிப்பு, ரசனை, பண்பு அழகா இருக்கிறவங்களுக்கு குணமும், குரலும் அமையாதுன்னு சொல்வாங்க. உனக்கு குணமும் நல்லா இருக்கு. குரலும் நல்லாயிருக்கு.

சும்மா இருடி. அதட்டி விட்டு நடந்தாள்.

ஆமா. நீ பாடினியே? அது என்ன செய்யுளா? இல்ல. பழைய படத்துல வர்ற பாட்டா?

**ரா**ஜநாகத்தின் விஷத்தை மண் பானையில் வைத்திருந்தால் 35 ஆண்டுகளானாலும் அதன் நச்சுத்தன்மை சிறிதும் குறையாதாம்.

-பிரசன்னா, சென்னை.

கார்ன் கொறித்தபடி கேட்டாள் குமுதா.

அடக்கடவுளே! இது பாரதியார் பாட்டு... கஷ்ட காலம்டி களுக் என்று சிரித்தாள் வந்தனா.

பார்த்தவரைக்கும் பத்தாதடி? என்ன பறவைங்களை ரிசர்ச்சா பண்ணப் போறே? போகலாமேப்பா.

ஏண்டி ஒண்ணு என் கூட வா. இல்லேன்னா என்னை மட்டுமா வது போக விடு. இரண்டும் இல்லாம இம்சை பண்ணிட்டிருக்கே?

சரி நீயே போ.

ரசனை கெட்ட ஜென்மம்டி நீ. செல்லமாய் குமுதாவின் தலை யில் தட்டினாள்.

ரொம்ப தூரம் நடக்கப் போறே. தொண்டை வறண்டா ஜூஸ் பாட்டிலில் இருக்கு. எடுத்துக் குடி. பிஸ்கட் பாக் கெட், பழம் எல்லாமே உன் பேக்குல இருக்குங்கிறதை மறந் துடாதே.

பேக் தான் கனக்குதே? எல் லாம் நான் பார்த்துக்கிறேன். சிரித்தபடி நடந்தாள்.

நீ பாதி வழி போறதுக்குள்ளே என் பேக்குல உள்ளதை நான் காலி பண்ணிடுவேன்.

உம் சாப்பிடறதிலேயே குறியா இருடி.

குரங்குகள் நிறைய இருக்கும் போலிருக்கு ஜாக்கிரதை.

"எவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செஞ்சும் ஏதாவது குத்தம் சொன்னா எப்படி?"

"மேனேஜரை சொல்றீங்களா?"

"இல்லே.. என் மனைவியை சொல்றேன்.."

-பர்வீன் யூனுஸ், சென்னை.



குரலுயர்த்தி எச்சரித்தாள் குமுதா.

பைனாகுலரை ஹேண்ட் பேக்கினுள் வைத்து விட்டு, தனது செல் போனை வெளியில் எடுத்தாள் வந்தனா.

மரங்களிலும் புதர்களிலும் தென்பட்ட வித்தியாசமான பறவைகளைப் படம் பிடித்த வண்ணம் நடந்தாள்.

சற்று தூரத்தில் ஒரு உயரமான கட்டிடம் கண்ணில் தென்பட்டது.

இது என்ன? படிக்கட்டுகள் ஒடுக்கமாய் வளைந்து வளைந்து மேலேறிப் போகுதே?

கலங்கரை விளக்கம் போல் இவ்வளவு உயரமாய் கட்டப்பட்டிருக்கிறே?

சிறுவர்களும் பெரியவர்களும் ஏறுவதும், இறங்குவதுமாய் இருக்கிறார்கள்.

ஓ... அதன் மேலிருந்து பார்த்தால் ஒட்டுமொத்த ஏரியையும் பறவைக் கூட்டத்தையும் தெளிவாய் காணும்படி தோதாய் கட்டியிருக்கிறார்கள். அவளுக்கும் அதன் மேலே ஏறிச் சென்று பார்க்க வேண்டும் என்ற ஆவல் உதித்து விட்டது.

விடு விடுவென்று நடந்து அந்தப் படிக்கட்டுகளில் ஏறினாள்.

வளைந்து மேலேறும் படிக்கட்டுகள் கைப்பிடிச்சுவர் இடுப்பளவே அமைக்கப்பட்டிருக்கிறதே?

சிறுவர்கள் வந்து போகும் இடம். சற்று உயரமாய் கைப்பிடிச்சுவர் அமைந்திருந்தால் பாதுகாப்பாய் இருக்குமே?

யோசனையுடன் மேலேறிப் போனாள். உச்சியில் முப்பது பேருக்கு மேல் நின்று பார்க்கும் அளவு தளம் விசாலமாய் வடிவமைக்கப்பட்டிருந்தது.

பைனாகுலரை எடுத்து ஏரிப் பரப்பையும், பலவிதமான பறவைகளையும் ஆசை தீரப் பார்த்தாள்.

தன்னையும் மறந்து வெகுநேரம் நின்று விட்டிருந்தாள். காற்று சிலுசிலுவென்று அள்ளிக் கொண்டு போனது.

திருப்தியுடன் பைனாகுலரை பேக்கில் வைத்து விட்டு இறங்கலானாள். அங்கு அவளைத் தவிர ஒருவரும் இல்லை. இவள் அளவிற்கு யாரும் அங்கு வெகுநேரம் நிற்கவில்லை.

ஏறி ஒரு பார்வை பார்த்து விட்டு இறங்கி விட்டிருந்தார்கள்.

குமுதா சொன்னது போல் நானொரு ரசனைப் பைத்தியம் தான் போலிருக்கிறதே?

தனக்குள் முணு முணுத்தவளின் இதழ் கடையில் சிறு புன்னகை பூத்திருந்தது.

நான்கு படிகள் தான் இறங்கியிருப்பாள்.

'காச்... காச்... ஹக்...

வினோதமாய் குரல் எழுப்பியபடி ஆக்ரோஷமாய் பக்கத்து மரத்திலிருந்து ஒரு குரங்கு குதித்தது. இரண்டு படிக்கட்டுகள் தள்ளிக் குதித்த குரங்கு. இவள் மேல் பாய்வதற்கு தயாரானது.

ஹேண்ட் பேக்கில் தின்பண்டம், பழங்கள் இருப்பதை தெரிந்து கொண்டு அதைப் பறிக்க குரங்கு வந்திருக்கிறது என்பதை புரிந்து கொண்டாள்.

பேக்கில் செல்போன், பைனாகுலர், ஐ.டி. கார்டு எல்லாம் இருக்கிறதே?

மேலே பாய்ந்து முகத்திலும், உடம்பிலும் கூரிய நகங்களால் பிராண்டி விட்டால்? கடித்து வைத்து விட்டால்? அய்யயோ!

அவளுக்கு சர்வமும் பதறியது.

பதற்றத்தில் கை, கால்கள் நடுங்கின.

பயத்திலும், அவசரத்திலும் கைப்பிடிச்சுவர் ஓரமாய் சாய்ந்து விட்டாள்.

குரங்கு பாய முற்பட, அனிச்சையாய் அவள் பின் பக்கமாய் சாய்ந்தாள்.

கண் இமைக்கும் நேரத்தில் 'அவ்ளோ தான் நான் செத்தேன்' என்று எண்ணியவள் பீதியில் வீலென்று அலறினாள்.

## 2

**வ**ந்தனா அலறிய அலறல் அந்த ஏரி முழுவதும் எதிரொலித்தது.

அதீத பயம், அதிர்ச்சியில், அவள் சட்டென்று மூர்ச்சையாகி விட்டிருந்தாள்.

அவள் தவறி விழப்போகும் தருணத்தில், ஒரு வாலிபன் மேலே ஏறி வந்து கொண்டிருந்ததையோ, குரங்கு அவள் மீது பாய முற்ப டவும் அவன் அவசரமாய் இவளருகே உதவ வந்ததையோ அவள் கவனிக்கவேயில்லை.

சமயோசிதமாய் வேகமாய் ஏறி வந்தவன், வந்தனா தவறி விழப் போனபோது, தனது வலிய கரத்தை அவளது இடையை சுற்றி அவளை பத்திரமாய் தாங்கிக் கொண்டான்.

இந்த கையால் சிறு மரக்கிளையை ஒடித்து குரங்கை நோக்கி ஓங் கினான்.

இந்த மாதிரி சேட்டைக்குரங்குகள். சிறுவர்கள், பெண்கள் என்று பயந்த சுபாவம் உள்ளவர்களை தானே குறி வைக்கும்.

குரங்கு பயந்து பாய்ந்து தாவி ஓடி விட்டிருந்தது.

ஹலோ... குரங்கு ஓடிப் போச்சுங்க. பயப்படாதீங்க என்றவனுக்கு அப்போது தான் புரிந்தது.

ஓ... பயமேலீட்டால் இந்த பெண் மயக்கமடைந்து விட்டாளா?

அங்கே படிக்கட்டுகள் ஒடுக்கமாய் இருந்ததால், சுற்றும் முற்றும் பார்த்து விட்டு, அவளைப் பூப்போல் இரு கைகளாலும் ஏந்தியபடி மேலே அந்த தளத்திற்கு சென்றான்.

கீழே அவளைக் கிடத்தி, தனது முதுகில் மாட்டிக் கொண்டு வந்த டிராவல் பேக்கை கழற்றி உள்ளிருந்து வாட்டர் பாட்டிலை எடுத்து அவளது அழகிய முகத்தில் தண்ணீரை தெளித்தான்.

கண்களை சுருக்கி விரித்து, அலங்க மலங்க விழித்தாள் வந்தனா.

முன், பின் பார்த்திராத. யாரோ ஒரு வாலிபன் தன் அருகே மண் டியிட்டு அமர்ந்து தண்ணீரை முகத்தில் தெளித்துவிட்டு. கவலையு டன் உற்று நோக்கியபடி இருப்பதை பார்த்ததும். அவளுக்கு தர்ம சங்கடமாகி விட்டது.

இன்னமும் மனதில் படபடப்பும் பயமும் அடங்கவில்லை. கீழு

***ஜப்பானில், பள்ளிக் கூடங்களில் இரண்டு கைகளாலும் எழுதிட பயிற்சி தருகிறார்கள்.***

**-பிரசன்னா, சென்னை.**

தட்டை அழுந்தக் கடித்து. எழுந்து அமர்ந்தாள்.

''மெதுவாக. இந்தாங்க... தண்ணியைக் குடிங்க.''

மறுப்பு தெரிவிக்காமல் அவன் நீட்டிய வாட்டர் பாட்டிலை வாங்கிக் குடித்தாள்.

கீழே விழாமல் தடுத்ததோடு. மயக்கமடைந்து போன தன்னை அவன் வாரித் தூக்கிக்கொண்டு வந்திருக்கிறான் என்பது புரிந்ததும். அவளது முகம் சங்கோஜத்தில் குங்குமப் பூவாய் சிவந்து விட்டது.

''தேங்க் யூ சார்...!''

ஈனஸ்வரத்தில் முணுமுணுத்தாள்.

''உங்க துணைக்கு யாரும் வரலையா? தனியா வர்ற லேடீசை. அதுவும் பேக்குல இவ்ளோ ஸ்நாக்சோட வர்றவங்களைக் கண்டா. இந்தக் குரங்குங்க இப்படித் தான் மேல விழுந்து பிடுங்கும்.''

அவன் அவளது ஹேண்ட் பேக்கை சுட்டிக் காட்டிப் பேசினான்.

அந்த ஹேண்ட் பேக்கில் ஜூஸ் பாட்டில் வெளியே நீட்டிக் கொண்டிருந்தது.

பிஸ்கெட் பாக்கெட்டுகள், பாப்கார்ன், பழங்கள் என்று உள்ளே திணிக்கப்பட்டு உப்பிக்கிடந்த ஹேண்ட் பேக்கை கண்டதும். வந்தனாவுக்கு வெட்கமாய் போய் விட்டது.

''இ... இது வந்து.. என் பிரண்ட் வாங்கி வச்சா. என் கூட எங்கப்பா, பிரண்ட் எல்லாரும் வந்திருக்காங்க.''

''அவங்க எங்கே காணோம்?''

''அவங்களுக்கு சுத்திப்பார்க்க இன்ட்ரஸ்ட் இல்லாததால. நான் இங்க வந்தேன். அவங்க ஸ்டோன் பெஞ்சுல உட்கார்ந்துட்டாங்க''

''ஓ... பேக்கை அவங்க கிட்டே குடுத்துட்டு வந்திருக்க

**''தலைவர் கிழக்கு திசையில தலை வெச்சுத் தூங்கமாட்டார்...''**

**''ஏன்...?''**

**''அந்த திசையில தானே அவரோட தொகுதி இருக்கு...!''**

**-ஜே. தனலட்சுமி,கோவை.**



லாமில்ல?''

இப்போ திரும்பப் போகும் போதும்... குரங்கு டிஸ்டர்ப் பண்ணி டுச்சுன்னா. என்ன பண்ணுவீங்க?'' அவன் அவளது பேக்கை ஒரு பார்வை பார்த்துவிட்டு லேசாய் சிரித்தபடி கேட்டான்.

'சே... இந்த ஹேண்ட் பேக்கை பார்த்தால். யாராயிருந்தாலும் என்னை தீனி பண்டாரம் என்று தான் நினைப்பார்கள்...

எல்லாம் அந்த குமுதாவால் வந்தது...!

மறுபடியும் குரங்கு மேல வந்து தாவப் பார்த்தால்...? ஐய்யயோ... இன்று ஏதோவொரு நல்ல நேரம்... இவரால் தப்பித்தேன்...

இல்லையென்றால்... என் கதி?'

அவளது முகத்தில் பீதி பரவியது.

''உங்களுக்கு இயற்கையை ரசிக்கிறதிலே அலாதி விருப்பம் போலிருக்கு. அதான் துணிஞ்சு தனியா வந்துட்டீங்க.

இந்த மாதிரி இடத்துக்கு உங்க மாதிரி அழகான பொண்ணுங்க தனியா வந்தா மிருகங்களாலும் பிரச்சனை வரும். மனுஷங்களா லேயும் பிரச்சனை வரும்.

ஒண்ணு தைரியமா பேஸ் பண்ணத் தயாரா இருக்கணும். இல் லைன்னா தனியா வராம. துணையோட வரணும். இந்தாங்க. இந்த மரக்கொம்பை கையில வச்சுக்கிட்டுப் போங்க.

பயந்தோம்னு தெரிஞ்சா. சின்ன நாய் கூட நம்மைத் துரத்த ஆரம் பிச்சிரும்.

மனோதிடத்தோட தைரியமா கையை ஓங்கினா.கடிக்க வர்ற நாய் கூட பயந்து பின் வாங்கிடும். இதை ஞாபகத்துல வச்சுக்கங்க. இந் தாங்க...''

மரக்கொம்பை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டபடி எழுந்து நின்றாள்.

''ரொ... ரொம்ப நன்றி சார்! நீங்க சொன்ன அட்வைசுக்கு நன்றி. அதே சமயத்துல என்னால உங்களுக்கு ஏற்பட்ட சிரமத்துக்கு சாரி ச ார்.!''

கைகளைக் கூப்பினாள் வந்தனா. அவள் பேசியபோது. அவன் அவளது விழிகளை ஊடுருவினான். நான்கு விழிகளும் கலந்த போது. வந்தனாவுக்குள் ஒரு தடுமாற்றம். இதயத்தில் புறா சிறகடித்

தது.

அதற்கு மேல் அவனது பார்வையை எதிர்கொள்ளத் தெம்பில்லாமல் விழிகளைத் தழைத்தாள்.

''இதுல என்ன சிரமம்? ஓ... உங்களைத் தூக்கிக்கிட்டு வந்ததைச் சொல்றீங்களா?

'நுரையால் செய்த சிலையா?' ன்னு கவிஞர் வருணிச்ச மாதிரி. வெயிட்டே இல்லையே? ன்னு அதிசயப்பட்டேன். உங்க இடத்துல பீப்பாய் மாதிரி ஒரு பாட்டி இருந்திருந்தாலும். நான் இப்படித்தான் நடந்திருப்பேன். சொல்லப்போனா ஒருத்தருக்கு ஒருத்தர் உதவி செய்யலைன்னா நம்ப பூமியில மனுஷனா பிறந்ததுக்கு அர்த்தமே இல்லாம போயிடுமேங்க.''

அவன் பேசிக் கொண்டிருந்தபோது சட்டைப் பையிலிருந்து செல் போன் செல்லமாய் சிணுங்கியது.

''ஹலோ... ஹலோ... சொல்லுடா... வருண் தான்டா பேசறேன்.''

சிக்னல் சரியாய் கிடைக்காமல் லைன் கட்டாகி விட்டது போலும்.! செல்லை அணைத்துவிட்டு. பாக்கெட்டில் போட்டுக் கொண்டான்.

''பை தி பை! உங்களுக்கு பயமா இருந்துச்சுன்னா சொல்லுங்க... கூட வந்து விட்டுட்டு வர்றேன்.''

''இல்ல சார்! நீங்க சொன்னாப்பல. தைரியத்தை வரவழைச்சுக்கிறேன்.''

''குட்.! படிக்கிற பொண்ணுக்கு. இதான் அழகு. என்ன படிச்சிட்டிருக்கீங்க?''

''நர்சிங் கோர்ஸ். இன்னும் மூணு மாசத்துல கோர்ஸ் முடிஞ்சுரும். நீங்க மட்டும் வராம இருந்திருந்தா இந்நேரத்துக்கு இந்த வந்தனாவோட கதை முடிஞ்சிருக்கும்''

''ஓ... பேரு வந்தனாவா? நைஸ் நேம்.! ஏன் இப்படிப் பேசறீங்க?''

''மேலேயிருந்து விழுந்திருந்தா கபாலம் பிளந்திருக்காதா?''

''அதுக்கு தானே விதி என்னை அனுப்பி வைச்சிருக்கு. கண்டதையும் நெனைச்சு மனசைக் குழப்பிக்கக் கூடாதுங்க. எதிர்காலத்துல ஒரு நர்சா சமுதாயத்துக்கு நீங்க எவ்வளவோ நன்மை செய்யணும்னு விதி இருக்கே? பாசிட்டிவ்வா திங்க் பண்ணுங்க. தைரியமா

இருங்க.''

''ஓ கே சார்! தேங்க் யூ... நீங்க பேசற விதம் மனசுக்கு தெம்பை அளிக்குது. எனக்கு எங்கம்மாவோட ஞாபகம் தான் வருது.''

''நீங்க அம்மாவை இழந்துட்டீங்கன்னு புரியுது. ஆத்மாவுக்கு என்னிக்கும் அழிவில்லைங்க. உங்கம்மா உங்க கூடத்தான் இருப்பாங்கன்னு நம்புங்க.''

''தேங்க் யூ சார்.!'' என்று தயக்கமாய் அவனை ஏறிட்டாள்.

''நீங்க ஒரு லெக்சரரா சார்?''

''ஏன் இப்படிக் கேட்கறீங்க? அட்வைஸ் மழையா பொழிஞ்சு ரொம்ப போரடிச்சுட்டேனா?''

''சேச்சே. அப்படியில்ல சார்!''

பதற்றமாய் பதில் அளித்தாள்.

''நானொரு ஆர்ட்டிஸ்ட்..!! ஓவியன்.'' அவனை வியப்புடன் விழிகள் விரியப் பார்த்தாள்.

''சொல்லிக்கும்படியான பெரிய ஆர்ட்டிஸ்ட் இல்ல. என் படைப்புகளை எங்கேயும் நான் அனுப்பினதும் இல்ல. என் ரசனைக்கும் ஆத்ம திருப்திக்கும் வரைவேன். அவ்வளவு தான்.!''

''ஓவியங்கிறது பெரிய கலையாச்சே சார்? 'கலைகளிலே அவள் ஓவியம்.!' அப்படின்னு கவிஞர் பாடியிருக்காரே? உங்களுக்கு வேணும்னா இது சாதாரணமா தோணலாம். ஆனா அது உன்னதமான கலை! அந்தக் கடவுள் உங்களுக்கு அந்த வரத்தைக் குடுத்திருக்காரு. அதனால நீங்க பெரிய கலைஞர் தான் சார்.! உங்க பேருதவிக்கு ரொம்ப நன்றி.!''

அவளுக்கு இன்னமும் நிறைய பேச வேண்டும் போலிருந்தது. அரை மனதோடு நடந்தாள். விதி அவளைப் பின் தொடர்ந்தது...

## 3

அவன் வரைந்த ஓவியங்களைப் பற்றியும் அவன் எப்படி இந்தக் கலையைக் கற்றான்? என்பது பற்றியும் கேட்க வேண்டும் என்ற ஆவல் உந்தியது.

**வாழ்க்கை அவரவர் வாழ்வதற்கு என்று மட்டும் கருதக் கூடாது. மற்றவர்கள் நலனுக்கும் என்று கருத வேண்டும்.**

**-தந்தை பெரியார், கே. கவிதா,வேலூர்.**

வந்தனாவிற்கு அதிகமாகப் பேசப் பிடிக்காது. வீட்டில் உள்ளவர்கள் அடுத்ததாய் குமுதா. இவர்களைத் தவிர மற்றவர்களிடம் ரத்னச் சுருக்கமாய் தான் பேசுவாள்.

'வந்தனாவா? அவ இருக்கிற இடமே தெரியாதே?' என்று தான் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் சொல்வார்கள். ஆனால் இன்று?

'முன் பின் தெரியாதவரிடம்... இப்படி சகஜமாய் பேசி விட்டேனே?

அதற்கு காரணம் அவரது கண்ணியம் தான்! சல்லித்தனமான பேச்சு கிடையாது. சல்லித்தனமான பார்வையும் கிடையாது.

நாகரீகமாய் நாசூக்காய் இதமாய் பேசுகிறார். பல காலம் நெருங்கிப் பழகியவரைப் போன்று ஒரு உணர்வு ஏற்பட்டதால் தான். அவரிடம் சகஜமாய் இயல்பாய் பேசி விட்டேன் போலும்.!

மூர்ச்சையாகி மயக்கத்தில் கிடக்கும் பெண். அதிலும் அழகான பெண். தோதாய் தனிமை.!

இப்பேர்ப்பட்ட சூழ்நிலை. வேறு யாருக்காவது வாய்த்திருந்தால்.?

என் கதி என்னவாகியிருக்கும்?

அவர் கண்ணியத்துடன் மனிதாபிமானத்துடன் இரக்க சுபாவத்துடன் இருப்பதைப் புரிந்து கொண்டு என்னுள் துணிவு துளிர்த்திருக்கிறது.

**''ஆபரேஷன்ல உங்க மாமியார் பிழைச்சது அவங்க செய்த அதிர்ஷ்டம்...''**

**''அப்படி இல்லங்க டாக்டர்... அதுநான் செய்த அதிர்ஷ்டம்...!''**

**-ஜே. தனலட்சுமி,கோவை.**



இயல்பாய் அவரிடம் உரையாடியிருக்கிறேன். இதை எல்லாம் தாண்டி வேறு ஒன்றும் இருக்கிறது. சிலரைப் பார்த்தவுடனே, சட்டென்று மனதிற்குப் பிடித்துப் போய் விடும். இவரைப் பார்த்த மாத்திரத்தில் எனக்குப் பிடித்து விட்டது. மனதிற்குப் பிடித்துப் போனது மட்டும் தானா? ஊகூம்...

என் மனது என்னிடம் இல்லையே? அவரிடம் மனதைப் பறி கொடுத்து விட்டேனே? ஒரே நாளிலேயே ஒருவரைப் பிடித்து விடுமா? 'கண்டதும் காதல்' என்று கதைகளிலும், இலக்கியங்களிலும் படித்து இருக்கிறேன். படித்துவிட்டு வியந்திருக்கிறேன். இப்படிக்கூட சாத்தியமா? என்று அதிசயப்பட்டு இருக்கிறேன். அது என் விஷயத்தில் சாத்தியப்பட்டு விட்டதே?

அவரது பெயர் வருணா? வருண்..! வருண்..!

அழகான பெயர் தான்.

ஆளும் ஆஜானுபாகுவாய் அம்சமாகத் தான் இருக்கிறார். பார்த்தால் பெரிய இடத்து வீட்டுப் பிள்ளை போல் தெரிகிறது.

ஆனால் அவரிடத்தில் பணக்காரர்களுக்கே உரிய பந்தாவோ கர்வமோ தென்படவில்லை. அவர் யார்? எந்த ஊர்? அவரது குடும்ப பின்னணி என்ன? என்று தெரியவில்லையே? அவரது பெயர் மட்டும் தான் தெரியும். அதைக்கூட அவர் சொல்லவில்லையே? போனில் பேசும்போது தற்செயலாக தெரிந்து கொண்டது தானே?

பெயரைத் தவிர எதுவும் தெரியாமலேயே எனது உள்ளத்தைப் பறி கொடுத்து விட்டேனே? இது எவ்வளவு பெரிய தவறு?

நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணிற்கு இது அழகல்ல என்று புரிகின்றது. ஆனாலும் இந்தப் பாழும் மனம் சட்டென்று அவரை விரும்பி விட்டதே?

காதல் சொல்லிக்கொண்டு வருவதில்லை. யாருடைய அனுமதிக்காகவும் அது காத்திருப்பதில்லை. என் இதயக் கதவுள் என் அனுமதியின்றி அனிச்சையாய் திறந்து அவரைக் குடி புகுத்திக் கொண்டதே?

இதை யாரிடமும் நான் வெளியில் சொல்ல முடியாதே? அம்மாவை இழந்தவள் நான். அம்மா இருந்திருந்தால் ஒளிவு மறைவின்றி அவளிடம் மனதில் உள்ளதைப் பகிர்ந்து கொள்ளலாம். எனக்கு அதற்கும் வாய்ப்பு இல்லை. எல்லாம் என் தலை எழுத்து.!

தன்னையே நொந்தபடி கையில் மரக்கொம்பையுடன் இறங்கிச் சென்றாள்.

அதற்கு மேல் அவளுக்கு சுற்றிப் பார்ப்பதற்கு மனம் இல்லை.

குமுதா அமர்ந்திருந்த சிமெண்ட் பெஞ்சை நோக்கி நடந்து சென்றாள்.

''என்னடி? போன சுருக்குல திரும்பி வந்துட்டே? அவ்ளோ இன்ட்ரஸ்ட்டோட போனே? முழுசா சுத்திப்பார்க்க மனசில்லையா?''

குமுதா கேள்விக் கணைகளைத் தொடுத்தாள்.

''ஆமாம்ண்டி. மனசில்ல.''

''ஏன்? திடீர்னு என்னாச்சு? மனசில்லைங்கிறே?'' ''ஏன்னா என் மனசு என்கிட்டே இல்ல.'' தொண்டை வரை ஓடி வந்த வார்த்தைகளை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

''கேட்டுட்டு இருக்கேனில்ல? ஆசையா போனே. உடனே என்னத்துக்கு திரும்பிட்டே?''

''சே! எனக்குத் தனியா சுத்திப்பார்க்க எப்படியோ இருந்துச்சு.''

''உன் ஆசையைக் கெடுப்பானேன்? நானும் வரேன். திருப்தியா சுத்திப் பார்த்துரு.''

''ஊகூம்... வேணாம்!''

''வருணைப் பார்த்ததுக்கு அப்புறம். எனக்கு வேற எதுவும் பெரிசாப் படலை.''

தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

''நான் அப்பவே கூட வந்திருக்கணும். தப்பு பண்ணிட்டேன். இப்ப உனக்கு மூட் அவுட் ஆனதுமில்லாமல் எதையோ பறி கொடுத்தாப்பல இருக்கே''

''எதையோ இல்ல. மனசைப் பறி கொடுத்துட்டேன்.'' வந்தனாவின் உள்மனம் சோகமாய் புலம்பியது.

''ஆமா.. கையில மரக்கொம்போட வந்திருக்கே? குரங்கை விரட்டறதுக்கு எடுத்துட்டு வந்தியாக்கும்.?''

''போடி. இவ்ளோ ஸ்நாக்சை என் பேக்குல திணிச்சு வச்சு, என்னைக் கேவலப்படுத்திட்டியேடி?''

''கேவலமா? யாராவது உன்னை கேலி பண்ணிட்டாங்களா? உன்னைத் தனியா விட்டது தப்பாப் போச்சே?''

''என் காதலி அன்னப் பறவை மாதிரி இருப்பாள்...''

''பார்த்துடா... பர்ஸை விட்டுட்டு பணத்தை மட்டும் உருவிடப் போறாள்...!''

**-ஜே. தனலட்சுமி,கோவை.**



''தனியா இந்த பேக்கோட போனது தப்பாய் தான் போச்சு?''

''அப்படி என்னடி நடந்துச்சு? மரக்கொம்பை கீழே தூக்கிப்போடேன். நான் இருக்கையில எந்தக் குரங்கு உன் கிட்டே வரும்?''

அதற்கு பதிலேதும் சொல்லாமல் அந்த மரக்கொம்பை ஊன்றிப் பார்த்தாள் வந்தனா.

வருண் ஒடித்துத் தந்த மரக் கொம்பை அவளுக்கு வீசி எறிய மனமில்லை.

சிறிய பொருளாக இருந்திருந்தால் அதை அவனது ஞாபகார்த்தமாக பத்திரப் படுத்தியிருக்கலாம்.

இந்த பெரிய மரக்கொம்பை தூக்கிப் போடாமல் இருந்தால் குமுதா மட்டுமல்ல அப்பாவும் கேள்வி கேட்பாரே?

எதற்கு வம்பு?

மரக்கொம்பை ஓரமாய் தூக்கிப் போட்டுவிட்டு நடந்தாள்.

அப்பா நடேசனும், குமுதாவின் அப்பா குருமூர்த்தியும் அமர்ந்திருந்த இடத்தருகே வந்தார்கள்.

''என்னம்மா சுத்திப் பார்த்தாச்சா?''

''உம்... பார்த்தாச்சு அப்பா''

''ஏம்மா ஒரு மாதிரியா இருக்கே?''

***ஊக்கமும், செயலும் ஒன்றாகவே பயணம் செய்கின்றன. மன ஊக்கமே உணர்வாகி செயலாக வெளிப்படுகிறது.***

**-வில்லியம்ஸ், கே. கவிதா,வேலூர்.**

''ஒண்ணுமில்லைப்பா. கால் தடுக்குது... அதான்'' திணறலாய் பதிலளித்தாள் வந்தனா.

''அப்படீன்னா கொஞ்ச நேரம் உட்காருங்க. ஜூஸ் குடிச்சுட்டு பிஸ்கட் எதுனாச்சும் சாப்பிடுங்க. மணி நாலே முக்கால் ஆகுது. அஞ்சு மணிக்கு இங்கிருந்து கிளம்பினா திருமலை வையாவூர் கோவில் நடை திறந்திருப்பாங்க.''

''சரிப்பா'' என்றபடி அமர்ந்தாள் வந்தனா. வந்தனா பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோதே.. அவளது அம்மா ருக்மணி இறந்து விட்டிருந்தாள். திருப்போரூரில் மளிகைக் கடை நடத்தி வந்தார் நடேசன். இறப்பதற்கு ஓரிரு வருடங்களுக்கு முன்பிருந்தே.. ருக்மணி 'என்னங்க திருமலை வையாவூர் பெருமாள் கோவில் பத்தி ஒரு புக்குல போட்டிருந்தாங்க. ஒருநாளைக்குப் போயிட்டு வரணும்னு ஆசையா இருக்கு.' என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தாள். குமுதாவின் அப்பாவுக்கு பேங்கில் அக்கவுண்டன்ட் வேலை. டிரான்ஸ்பர் அடிக்கடி நிகழும்.

குமுதா பிளஸ் ஒன் படிக்கும்போது தான் திருப்போரூருக்கு அவர்களது குடும்பம் குடி வந்தது. திருப்போரூரில் குருமூர்த்திக்கு பேங்கில் வேலை. நடேசன் வீட்டிற்கு நான்கு வீடுகள் தள்ளி ஒரு வாடகை வீட்டில் குடி வந்தனர். ஒரே பள்ளி ஒரே வகுப்பு என்பதால்... அன்றிலிருந்து வந்தனாவும், குமுதாவும் நெருக்கமான தோழிகளாகி விட்டனர்.

குமுதாவின் அம்மா தாயம்மாவை பார்க்கும்போது, மறைந்து போன ருக்மணியின் ஞாபகம் தான் வந்தனாவுக்கு வரும்.

நடேசனுக்கு ருக்மணி இரண்டாம் தாரம். அவரது மறைந்த மூத்த தாரத்திற்கு பிறந்த மகன் மகா முரடன். பத்து வருடங்களுக்கு முன்பே ஊர் பெரியவர்களைக் கூட்டி பஞ்சாயத்து வைத்து அவரது வீட்டை தனது பெயருக்கு எழுதி வாங்கிக் கொண்டான். நடேசனின் காலத்திற்கு பின்பு அந்த வீடு அவனுக்குச் சொந்தமாகி விடும்.

பல சரக்கு கடை வருமானத்தை வைத்து குடும்பத்தை கட்டும் செட்டுமாக நடத்தியதோடு குருவி சேர்ப்பது போல் மகள் வந்தனாவுக்காக இருபது பவுன் நகை சேர்த்து வைத்திருந்தனர் நடேசன் - ருக்மணி தம்பதியினர்.

''வந்தனாவை நல்லா படிக்க வைக்கணும். நல்ல இடத்துல அவளை பிடிச்சு குடுத்திடணும்ங்க. நம்ம காலத்துக்குப் பிறகு வந்தனாவுக்கு எந்த நாதியும் இல்லைங்க.'' என்று புலம்பிக் கொண்டிருப்பாள் ருக்மணி.

அவள் இறந்து போய் ஐந்து வருடங்களாக போகிறது.

''அம்மாடி! திருமலை வையாவூர் கோவிலுக்குப் போகணும்னு உங்கம்மா ரொம்பவே பிரியப்பட்டா. உனக்கும் இந்த வருஷம் படிப்பு முடியப் போகுது. அந்தக் கோவிலுக்கு நாளைக்குப் போயிட்டு வருவோமா?'' என்று நேற்று கேட்டார் நடேசன்.

''சரிப்பா போய் வரலாம். திருமலை வையாவூருக்குப் பக்கத்துல தான் வேடந்தாங்கல் சரணாலயம் இருக்குதாம். எனக்கும் சரணாலயத்தைப் பார்க்கணும்னு ரொம்ப நாளா ஆசைப்பா.''

''தாராளமா பார்த்துட்டு வருவோம். உன் தோழி குமுதாவோட வீட்டுலேயும் சொல்லு. அவங்களும் கூட வந்தா சேர்ந்து போயிட்டு வரலாம்.''

ஓடிப்போய் விஷயத்தை சொல்லிவிட்டு வந்தாள் வந்தனா.

''என் தங்கச்சிக்கு பல் வலி. அதனால அவளும் எங்கம்மாவும் வரலையாம். அப்பா வரேன்னு சொல்லிட்டாரு. நாம போகலாம்டி!''

சந்தோஷமாய் வந்து கூறினாள் குமுதா.

முதலில் சரணாலயத்தை பகலில் சுற்றிப் பார்த்துவிட்டு சாயந்தரம் கோவில் நடை திறந்ததும் தரிசனம் செய்துவிட்டு வரலாம் என்று ஏற்பாடானது.

'அம்மா! நீ அந்தக் கோவிலுக்கு போகணும்னு ஏங்கித் தவிச்சியே? நாளைக்கு நாங்க அங்க போகப் போறோம் அம்மா!'

நேற்று இரவில் அம்மாவிடம் மானசீகமாய் பேசிக் கொண்டாள்.

கட்டுக்கடங்காத ஆவல் அவள் மனதில்...! என்னவோ அந்தக் கோவிலில் அம்மாவையே நேரில் தரிசிக்கப் போவது போல் அப்படியொரு பரபரப்பு...! ஆனால் வருணைப் பார்த்துவிட்டு வந்த பின்பு அந்த ஆவல் மாயமாய் மறைந்து விட்டிருந்தது.

'ஊர் தெரியாது அவரது பின்னணி எதுவும் தெரியாது. அப்படியிருக்கும் போது மனதைப் பறி கொடுத்து விட்டேனே அம்மா!'

குற்ற உணர்வு உள்ள புழுவாய் அவளைக் குடைந்தது.

4

டவுன் பஸ் அந்த மலையின் மீது வளைந்து வளைந்து மேலே ஏறியது.

கிட்டத்தட்ட திருப்பதி மலையைப் போன்றே இருந்தது. மூலஸ்தானத்தில் இருந்த பெருமாளும், திருப்பதி ஏழு மலை யானைப் போன்றே காட்சியளித்தார்.

அன்று மாத ஏகாதசியாதலால் சுற்று வட்டார கிராமங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் வந்திருந்தனர்.

வரிசையில் திரளாய் பக்தர்கள்...! அப்பாவுக்கு பின்னால் நின்றிருந்த வந்தனா, ''அப்பா! ரெண்டு அர்ச்சனை டிக்கெட் வாங்கிட்டேன். கோபி அண்ணாவுக்கும் சேர்த்து...'' என்றாள்.

''ஹூம்! உனக்கு உங்கம்மா மாதிரியே தங்கமான குணம்! பெத்த புள்ளை மாதிரி உங்கம்மா அவனைத் தூக்கி வளர்த்தா... வளர்த்த பாசத்தை அவன் மதிக்கல. பொண்டாட்டி வந்ததும் எல்லாரையும் தூக்கி எறிஞ்சுட்டான். தன் சம்சாரம் குழந்தை குட்டிங்கன்னு சுயநலமா இருக்கான். உன்னை ஒரு நாளாச்சும் நெனச்சுப் பார்த்தானா? நீ என்னடான்னா அண்ணா அண்ணான்னு உருகறே? உன்னோட நல்ல குணத்துக்கு கடவுள் ஒரு குறையும் வைக்க மாட்டாரும்மா''

நெகிழ்ந்து போய் பேசினார் நடேசன்.

**''குற்றவாளி கூண்டை அலங்கரிச்சிருக்காங்களே...ஏன்?''**

**''இத்தோடு நூறாவது முறையா தலைவர் அதுல ஏறி நிக்கறாராம்...''**

**-பர்வீன் யூனுஸ், சென்னை.**



''தப்பித்தவறி எனக்கு ஏதாச்சும் ஆயிருச்சுன்னா... தங்கச்சி யாச்சே? ன்னு அவன் உன்னை ஆதரிக்கப் போறானா? நிச்சயமா திரும்பிக் கூடப் பார்க்க மாட்டான்.''

''கோவில்லே வந்து நின்னு ஏம்பா அபசகுனமா பேசறீங்க? ஏன்ப்பா க்யூ நகர மாட்டேங்குது? ஏன் இப்படி நிக்க வச்சிருக் காங்க?''

வேண்டுமென்றே பேச்சை மாற்றினாள் வந்தனா.

''சிறப்பு பூஜை நடந்துட்டு இருக்கும்மா. யாரோ ஒரு வி.ஐ.பி. இன்னிக்கு கோவிலுக்கு நிறைய உபயம் குடுத்திருக்காங்க... போலி ருக்கு...

அவங்க சாமி கும்பிட்டுட்டு போனதுக்கு அப்புறம் இந்த கியூ நகர ஆரம்பிக்கும்'' என்றார் குருமூர்த்தி.

''ஓ. அப்படியா? இங்கிருந்தே பெருமாளை சேவிக்க முடியுதே?'' மெல்ல முணு முணுத்தாள் வந்தனா.

மூலவரைப் பார்த்ததும் அழுகை அடைத்துக்கொண்டு வந்தது. சில கணங்களில் பூஜை முடிந்து அந்த உபயதாரர் குடும்பம் பக்க வாட்டு கதவின் வழியே வெளியேறியதும் இந்தக் கியூ நகர்ந்தது.

சுவாமியை இமை கொட்டாமல் கண் மல்கப் பார்த்தபடி மனம் உருக வேண்டி நின்றாள் வந்தனா.

'ஐயனே! தெரிந்தோ தெரியாமலோ வருணிடம் மனதைப் பறி கொடுத்து விட்டேன். இந்த ஒருதலைக்காதல் சாத்தியப்படாது என் பது புரிகிறது.

அவரை மறக்கக் கூடிய சக்தியைத் தாரும். ஐயனே! இனி என் வாழ்நாளில் கல்யாணம் என்ற பேச்சுக்கே இடமில்லை. படித்து விட்டு பிராக்டீஸ் முடித்து ஒரு நர்சாய் சமுதாயத்திற்கு சேவை செய்து கொண்டு என் வாழ்க்கையை ஓட்டிவிட வேண்டியது தான்.'

தீர்த்தம், துளசிப் பிரசாதம் பெற்றுக்கொண்டு அனைவரும் வெளி

***மனிதன் மனம் எதை உறுதியாக நம்புகிறதோ, அது உறுதியாக அமைகிறது.***

**-வீராவோ, கே. கவிதா,வேலூர்.**



யில் வந்தனர்.

''நல்ல தரிசனம் மனசுக்கு நிறைவா இருக்கு.'' என்றார் நடேசன்.

''தாயார் சன்னதியிலேயும் பெரிய கியூ நிக்குதே? வரிசையில நின்னு தரிசனம் பண்ணி முடிக்க ரொம்ப நேரமாயிடுமே?'' என்றார் குருமூர்த்தி.

''அதானே? அடுத்து வர்ற பஸ்சை பிடிச்சுத் தானே ராத்திரிக்கு வீடு போய் சேர முடியும்.'' கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டார் நடேசன்.

''இதோ இந்த நுழைவாசல் கிட்டத்துல நின்னாலே தாயார் சன்னதியைப் பார்க்க முடியுதே?'' பேசியபடி தாயாரை சேவித்துக் கொண்டாள்.

மற்றவர்கள் முன்னால் நடக்க அரை மனதுடன் திரும்பித் திரும்பி தாயாரைப் பார்த்தபடி நடந்தாள் வந்தனா.

இடது புறத்திலிருந்த தேவஸ்தான அறைக்குள்ளிலிருந்து அவர்கள் வந்ததை இவள் கவனிக்கவே இல்லை.

''கொஞ்சம் நில்லும்மா...''

அவள் குரல் வந்த திசையில் ஏறிட்டாள்.

தலைமை குருக்கள் நின்றிருந்தார்.

''இந்தக் கோவிலோட உபயதாரருக்காக சிறப்பு பூஜை நடத்தினோம்.''

'இதை ஏன் என்னிடம் சொல்ல வருகிறார்?'

யோசனையுடன் தலைமை குருக்களின் முதுகுக்குப் பின்னே பார்த்தாள்.

அவளுக்கு திக்கென்றிருந்தது.

## 5

வருண் நின்று கொண்டிருந்தான். அவனது வயதை ஒத்த ஒரு இளைஞனும், ஒரு வயதான கணக்குப் பிள்ளையும் கூட இருந்தார்கள்.

தனது கண்களையே அவளால் நம்ப முடியவில்லை.

'இது வருண் தானா?

சதா வருணின் ஞாபகமாய் இருப்பதால் என் கண்களுக்கு அவரைப் போல் தெரிகிறதா?'

குழப்பமாய் குருக்களை ஏறிட்டாள்.

''இதோ இந்த வருண் தம்பிக்கு இன்னிக்குப் பிறந்தநாள். இவர் சேமமா இருக்கணும்ன்னு பூஜை பண்ணினோம். அத்தோட இன்னொரு விஷயம்! இன்னிக்கு இவங்க அம்மாவோட நினைவு நாளும் கூட... வருஷா வருஷம் அந்த சுமங்கலியோட நினைவு நாளன்னிக்கு ஒரு கன்னிப்பொண்ணுக்கு பட்டுப்புடவையும், தாயாருக்கு சிறப்பு அர்ச்சனை பண்ணி பிரசாதம், வளையம், குங்குமம், ரவிக்கைத்துணி, புஷ்பம் வெள்ளிக்காசு எல்லாம் தர்றது வழக்கம். இன்னிக்கு நீ எங்க கண்ணுல பட்டே. வாங்கிக்கோம்மா.'' என்றார்.

வந்தனா திகைத்துப் போய் விழித்தாள்.

''அந்த சகுந்தலா அம்மா பெரிய புண்ணியவாதி! இதை வாங்கிக்கிட்டா அந்தம்மாவோட ஆசீர்வாதம் கிடைச்ச மாதிரி. அவங்க ஆசியால உனக்கொரு நல்ல வாழ்க்கை அமையும். தயங்காதேம்மா. இதை வாங்கிக்கிறவாளுக்கும் விசேஷம். தர்றவங்களுக்கும் விசேஷம் தான்.

குடுப்பினை இருந்தாத் தான் இது கிடைக்கும். அந்தம்மா இறந்த நாழிகையில் இந்த தாயார் சன்னதி வாசலுக்கு நேரே யாரு வந்து சேவிக்கிறாங்களோ? அவாளுக்கு இதைத் தரணும்னு சங்கல்பம் பண்ணியிருக்கா. கிட்டத்தட்ட அஞ்சு வருஷமா தந்துட்டு வர்றா. இந்த வருஷம் உனக்கு அந்த பாக்கியம் கிடைச்சிருக்கு.''

தலைமை குருக்கள் ஆர்வமாய் அவளிடம் பேசினார்.

***''நான் தூங்கும் போது குறட்டை பயங்கரமா விடறேன்.. டாக்டர்..''***

***''உங்க மனைவிக்கு தொந்தரவா இருக்குமே..''***

***''அவளுக்கு கஷ்டமில்லே டாக்டர்.. ஆபிஸ்ல கூடவேலை செய்யறவங்க தான் கஷ்டப் படறாங்க..''***

**-பர்வீன் யூனுஸ், சென்னை.**



வந்தனாவுக்கு சிறு வயதிலிருந்தே புடவை, நகைகள் என்று எதி லேயும் பிடித்தம் இருந்ததில்லை. பூ வைக்கக்கூட அவள் ஆசைப் பட்டதில்லை. பூக்களை செடியிலேயே வைத்து அழகு பார்க்க விரும்புபவள் மலர்களை பறித்து மாலையாகத் தொடுத்து சுவாமி படங்களுக்கு சாற்றிவிட்டு கோவிலுக்கும் பூமாலையை எடுத்துக் கொண்டு போவாளே தவிர தன்னை அலங்கரித்துக் கொள்ள அவள் என்றுமே விருப்பப்பட்டதே இல்லை. அடுத்தவர்கள் பொருளுக்கு ஆசைப்படுவதும் ஓசியில் கிடைக்கும் பொருளுக்காக ஆலாய் பறப் பதும் வந்தனாவிற்கு பிடிக்காத சங்கதிகள்

இதுவரை யாரிடமும் கை நீட்டி எதையும் பெற்றுக் கொண்ட தில்லை. அதை வாங்கிக் கொள்ள அவளது தன்மானம் தடுத்தது.

''மன்னிக்கணும் ஐயா! இதை வேற யாருக்காவது குடுங்களேன்.. பிளீஸ்.''

குருக்கள் வாடிப்போன முகத்துடன் வருணைத் திரும்பிப் பார்த் தார்.

''வந்தனா! நீங்க இதை வாங்கிக்கிட்டா நான் ரொம்பவே சந்தோ ஷப்படுவேன். பிளீஸ் மறுத்துடாதீங்க''

'வந்தனா' என்று அவளது பெயரை சொல்லி வருண் பேசியதும் மேற்கொண்டு பேச அவளால் முடியவில்லை.

அவளது உயிரைக் காப்பாற்றியவன் ஆயிற்றே? இதயத்தில் இடம் பிடித்த இளவரசன் அல்லவா? மந்திரத்திற்கு கட்டுண்டாற் போல் கைகளை நீட்டினாள் வந்தனா.

''உங்க கையாலேயே குடுத்திடுங்கோ.''

குருக்கள் மகிழ்ச்சியுடன் உத்தரவிட்டார்.

குருக்களிடமிருந்து தாம்பாளத்தை வாங்கியபடி, அவளை பார்த்து முறுவலித்தான் வருண்.

''நீங்க இங்க வருவீங்கன்னு நான் எதிர்பார்க்கவே இல்ல வந்தனா! என் வார்த்தைக்கு மதிப்பு தந்து நீங்க இதை வாங்கிக்கிடறதுக்கு நான் ரொம்ப சந்தோஷப்படறேன். ஆல் தி பெஸ்ட்! உங்களுக்கு உங்கம் மாவோட ஆசி மட்டுமில்ல. எங்கம்மாவோட ஆசியும் சேர்த்து கிட் டட்டும்.''

மன நிறைவுடன் பேசியபடி நீட்டினான் வருண்.

''தேங்க் யூ சார்! இதுல இருக்கிற திங்க்சை விட பெரியவங்களோட ஆசீர்வாதம் தான் எனக்கு ரொம்ப பெரிசு.'' நெகிழ்வாய் பேசினாள்.

தாம்பாளத்தை அவனிடமிருந்து வாங்கிக் கொண்ட போது அவளுக்கும் மனதிற்குள் திருப்தி ஜனித்தது.

''தேங்க்ஸ் வந்தனா.!''

''நான் தான் சார் உங்களுக்கு தேங்க் பண்ணணும்''

''ஏற்கனவே உங்களுக்கு தெரிஞ்ச பொண்ணு தானா இது? பேஷ்! சேமமா இருங்கோ.!''

குருக்கள் வாழ்த்தினார்.

''சார்! மெனி மெனி ஹேப்பி ரிடர்ன்ஸ் ஆப் த டே சார்! நீங்க ஒரு குறையும் இல்லாம நூறு ஆயுசுக்கு நல்லாயிருக்கணும்ன்னு பகவான் கிட்டே நான் வேண்டிக்கிறேன் சார்!''

இதைக் கேட்டதும் வருணின் முகம் சட்டென்று இருண்டது.

''உங்க வாழ்த்துக்கு நன்றி! ஆனா உங்க வேண்டுதல் பலிக்கப் போறதில்ல.''

''எ... எதுக்கு சார். இப்படி பேசறீங்க?''

''அல்ப ஆயுசுக்காரனைப் பார்த்து நூறு ஆயுசுக்கு நல்லாயிருக்கணும்னு வேண்டினா. அந்தப் பிரார்த்தனை எப்படி பலிக்கும்?''

வருணின் அருகில் நின்றிருந்த நண்பன் பார்த்திபன் சட்டென்று அவனது புஜத்தில் கை வைத்தான்.

மறுகணம் தன்னிலை மீண்ட வருண், ''சும்மா! தமாசுக்கு பேசினேன்.'' என்று புன்னகைத்தான்.

'அல்ப ஆயுசு' என்ற வார்த்தையைக் கேட்டதும், வந்தனாவுக்கு இதயத்தில் இடி இறங்கினாற் போலிருந்தது. அதிர்ந்து போய் கண்கள் கலங்க முற்பட்ட போது அவன் தமாசுக்கு பேசியதாய் சொன்னதும், ''இப்படியா சார் பேசுவாங்க?'' அவளையும் அறியாமல் மெல்லிய குரலில் முணுகினாள்.

**கற்றவனுக்கும், கல்லாதவனுக்கும் இடையே, உயிர் உள்ளவற்றிற்கும், இல்லாதவற்றிற்கும் உள்ள வித்தியாசம் உண்டு.**

**-அரிஸ்டாட்டில், கே. கவிதா,வேலூர்.**

''இட்ஸ் ஓ.கே.! பாவம் இவங்க எப்படி தாம்பாளத்தோட எடுத்துட்டுப் போவாங்க?''

வருண் குருக்களைப் பார்த்துக் கேட்டான்.

''இதோ பையைத் தரேன். அதுலே போட்டுக்கட்டும். டேய் அம்பி! அந்த கட்டைப் பிடி பேக்கை எடுத்துட்டு வா.!''

தேவஸ்தான அறையை நோக்கி குரல் கொடுத்தார். பை வந்ததும், அவரே அத்தனைப் பொருட்களையும் உள்ளே வைத்து தந்தார்.

''நன்றிங்க ஐயா! ரொம்ப நன்றி சார்!'' கைகளைக் கூப்பி விட்டு பையுடன் நடந்தபோது, அவனை திரும்பி பார்த்தாள்.

வருணும் இவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

நான்கு விழிகளும் நேசமாய் கலந்தன.

மீண்டும் வருணை நான் சந்திப்பேனா?

அல்லது வாழ்நாள் முழுவதும் திரும்பவும் அவரை பார்க்கவே முடியாமல் போய் விடுமா?

அவளுக்கு விழிகளில் நீர் கோர்த்து அவள் வேகமாய் உடலை விட்டு உயிர் பிரிந்து செல்வதை போன்று...அப்படியொரு வேதனை!..

வருணின் விழிகளில் பரிதாபமா? சோகமா? என்று தெரியவில்லை.

ஆனால்....அந்த விழிகளில் இனம் புரியாத வேதனை இருந்தது மட்டும் நிஜம்.

வருண்! வருண்!....நான் உங்களைப் பார்க்கவே மாட்டேனா?

நான் உங்களை மனசார நேசிக்கிறேன் வருண்.

இதை நான் யாரிடமும் சொல்ல முடியாது.

ஏன்..உங்க கிட்டே கூட சொல்ல முடியாதே?

படிக்கிற பொண்ணுக்கு

**''கிளின்க்ல அட்மிட் ஆன தலைவருக்கு இசட் பிரிவு பாது காப்பு ஏன்?''**

**''டாக்டர் அவருக்கு ஆபரேஷன் பண்ணிடாம பாத் துக்கத் தான்''**

**-பர்வீன் யூனுஸ், சென்னை.**



காதலா?ன்னு...நீங்களே என்னைக் கடிஞ்சு பேசுவீங்க...

ஐ லவ் யூ வருண்!

இந்த ஜென்மம் உள்ள வரைக்கும்...உங்களை நான் மனப்பூர்வமா நேசிச்சுட்டே இருப்பேன்.

எங்கிருந்தாலும் நீங்க நல்லா இருக்கணும் வருண்!

பெரிய பணக்கார வீட்டு மாப்பிள்ளையா இருந்தாலும்...துளி கூட கர்வமில்லாம பேசறீங்க...தான தர்மம் பண்றீங்க....

இதே மாதிரி கடைசி வரைக்கும் இருக்கணும்.

தனக்குள் பேசியபடியே கொடிமரத்தைத் தாண்டி கோவிலின் நுழைவாயிலுக்கு அருகில் வந்தாள்.

''வந்தனா! எங்கடி போயிட்டே? இவ்ளோ நேரமா எங்க இருந்த நீ?'' கேட்டபடி வந்தாள் குமுதா.

''ஆமா...என்ன பேக் இது?'' அருகில் வந்து கேட்டார் நடேசன்.

''தாயார் சன்னதியில....அம்பாளுக்கு படைச்ச பொருட்கள்...யாருக்கோ வேண்டுதலாம்? என்னைக் கூப்பிட்டு தானமாய் தந்தாங்க...மங்கலப்பொருட்களா இருந்ததால...''

தயங்கி நிறுத்தினாள் வந்தனா.

''புரியுது...மறுக்காம வாங்கிக்கிட்டே தாயார் சன்னதிக்குள்ளே போக முடியலையே?ன்னு வருத்தம் உனக்கு...

அரை மனசா வந்தே...! பார்த்தியா? அம்பாளுக்கு சாத்தி விசேஷமா பூஜை பண்ணினது உன் கைக்கு கிடைச்சிருக்கு.''

''வாஸ்தவம் தான் அப்பா! இது பெரிய பாக்கியம் தான்...''

வருணின் கையினால் தந்ததாயிற்றே?

குங்குமம், மஞ்சள், பட்டுப்புடவை, ரவிக்கை, வெள்ளிக்காசு, பிரசாதம், தட்சணைப் பணம் என்று அனைத்தையும் அவன் கரத்தால் கொடுத்ததாயிற்றே?

இதற்கு நான் கொடுத்து தானே வைத்திருக்க வேண்டும்?

பெருமிதப்பட்டுக் கொண்டாள்.

''வந்தனா! இந்தா..பொங்கல்....! அப்பப்பா என்ன ருசி? நெய்யை தாராளமா விட்டு டேஸ்ட்டா பண்ணியிருக்காங்க...

யாரோ பணக்காரங்க...இன்னிக்கு உபயம் அளிச்சிருக்காங்க போலிருக்கு. முந்திரிப்பருப்பும், கிசுமிசும் சாப்பிட்டுப்பாரேன்''

**கங்கையின் தண்ணீருக்கு புதியசக்தி இருக்குமானால், காசியில் ஏன் பாவிகள் தோன்றப் போகிறார்கள்.**

**-கவியரசு கண்ணதாசன், கே. கவிதா,வேலூர்.**

தொன்னையை நீட்டினாள் குமுதா.

''என் வருணுக்கு இன்னிக்கு பிறந்தநாள். அவர் தான் இன்னிக்கு உபயதாரர்!'' என்று சொல்ல வேண்டும் போல் இருந்தது.

மறுக்காமல் கொஞ்சம் பொங்கலை எடுத்து உண்டாள்.

''இந்த சர்க்கரைப்பொங்கல் மாதிரியே வருணோட வாழ்க்கை இனிப்பாய் அமையணும்...''

மனதில் வாழ்த்திக் கொண்டாள்.

கோவிலை விட்டு வெளியில் வந்தனர். இருட்டி விட்டிருந்தது. மலைக்காற்று அள்ளிக்கொண்டு போனது.

''மேலிருந்து பார்த்தால்...சுற்றுவட்டாரமே தெரியுதே! மினுக் மினுக்குன்னு லைட் வெளிச்சம் பார்க்கிறதுக்கு ரம்யமா இருக் குல்ல?''

அப்பாவின் அருகே வந்து நின்று பேசினாள் வந்தனா.

''ஆமா வந்தனா..! மனசுக்கு நிறைவா இருக்கு. தாயார் சன்னதியி லிருந்து மங்கலப்பொருட்கள் உனக்கு கிடைச்சிருக்கே?

உனக்கொரு நல்ல வாழ்க்கை கூடிய சீக்கிரத்தில கூடி வரப்போகு துன்னு எனக்கு தோணுதும்மா...''

என்றார் நடேசன்.

நல்ல வேளையாய்....பஸ்ஸும் சீக்கிரமாய் வந்து விட்டிருந்தது.

அவசரமாய் ஏறிக்கொண்டனர்.

ஜன்னலோரமாய் அமர்ந்தாள் வந்தனா.

கோவிலின் பக்கவாட்டிலிருந்தே படகுக்காரில் ...வருணும், அவ னது நண்பனும், கணக்குப்பிள்ளையும் ஏறிப்போனார்கள்.

அந்தக்காரின் பின்னால் தான் பஸ் புறப்பட்டது.

'பகவானே! வருணை நான் மறக்க வேண்டும் என்று நினைத்தேன். அவரை உனது சன்னிதானத்திலேயே மீண்டும் சந்திக்க வைத்து... அவரது கரங்களால் இத்தனை மங்கலப் பொருட்களை வாங்க வைத்

தாயே? இதற்கு என்ன அர்த்தம்?'

வந்தனாவிற்கு ஒரு பக்கம் மகிழ்ச்சியாக இருந்தது. இன்னொரு பக்கம் வருத்தமாகவும் இருந்தது.

# 6

**வ**ருணின் மனக்கண்ணில் வந்து வந்து போனாள் வந்தனா.

பிரபல தொழிலதிபர் சிவசங்கரின் ஏகபோக வாரிசு அவன்.

சொல்லப்போனால்....சிவசங்கரின் இரண்டாவது மகன் தான் வருண்.

மூத்த மகன் அருண் கார் விபத்தில் அகாலமாய் மாண்டு போனான்.

கூடவே அவனது இளம் மனைவியும் போய்விட்டிருந்தாள்.

திருமணமாகி ஆறே மாதத்திற்குள்..இருவரும் இந்த உலகத்தை விட்டே சென்று விட்டிருந்தனர்.

அந்த துக்கம் தாளாமல் தான் வருணின் அம்மா சந்திரா மாரடைப் பால் காலமாகிவிட்டாள்.

அடிக்கு மேல் பலத்த அடி...! நொந்து நூலாகி விட்டார் சிவ சங்கர். இருப்பது வருண் மட்டும் தான்.

கோடிக்கணக்கான சொத்துக்களை அவன்தான் கட்டி ஆள வேண்டும். அவன் மூலமாய் வம்சம் தழைக்க வேண்டும். நல்ல பொண்ணாய் பார்த்து அவனுக்கு கட்டி வைக்க வேண்டும்.

அவனுக்கு ரசனை உணர்வு அதிகம்..!

அவனது விருப்பு வெறுப்புகளுக்கு மதிப்பு தந்து அவன் மனப்பூர் வமாய் சம்மதித்த பின்..திருமணத்திற்கு ஏற்பாடு செய்யலாம் என்று தீர்மானித்திருந்தார் சிவசங்கர். மகனை அழைத்து கேட்டும் பார்த் தார்.

''அப்பா! எனக்கு வயசு இருபத்தொண்ணு தான் ஆகுதுப்பா... கல்யாணம் பண்ணிக்க என் மனசும் தயாராயில்லை....அதுக்கான

வயசும் எனக்கு இல்லை''

திட்டவட்டமாய் மறுத்து விட்டிருந்தான்.

அவனது விருப்பப்படியே விட்டுப்பிடிக்கலாம் என்று இருந்து விட்டார் சிவசங்கர்.

ஐந்தாண்டுகள் கடந்தன.

மறுபடியும் மகனை உட்கார வைத்துப் பேசினார்.

''அப்பா! எனக்கு வயசு இருபத்தாறு ஆகுது. ஒத்துக்கிறேன். என் மனசுக்கு பிடிச்ச பொண்ணை என்னிக்குப் பார்க்கிறேனோ... அப்போ உங்க கிட்ட வந்து சொல்றேன் அப்பா!...அது வரைக்கும் என்னைக் கம்பெல் பண்ணாதீங்க..''

அதற்கு மேல் வருணை வற்புறுத்த...அவருக்கு பயமாய் இருந்தது.

ஒரே மகன் கோபித்துக்கொண்டு போய்விட்டால்?

ஒன்று கிடக்க ஒன்று செய்து கொண்டால்?

எதற்கு வம்பு?

அவனாய் வழிக்கு வரும் வரை காத்திருக்க வேண்டியது தான்....

சென்ற மாதம் வரை...வருணும் அதே எண்ணத்தோடு தான் இருந்தான்.

அவனது ரசனைக்கேற்ற பெண். அவன் கற்பனை செய்து வைத்திருந்த பெண்ணை என்றாவது ஒருநாள் சந்திப்போம் என்று நம்பிக்கொண்டிருந்தான்.

போன மாதம்...அந்தப் பிரபல மருத்துவமனைக்கு சென்று உடற் பரிசோதனை செய்து கொண்டான்.

மறுநாள் ரிப்போர்ட்டை வாங்கிப் பார்த்தபோது...தலையில் பெரிய இடியே விழுந்தாற் போலிருந்தது.

அதுவும்...ஆரம்பக்கட்டத்தை தாண்டி முற்றிப்போன நிலையில் இருந்தது.

'கடவுளே! இதென்ன வேதனை? ஏற்கனவே என் குடும்பத்தில் மூன்று பேர் இறந்துவிட்டனர்.

வம்சத்துக்கு வாரிசாய் மிஞ்சியிருப்பது நான் மட்டும் தான்... எனக்கு இப்படியொரு நிலைமை என்று தெரிந்தால் அதிர்ச்சியில் அப்பா மறுகணமே உயிரை விட்டுவிடுவார். அப்பாவிடம் சொல்

லாமல் டிரீட்மெண்ட் எடுத்துக் கொள்ளலாமா?

ஊகூம்...முற்றிப்போன நிலமைக்கு வந்த பின்பு ஹீமோ தெரபி அந்த தெரபி என்று ஏன் வீணாய் சிகிச்சை செய்து சித்ரவதை பட வேண்டும்?

போகும் உயிர் நிம்மதியாய் போகட்டுமே? நான் போகும் வரை... இந்த விஷயம் யாருக்கும் தெரியக்கூடாது.

நண்பன் பார்த்திபனிடம் மட்டும் சொல்லி வைக்கலாம். என்று தீர்மானித்து அவனிடம் இதை கூறினான் வருண்.

''டேய்....! உனக்கென்ன பைத்தியமா? உனக்கு இருக்கிற சொத்து சுகத்துக்கு...உலகத்துல எந்த மூலைக்கு வேணும்னாலும் போயி ராஜ வைத்தியம் பண்ணி...நோயை குணப்படுத்திடலாம்டா....''

நண்பன் உரிமையாய் திட்டினான்.

''என்னோட ரிப்போர்ட்டுன்னு சொல்லாம....டெஸ்ட் ரிசல்ட்டை மட்டும் எங்க பேமிலி டாக்டர் கிட்டே சொன்னேன். டிரீட்மெண்ட் எடுத்து பிரயோஜனமே இல்லைன்னு சொல்லிட்டாரு..''

''எதுக்கும் முயற்சி பண்ணிப்பார்க்கலாமே வருண்? உன்னோட நல்ல குணத்துக்கு...ஒரு வேளை மிராக்கிள் நடந்து...நீ குணமாகிற துக்கும் வாய்ப்பு இருக்குல்ல?''

''ஹீமோ தெரபி டிரீட்மெண்ட் எடுத்துக்கிட்டவங்களை நான் நேர்ல பார்த்திருக்கிறேன். குத்துயிரும் கொலையிருமா உருக்குலைஞ்சு போவாங்க...

எனக்கென்ன ஆச்சுசிரியம்னா....கேன்சர் இவ்ளோ தூரம் முத்தியிருக்கு....பட்.....! எனக்கு எந்தவொரு வலியோ வேதனையோ தெரியலைடா..''

''ஒவ்வொருத்தருக்கு ஒரு விதம் போலிருக்கு...சில பேர் வலியில புழுவா துடிச்சுப்

**''உங்க பையன் ஏன் ஹெல்மெட்டை காலில் மாட்டிக் கொண்டு போறான்?''**

**''புதுபைக் கிடைச்ச சந்தோஷத்துல அவனுக்கு தல கால் புரியல...''**

**-பர்வீன் யூனுஸ், சென்னை.**



போவாங்க...சில பேருக்கு வலியே தெரியாது...'' கண்ணீருடன் ஏறிட்டான் பார்த்திபன்.

''என்னுயிர்த்தோழன் நீ...உனக்கு மட்டும் உண்மை தெரிஞ்சா போதும்..

தான தர்மம் செய்து இருக்கிற வரைக்கும் இயற்கை காட்சிகளைப் பார்த்துட்டு...விதி வர்றப்போ நிம்மதியா போய் சேர்ந்துக்கிறேன்டா...''

தழுதழுத்த குரலில் பேசியவனை ஆரத்தழுவி கொண்டான் பார்த்திபன்.

வேடந்தாங்கல் சரணாலயத்தை சுற்றிப்பார்க்க வந்த போது தான் வருண், வந்தனாவை சந்தித்தான்.

'கடவுளே! இதென்ன சோதனை? எனக்கு வரப் போகிறவள்.... எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேனோ? அதேபோல் வந்தனா காணப்படுகிறாளே?

என் கற்பனைக்கு ஒரு வடிவம் கொடுத்தாற்போல் இந்த வந்தனா பேரழகோடு இருக்கிறாளே?

பேச்சில் அவளது ரசனை வெளிப்பட்டதே?

இவள்தான் எனக்கேற்ற இணை!

இவளே தான் என் தேவதை!. என்று உள்மனம் மகிழ்ச்சியில் குரல் இடுகிறதே? பார்த்த மாத்திரத்திலேயே ஒருவரை எடை போட்டு விடுவேனே? வந்தனாவுக்கும் என்னை...என் பேச்சை பிடித்துப் போய் விட்டதே?

அந்த விழிகளைப் பார்த்தபோதே...எனக்குப் புரிந்து விட்டது. நான் அவளது இதயத்தில் இடம் பிடித்துவிட்டேன் என்று அப்பட்டமாய் தெரிகிறதே?

நல்ல குடும்பத்தில் பிறந்தவள்....அடக்கமான பெண்...இதை வெளிப்படையாய் காட்டிக் கொள்ளக்கூடாது என்று அவள் பிரயத்தனப்படுவதும் புரிகிறது.

அதே நாளில்...எதிர்பாராமல் கோயிலும் அவளைப் பார்த்து அம்மாவின் நினைவு தினத்திற்கு உரிய தானப்பொருட்களை அவளிடம் தந்தபோது அவளது நேசம் கோர்த்த பார்வை மயிலிறகாய் மனதை வருடியதே?

**எப்பொழுதும் உண்மையை பேசுங்கள். உண்மைதான் பக்திக்கு வழிகாட்டுகிறது. சொர்க்கத்திற்கு அழைத்துக் செல்கிறது.**
**-நபிகள் நாயகம், கே. விஜயலட்சுமி, திருவண்ணாமலை.**

அந்த விழிகளில் காதலும் மரியாதையும் மாறி மாறிப் பிரதிபலித்தனவே?

'அவள் மனதில் நானிருக்கிறேன்' என்பது அப்பட்டமாய் புரிந்ததே?

யாருக்கோ தானம் அளித்தாலும்...அந்த விலை உயர்ந்த புடவையை என்ன கலர்? என்ன டிசைன்? என்று நான் கவனித்ததில்லை.

வந்தனாவுக்கு தரப்படும் புடவை அழகான வண்ணத்தில் அவளது அழகுக்கு ஏற்ற விதத்தில் அமைந்திருக்கிறதா? என்று தாம்பளத்திலிருந்தே பட்டுச் சேலையை பார்த்தேன்.

சிந்தூர வண்ணத்தில் ஆகாய வண்ண பார்டர் போட்ட பட்டுப் புடவை....!

அவளுக்குப்பொருத்தமாய் தான் இருக்கும் என்று திருப்தி அடைந்தேன். அவள் திரும்பி திரும்பிப் பார்த்தபடி...நடந்து சென்றபோது தவியாய் தவித்தேனே?

கோவிலுக்கு வெளியே வந்து.

'நில் கண்ணே! நான் ஒரு ஓவியன்....இது காலம் வரை எனக்கு வரப்போகிற துணை எப்படி எல்லாம் இருக்க வேண்டும் என்று நினைத்தேனோ? அந்த வர்ணனைக்கு ஏற்றாற்போல் நீ இருக்கிறாய்...!

எனக்காகவே பிறந்தவள் நீ!

நான் உன்னை மனதார நேசிக்கிறேன் கண்மணியே!

நீ இல்லாத வாழ்க்கையை என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது வந்தனா...!

ஐ லவ் யூ ஸோ மச் டார்லிங்!' என்று சொல்லி அவளை அப்படியே ஆரத் தழுவிக்கொள்ள வேண்டும் என துடித்தேனே...?

இந்த நோய் மட்டும் வராமல் இருந்திருந்தால்...? என் ஆசை அப்

படியே நிறைவேறி இருக்கும்.

என் ஆசைக்கு யாரும் முட்டுக்கட்டை போட மாட்டார்களே?

ஆனால் விதி....?

முட்டுக்கட்டை போட்டு விட்டதே?

சாவு என்னை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்த சமயத்தில் என் காதலை எப்படி என் தேவதையிடம் வெளிப்படுத்துவேன்?

வெளிப்படுத்தினால் என்னாகும்?

வந்தனா கண்டிப்பாய் என்னை என் காதலை ஏற்றுக்கொள்வாள் அதில் சந்தேகம் இல்லை.

என்னால் அவளது வாழ்வு பாதிக்கப்படும் அல்லவா?

அவளது வாழ்க்கையை எனது சந்தோஷத்திற்காக பாழாக்க லாமா?

எனக்கு சுயநலமாய் சிந்திக்க தெரியாதே?

என் வந்தனா வாழ வேண்டும்.

சவுபாக்கியவதியாய் வாழ்வாங்கு வாழ வேண்டும் அது போதும் எனக்கு...!

அவளது நினைவு தரும் சுகத்திலேயே நான் கண்ணை மூடி விடுவேன்.

ஏதேதோ இயற்கை காட்சி களை ஓவியமாய் தீட்டுகிறேன்.

அவனது உருவத்தை வரைந்து நிதமும் கண்குளிரப் பார்த்து ரசித்துக் கொள்கிறேன் பட்டுப்பு டவை கட்டி அவள்

மோகனமாய் புன்னகைப்பது போல் அழகாய் ஓவியம் தீட்டி முடித்தான் வருண்.

ஓவியம் உயிர் பெற்று வந்தாற் போன்று அவனது மனக்கண் ணில் வந்தனா தோன்றினாள்.

ஆவலுடன் ஆரத்தழுவி உச்சி

**''அந்த கவர்ச்சி நடிகை தனக்கு வர்ற கணவன் எப்படி இருக்கணும்னு எதிர்பாக்கறார்?''**

**''கட்டை பிரம்மச்சாரியா...''**

**-பர்வீன் யூனுஸ், சென்னை.**



முகர்ந்தான் வருண். அது நிஜமல்ல கற்பனை தான். பகல் கனவு தான். என்று புரிபட்டபோது புழுவாய் துடித்தான்.

# 7

"காஞ்சிப் பட்டுடுத்தி
கஸ்தூரி பொட்டு வைத்து
தேவதைபோல் நீ
நடந்து வர வேண்டும்...!
அந்த திருமகளும் உன்
அழகைப் பெற வேண்டும்...!"

வருண் மெல்லிய குரலில் பாடினான்.

அந்த ஓவியத்தை இமை கொட்டாமல் பார்த்தான்.

ஆளுயரத்திற்கு வந்தனாவின் உருவத்தை நேர்த்தியாய் வரைந்திருந்தான்.

அதை அவனது அறையில் கட்டிலுக்கு நேர் எதிரே மாட்டி வைத்தான்.

கையடக்கமாய் இன்னொரு ஓவியத்தை வரைந்து சூட்கேஸில் வைத்துக் கொண்டான்.

நிம்மதியைத் தேடி....இயற்கைப் பிரதேசங்களுக்கு அவன் தான் பிரயாணம் செய்து கொண்டிருந்தானே? சூட்கேஸில் ஓவியம் இருந்தால் அவ்வப்போது பார்த்து சந்தோஷப்பட்டுக் கொள்ளலாமே?

அவனது செல்போன் அலறியது.

நண்பன் பார்த்திபன் பதற்றமாய் பேசினான்.

"வருண்! சொல்லாம கொள்ளாம எங்கேயாவது கிளம்பிடாதே! நேத்து தானே 'மேகமலை' எஸ்டேட்டுலேர்ந்து திரும்பி வந்தே?

ஒரு வாரமாச்சும் அப்பா கூட இரேன். நிம்மதியா ரெஸ்ட் எடேன். இப்படி விடாம அலைஞ்சா உடம்பு என்னத்துக்கு ஆகும்?

நான் கூட வரேன்னு சொன்னா அதுக்கும் சம்மதிக்க மாட்டேங்கிற? எஸ்டேட், மலைப்பிரதேசம்னு. ரிமோட்டான பகுதிகளுக்கு நீ

போயிட்டா உன்னோட செல்போன்ல டவர் கிடைக்காம உன்னை லைன்லே பிடிக்கவே முடியலைடா.''

''கண் காணாத எடத்துல...நான் செத்துடுவேன்'னு பயப்டறி யாடா? நான் என்னமோ தெம்பாத்தான் இருக்கேன் நான் கண்ணை மூடறதுக்கு இன்னும் கொஞ்ச நாளாகும் பயந்து சாகாதே? சரியா?''

''வருண்! உங்கப்பா உன்னை எதுவும் கேள்வி கேட்கலியா? சமீப காலமா அடிக்கடி ஊர் ஊருக்கு கிளம்பறியே? அவருக்கு சந்தேகம் வரலையா?''

''நம்ம நிறுவனங்கள் பல ஊர்கள்லே இருக்கே நேர்ல போய் கவ னிச்சுக்கிட்டா தானே நல்லது?

''உடையவன் பார்க்கவிட்டால் பயிர் ஒரு முழம் கட்டை!ன்னு நீங்க தானப்பா அடிக்கடி சொல்வீங்க?

நானே தினமும் ராத்திரியிலே போன்ல உங்க கிட்டே பேசிடறேன் இல்லையா? அப்புறம் என்னப்பா? ன்னு சொல்லி அவரோட வாயை அடைச்சுட்டேன் பார்த்திபா!''

''கல்யாணப் பேச்சை எடுத்து நச்சரிப்பாரே உங்கப்பா? அதுக்கு என்ன சொன்ன?''

''இன்னும் ரெண்டு வருஷத்துக்கு அந்த பேச்சை எடுக்காதீங் கப்பா நீங்க ரொம்பவும் வற்புறுத்தினா நான் எங்கேயாச்சும் போயிடு வேன்னு ஒரு போடு அதைப் பத்தி எதுவும் பேசறதில்லை.''

''வருண்! நீ எங்க போறதாயிருந்தாலும் டிரைவரை கூடவே வச்சு க்கோ...துணையில்லாம தனியா போயிடாதே ப்ளீஸ் இல்லைன்னா நான் உன் கூட வர்றேன்...''

''உன்னோட வேலை வெட்டியைப் போட்டுட்டு..என் கூட நீ அலைய முடியுமா? அது தப்புடா சரி உனக்காக ஒப்புக்கிறேன் டிரைவரை கூடவே வச்சுக்கிறேன். போதுமா?

இன்னும் நாலு நாளைக்கு இங்க தான் இருக்கப்போறேன்.எங்கே

***சோம்பேறி என்பவன் இரண்டு முட்களும் இல்லாத கடிகாரம். அது நின்றாலும் ஓடினாலும் உபயோகமில்லை.***

**-கூப்பர், கே. விஜயலட்சுமி, திருவண்ணாமலை.**

யாவது நான் புறப்படும்போது உன்கிட்ட கண்டிப்பா சொல்லிட்டுப் போறேன். போதுமா? பை!'' பேசி முடித்து போனை வைத்தபோது தான் அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

செல்போனில் வந்தனாவின் ஓவியத்தை க்ளோசப்பில் படம் பிடித்தான்.பின்பு அந்த ஓவியத்தை செல்திரையில் அழகாய் 'செட்' செய்தான்.ஸ்கிரீன் ஸேவரில் வந்தனாவின் ஓவியம் பதிவு செய்து விட்டால் அடிக்கடி செல்போனை எடுத்து ஆசை தீர ரசிக்கலாம் அல்லவா?

மனதிற்குள் இப்போது பரம திருப்தி!

வாஞ்சையுடன் செல்போனை முத்தமிட்டான்.

'கடவுளே! அடுத்த ஜென்மத்திலாவது என் காதல் தேவதையை நான் கைப்பிடிக்க வேண்டும். அவளை மணந்து ஆதர்ஷ் தம்பதி களாய். பலகாலம் நாங்கள் வாழ வேண்டும். என் ஆசை அப்போதா வது நிறைவேறுமா? கண்டிப்பாய் நிறைவேறும்.

அல்ப ஆயுளில் மடியப்போகும் ஜீவன் நான்! எனது வேண்டு தலை கட்டாயம் கடவுள் நிறைவேற்றி வைப்பார்.

அவனது கண்கள் கலங்கின. விதி சிரித்தது.

# 8

**பா**ண்டிச்சேரியிலிருந்த பிரபல தனியார் மருத்துவமனையில் பளிச்சென்ற நர்ஸ் உடையில் வந்தனாவும், குமுதாவும் காரிடாரில் நடந்து கொண்டி ருந்தார் கள்.

''அதுக்குள்ளே இந்த ஹாஸ்பிடல்லே நாம்ம வந்து சேர்ந்து ஒரு மாசம் ஓடிப்போச்சுல்ல?''

''ரிசல்ட் வர்றதுக்கு முன்னே எங்கப்பாவுக்கு மாற்றலாகி திருவள் ளூருக்கு குடும்பத்தோட போயிட்டோம்! வந்தனா கூடத்தான் நான் பிராக்டிஸ் பண்ணுவேன்னு பிடிவாதம் பிடிச்சு உன்னோட இந்த ஹாஸ்பிடலுக்கு வந்துட்டேன்...''

''பாண்டிச்சேரிக்கும் திருப்போரூக்கும் தூரம்கிறதால உங்கப்பா உன்னை இங்க ஹாஸ்டல்லே சேர்த்து விட்டுட்டுப் போயிட்டாரு

நம்ம லக்குக்கு ஹாஸ்டல்லே தங்குறதுக்கு கூட....ஒரே ரூம் கிடைச்சுதே? அது வரைக்கும் சந்தோஷம் தான்!'' என்றாள் குமுதா.

''இது வெளிநாட்டு தரத்துக்கு இணையா செயல்படற மருத்து வமனை! இங்க ஒரு வருஷம் 'பிராக்டிஸ்' பண்ணினாலே மட்டும் இல்ல நல்ல வேல்யூவும் கூட

அதுக்குத்தான் இங்க ஜாயின் பண்ணினேன். ஆசையாத்தான் சேர்ந்தேன் ஆனா,எனக்கு இங்க வந்து சேர்ந்ததும் இனம் புரியாத வேதனை தவிப்பு...!''

முக வாட்டத்துடன் பேசினாள் வந்தனா.

''அதுக்கு காரணம் என்னன்னு எனக்குத் தெரியும். அப்பா அங்கே தனியா இருக்காரே?ன்னு வருத்தப்படறே வயசானவரு சமைச்சு கஷ்டப்படுவாரேன்னு வருத்தப்படறே''

''ஆமா அதை நெனச்சாத்தான் எப்படியோ இருக்கு''

அதையும் தாண்டி வேறொரு காரணமும் இருந்தது.

இந்த மருத்துவமனையின் எம்.டி.யும். ஒரு டாக்டர் தான்.

அந்த எம்.டி.யின் மகன் முகேஷ் வந்தனாவின் நிம்மதியை பறித்து விட்டிருந்தான்.

எம்.டி.யின் வாரிசு என்பதாலும் அவனும் ஒரு டாக்டர் என்ப தாலும் அதிகாரத்தை கையிலெடுத்துக் கொண்டான்.

அவன் ரவுண்ட்ஸ் போகும் போதெல்லாம் வந்தனாவும் கூடவே வர வேண்டும் என்று உத்தரவிட்டான்.

ஆபரேஷன் தியேட்டரிலும் அவனது அருகில் அவள் இருக்க வேண்டும்.

'என்னது இது? இந்த மாதிரி வேலைக்கு எல்லாம் பல காலம் சர்வீஸ் செய்த சீப் நர்ஸைத்தான் உடன் வைத்துக் கொள்வார்கள்?

பாவி! பார்க்கிற பார்வையே சரியில்லையே?

கேஸ் ஷீட்டாகட்டும் வேறு எந்தப் பொருளாகட்டும் கையைத் தொட்டுத் தடவித்தான் வாங்குகிறான். இதை வெளியில் சொல் லவும் முடியவில்லை..

அதிகாரம் அவனது கையில் இருக்கிறது.

குமுதாவிடம் இதைப்பற்றி மெல்லப் புலம்பிப் பார்த் தேனே? அவள் இதை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ள வில்லையா? அல்லது அவ ளுக்கு இது புரியவில்லையா என்று தெரியவில்லையே?

'டாக்டர் முகேஷ் உன்னைத் தன்னோட ரைட் ஹேண்டா வச் சுக்கப் பிரியப்படுறாரு வந்தனா! அதுக்கு காரணம் உன்னோட திறமை தான் உன் திறமைக்கு கிடைச்ச அங்கீகாரம் இது...

எத்தனையோ பேர் இங்க பல வருஷமா நர்ஸா சர்வீஸ் பண்றாங்கல்ல? அவங்க எல் லாருமே உன்னைப் பார்த்து பொறாமையில பொசுங்குறாங்க. இது உனக்கு கிடைச்ச உன் டேலண்டுக்கு கிடைச்ச கிரெடிட்! கண்டதையும் போட்டு மனசைக் குழப்பிக்காதே!

உன்னை பிரண்டா அடைஞ்சதுக்கு நான் ரொம்பவே பெரு மைப்படறேன். வந்து சேர்ந்து ஒரு மாசத்துக்குள்ளேயே டாக்டர் முகேஷோட ரைட் ஹேண்டா வலம் வர்றே? யாருக்கு கிடைக்கும் இந்த பாக்கியம்? போகப்போகப் பாரேன் நீ உன்னதமான இடத் துக்கு ரொம்ப உயரத்துக்குப் போகப்போறே' என்ற குமுதா சிலா கித்துப் பாராட்டுகிறாளே?

ஆனால் எனக்கு முகேஷின் அருகாமையில் இருக்கும் போது அருவருப்பாய் இருக்கிறதே? பார்க்கும் பார்வையில் கண்ணியம் இல்லையே? ஆளை விழுங்கி விடுவதுபோல் பார்க்கிறானே பாவி?

இதெல்லாம் போதாதென்று அவ்வப்போது தனிமையில் அழைக் கிறான்.

**"நான் ஆட்சிக்கு வந்தால் மக்கள் கண் கலங்க மாட்டார் கள்னு தலைவர் சொல்றாரே.. எப்படி?"**

**"டி.வி.சீரியல்களை தடை பண்ணிடுவாராம்..."**

**-பர்வீன் யூனுஸ், சென்னை.**



**அடிபணிந்து வாழ்வதை விட நிமிர்ந்து நின்று சாவதுமேல்**
**-ரூஸ்வெல்ட், சா. இரா. மணி, வந்தவாசி.**

'நேத்து ஆபரேஷன் பண்ணினோமே? அந்தப் பேஷண்ட்டுக்கு இம்ப்ரூவ் மெண்ட் இருக்கா? என்று ஏதாவது கேள்வி கேட்கிறான்.

இந்தக் கேள்வியை ஐ.ஸி.யூ.வில இருக்கிற நர்ஸ் கிட்டே நீங்க கேட்கணும்' என்று வெடுக்கென்று சொல்லத் தோன்றுகிறது.

'இன்டர் காம்லே இந்த சிஸ்டர் கிட்டே பேசினேன்...நல்ல இம்ப் ரூவ் மெண்ட் இருக்காம்' என்று பொறுமையாக பதிலளித்ததால் அதற்கு 'குட்! இப்படித்தான் ரெஸ்பான்ஸிபிலிட்டியோட இருக் கணும்.

அது உன்னோட ட்யூட்டி சம்பந்தப்படாத மேட்டரா இருந்தாலும் பொறுப்பா எல்லாத்தையும் டீ டெய்ல்ஸ் தெரிஞ்சு வச்சிருக்கியே.... வெல்டன்! வந்தனா!' என்று சிரித்து வழிந்து பாராட்டுகிறான்...

பாராட்டுவதோடு நிற்காமல் நான் எதிர்பாராத தருணத்தில் சட் டென்று கையைப் பற்றி குலுக்குகிறானே? தீ பற்றினாற்போல் அவ சரமாய் கையை உருவிக் கொள்கிறேன்.

'ஏன் வந்தனா! உன்னோட கை சில்லுன்னு இருக்கு? பயமா? என் கிட்டே பயமா? சீப் டாக்டராச்சே?ன்னு பயப்படறியா?' என்று கொஞ்சலாய் பேசுகிறானே?

நறுக்கு தெறிந்தாற்போல் பதிலை சொல்லிவிட்டு அந்த அறையை விட்டு வெளியில் வருவதற்குள் போதும் போதும் என்றாகி விடுகி றதே? என்னால் இந்த வேளையில் நீடிக்க முடியுமா?

ஒரு வருடத்திற்காவது தாக்கு பிடித்துவிட்டால் நல்லது.

ஆனால் தாக்கு பிடிக்க என்னால் இயலுமா?

''மத்தவங்களை விட இந்த நர்ஸ் டிரஸ்...உனக்கு ரொம்பவே பொருத்தமா இருக்கு வந்தனா...!

என்ன ரீஸன் தெரியுமா? யூ ஆர் ஸோ பியூட்டி புல் வாட் எ ஸ்டன்னிங் பெர்சனாலிட்டி?'' என்று அழகை வேறு வருணித்து தொலைக்கிறானே?

ஒரு மாதத்திலேயே மூச்சு முட்டுகிறதே? எத்தனை காலம் தான் இங்கே பல்லைக்கடித்து சகித்து வேலை செய்வதாம்? இந்த

வேலையை விட்டு வேறு எங்காவது வேலை தேடினாலும்...அங்கும் பிரச்சனை வராது என்று என்னன நிச்சயம்?

அழகாய் பிறந்து தொலைத்து விட்டேனே?

அந்த அழகே எனக்கு வினையாய் போய் விட்டதே! வருண் எப் பேர்ப்பட்ட உத்தமர்?

என்னைத் தனிமையில் அதுவும் நான் மயக்கமடைந்த நிலையில் வாரித்தூக்கி இருக்கிறார்.

தப்பாய் ஒரு பார்வை பார்த்தாரா?

தப்பாய் ஒரு பேச்சு பேசினாரா?

தப்பாய் ஒரு சிரிப்பு?

ஊகூம்...ஊர் உலகத்தில் வலைவீசித்தேடினாலும் அப்படிப்பட்ட உன்னதமான கண்ணியமான இளைஞரைப் பார்க்க முடியுமா?

வருணின் கால் தூசுக்கு முகேஷ் ஈடாக மாட்டானே? எதற்கும் பயப்படக்கூடாது. தைரியத்தை வரவழைச்சுக்கணும் என்று கூறி னாரே வருண்?

அதன்படி நடக்க வேண்டியது தான்.

முகேஷ் மாதிரியான பொறுக்கிகளுக்கு பயந்து ஓடினால் வாழ் நாள் முழுவதும் நான் பயந்தோடிக்கொண்டே இருக்க நேரிடும். தைரியமாக எதையும் எதிர்கொள்ள வேண்டியது தான்

நான் என்ன தனி மனுஷியா?

என் மனதில் வருண் இருக்கிறார்.

அப்புறம் என்ன?

வருணைப்பார்த்து நான்கு மாதங்கள் இருக்கும்.

வருண்!

உங்களை மறுபடியும் பார்க்கும் பாக்கியம் எனக்கு கிடைக்குமா வருண்!.

'ஐ லவ் யூ ஸோ மச்...! வருண்!'

வருணின் நினைவு தந்த சுகத்தில் தன்னைத் தானே தேற்றிக் கொண்டு நாட்களைக் கடத்த தீர்மானித்து விட்டாள் வந்தனா.

ஆனால் விதி தோழியின் ரூபத்தில் வந்து சதி செய்யும் என்று அவள் கனவிலும் கருதவில்லை.

# 9

**நா**ட்கள் நத்தையாய் நகர்ந்தன.

பத்து நாட்கள் பறந்திருக்கும்.

தோழி குமுதாவின் நடவடிக்கைகளில் ஒரு மாறுதல் தெரிந்தது.

மதிய நேரத்தில் இருவரும் கேன்டீனில் ஒன்றாய் வருவதில்லை. வந்தனாவிற்கும் வேலை இருந்தது.

''சேர்ந்து சாப்பிடணும்னா சரிப்பட்டு வராது. அவங்கவங்க ளுக்கும் நேரம் கிடைக்கும் போது சாப்பிட்டுக்கலாம்...'' என்று கூறி விட்டிருந்தாள்.

இரவில் ரூமில் கூட குமுதாவைப் பார்க்க முடியவில்லை.

''எனக்கு நைட் ஷிப்ட் போட்டிருக்காங்க வந்தனா!''

''ஓகே...குமுதா...ட்யூட்டியை செய்யத் தானே. வந்திருக்கோம் சமயம் கிடைக்கும் போது நேர்ல பார்த் துக்கலாம் ப்ரீயா இருக்கும் போது போன்ல பேசிக்கலாம் டோன்ட் ஒர்ரி...! அன்று ஞாயிற்றுக்கி ழமை இவள் இரவில் ரூமுக்குச் சென்ற போது... குமுதா கட்டி லில் யாருடனோ தழைந்த குர லில் பேசிக் கொண்டிருந்தாள்.

வந்தனா வந்ததும் சட்டென்று பேச்சை நிறுத்தினாள். இவ ளைப் பார்த்து செயற்கையாய் புன்னகைத்தாள். ''இன்னிக்கு உனக்கு நைட் ஷிப்ட் இல்லையா குமுதா?''

''இருக்கு... ஆனா நான் லீவ்

**''நீங்களும் வெல்லலாம் ஒரு கோடி நிகழ்ச்சியில தலைவர் ஜெயிச்சிடுவார்னு எப்படிச் சொல்றே?''**

**''கேள்வி அபகரிப்பு செஞ் சிருக்காரே...''**

**-பர்வீன் யூனஸ், சென்னை.**



***சா**ப்பாட்டு வேளைக்கு ஒரு மணி நேரத்திற்கு முன் ஒரு வாழைப்பழம் தின்றால், வயிற்றிலுள்ள கிருமிகளுள் இருநூறுக்கு நூற்றுத் தொண்ணூற்றொன்பது வீதம் அழிந்து போகிறது.*

**-எம். எஸ். மயில்,தூத்துக்குடி.**

எடுத்துட்டேன் ஏன் உடம்புக்கு முடியலியா? உன்னோட முகம் கூட வாட்டமா இருக்கே?'' என்றபடி அவளது நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள் சில்லென்று தான் இருந்தது.

''உடம்புக்கு ஒண்ணுமில்லை... மனசு தான்.... இழுத்தாள் குமுதா.

''உன் மனசுக்கு என்ன? ட்யூட்டி பார்க்கும் போது நேத்து யாராச்சும் உன்னைத் திட்டிடாங்களா? '' அப்படி எல்லாம் இல்லை வந்தனா?'' '' பின்னே? ஊர்ல இருந்து போன் வந்துச்சா? அம்மா, அப்பா, தங்கச்சி... எல்லாரும் நல்லா இருக்காங்கதானே?''

'' அவங்க நல்லா தான் இருக்காங்க...'' '' உன் பிரச்சினை என்ன குமுதா? சுத்தி வளைக்காம சொல்லேன். எனக்கு டென்ஷனா இருக்கு...'' '' அம்மா, அப்பாவை நெனச்சு தான்....'' ''ஓ... அவங் களைப் பார்க்கணும்னு தோணுதா? போன் பண்ணி வரச் சொல்லு., இல்லைன்னா ஒரு நாள் லீவு போட்டுவிட்டு போயி பார்த்துட்டு வா.. இதுக்கா வருத்தப்பட்டுட்டு இருக்கே?

'' அது இல்லைடி.. என்னோட வருத்தமே வேற... நான்... என் ''னோட மனசுல..'' ''சொல்லித் தொலையேன்டி...'' ''நான் ஒருத் தரை லவ் பண்றேன்டி. வீட்டுக்குத் தெரிஞ்சா... இந்தக்காதலை அவங்க ஏத்துப்பாங்களா?ன்னு பயமா இருக்கு....''

ஸ்தம்பித்துப்போய் விட்டாய் வந்தனா.

குமுதா சுமாரான தோற்றம் கொண்ட பெண். குள்ளம் வேறு....

வந்தனாவின் பக்கத்தில் நின்றால்... அவளது தோற்றம் இன்னமும் மங்கித்தான் தெரிவாள்.

''அதை விட.. உன் கிட்டே சொல்றதுக்கு ரொம்பத்தயக்கமா இருந்துச்சு...

காதல் என்ற வார்த்தையைக் கேட்டாலே நீ காததூரம் ஓடற

**இரவில் நாம் தூங்கும் போது அந்த அறையினுள் ஒரு பெரிய வாளி அல்லது குண்டாவில் தண்ணீரை ஊற்றி அதை மூடாமல் வைத்து விடவேண்டும். விளக்கெரிவதால் அறையில் உண்டாகும் நச்சுக்காற்றுக்களை அந்த நீர் கவர்ந்து கொள்ளும்.**

**-எம். எஸ். மயில்,தூத்துக்குடி.**

வளாச்சே?

காதல் கதைகளையோ.. காதல் சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பத்திக் கேட்கிறதுக்கே.... உனக்கு எட்டிக்காயா கசக்குமே?

காதல் கத்தரிக்காய்னு அலையறவங்களைக்க கண்டலே... நீ அவங்க இருக்கிற திசைப்பக்கம தலை வச்சுப்படுக் மாட்டியே?

அதான்... விஷயத்தை சொன்னா... நீ என்னை விட்டு விலகிப் போயிருவியோ?ன்னு பயமா இருக்குடி..'' குமுதா வந்தனாவின் கையைப் பிடித்துக் கொண்டாள். ''வாஸ்தவம் தான்...வருணை சந்திப்பதற்கு முன்புவரை நான் அப்படித்தான் இருந்தேன்... நானே காதல் வயப்பட்டு விட்டேனே? நான் எதற்கு உன்னை வெறுக்கப் போகிறேன்'' தனக்குள் பேசிக்கொண்டாள் வந்தனா... ''என்ன வந் தனா? ஒண்ணுமே பேச மாட்டேங்கிறே?'' ''ஆங்... ஒண்ணுமில் லடி... அஞ்சு வருஷத்துக்கும் மேலா நாம பழகறோம் இந்த ஒரு விஷயத்துக்காக நம்ம நட்டை நான் எப்படி தூக்கி எறிவோன் ஆமா யாருடி அவரு? அவரு நம்ம ஹாஸ்டல்லே தான்டி டாக்டரா வேலை பார்க்கிறாரு வந்து ரெண்டு மாசம் கூட ஆகலை அதுக்குள்ளே லை ப்லே செட்டிலாகிறதுக்குரிய ஏற்பாடுகளைந் பண்ணிட்டே போலி ருக்குபோ வந்தனா

குமுதா வெட்கத்தில் தலை குனிந்தாள். சரி... அவரை பத்தி சொல்லு அவளது தாடையைத் தொட்டு நிமிர்த்தினாள். அண்ணலும் நோக்கினான்.அவளும் நோக்கினாள்..

''உங்க ரெண்டு பேத்துல யாரு முதல்லே ப்ரப்போஸ் பண்ணி னது'' ''நான் பேசணும்னு நெனச்சேன். அவரே வந்து இதைப்பத்தி பேசிட்டாரு...''

''நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும். நாளோடும் பொழுதோடும் உறவாட வேண்டும்... அப்படின்னு கவிஞர் பாடி



டைபாய்டு கிருமிகளையும் மற்ற நச்சு நோய்க்கிருமிகளையும் கொல்லக் கூடிய வலிமை தேங்காய் எண்ணெய்க்கு உண்டாம்.

–எம். எஸ். மயில்,தூத்துக்குடி.

வச்ச மாதிரி நடந்துக்கிட்டீங்களாக்கும் ஒரே துறை... ஒரே ஹாஸ்பிடல்...! வெரிகுட்...! கங்கிராட்ஸ்... ஆமா... யாரு அந்த டாக்டர்?''''ஒரு நாளைக்கு அவரை உனக்கு இன்ட்ரடியூஸ் பண்ணி வைக்கிறேன்..

நம்ம நட்பை நான் பெரிசா மதிக்கிறேன்டி... இது வரைக்கும் நான் உன்கிட்டே எதையுமே மறைச்சதில்ல கடைசி வரைக்கும் நம்ம நட்பு நீடிக்கணும்னு நான் விரும்பறேன் வந்தனா!

குமுதா பேசியதைக் கேட்டதும் வந்தனா நெகிழ்ந்து போய் விட்டாள்.

''எங்க காதலைப் பத்தி பக்குவமா எங்கம்மா அப்பா கிட்டே நீ தான் பேசணும், உன் மேல அவங்களுக்கு மரியாதை இருக்கு நீ சொன்னா கண்டிப்பா அவங்க கேட்டுப்பாங்க'' ''கொஞ்ச நாள் போகட்டும் நிதானமா இதைப்பத்தி அவங்க கிட்டே எடுத்து சொல்கிறேன் சரியா இதைப்பத்தியே கவலைப்பட்டு இருக்காம ஒழுங்கா ட்யூட்டியைப் பாரு காதல் நினைப்புலே கடமையைத் தவற விட்டுடக் கூடாது''

''ஏண்டி இப்படி சொல்றே?''

''பின்னே உங்க காதல் தீவிரத்துல என்னைப்பார்க்க முடியாட்டி கூட பரவாயில்ல... ஃபோன்லே கூட பேசறதுக்கு உனக்கு முடியலை பார்த்தியா. சாரி....சாரிடி..... வெரி சாரி....!''

''மனசுல காதல் புகுந்துட்டா இந்த உலக நினைப்பே இல்லாம போயிடறது சகஜம் தான்....என்னமோ அனுபவப்பட்டவ மாதிரி பேசறியே?'' எல்லாம் புத்தகங்கள்லே வாசிச்சு தெரிஞ்சுக்கிட்டது. தான் ''சரிடி டைமாச்சு தூங்கலாம் குட்நைட் அண்ட் ஸ்வீட் ட்ரீம்ஸ்...''

தோழியின் கன்னத்தை செல்லமாய் தட்டிவிட்டு கட்டிலில் ஒருக்களித்துப்படுத்து மெல்லிய விரிப்பை எடுத்து போர்த்திக் கொண்டாள் வந்தனா.

விடி விளக்கின் வெளிச்சத்தில் அவளைக்குரூரமாய் உறுத்துப் பார்த்தாள் குமுதா...

இவளுக்குப் பெரிதாக வேட்டு வைக்கப்போகும் தருணத்திற்காக ஆவலாய் காத்துக்கொண்டிருந்தாள்.

## 10

வந்தனா தனது கிட்டை எடுத்துக்கொண்டாள் அந்த மருத்துவமனையில் முதல் தளத்தில் நிதான மாய் நடந்து சென்றாள்.

அறை எண் 110-க்கு முன் நின்றாள். கைக்கடிகாரத்தில் நேரத்தைப்பார்த்துவிட்டு உள்ளே நுழைந்தாள்.

நடுத்தர வயதைத் தாண்டிய பெண்மணி இவளை பார்த்ததும் கட்டிலில் நிமிர்ந்து அமர்ந்தாள். ''வாங்க சிஸ்டர்!''

''குட்மார்னிங் மா... நைட் நல்ல தூங்கினீங்களா? ''தூக்கம் சரியா வரலைம்மா...

''ஏன் அம்மா? பெயின் ஏதாச்சும் இருந்துச்சா...?'' ''ஆமா சிஸ்டர்! இடுப்புல வலி தான்.'' ''நைட் டியூட்டி சிஸ்டரு கிட்டே சொல்லியிருக்கலாமே? ஒரு ஊசி போட்டிருப்பாங்களே? நீங்களும் பாவம் வலியில்லாம நிம்மதியா தூங்கியிருப்பீங்க ''கோவிச்சுக்காதீங்க சிஸ்டர் நான் ஒண்ணு சொன்னா நீங்க தப்பா எடுத்துக்க மாட்டீங்களே ''சொல்லுங்கம்மா'' புன் முறுவ லுடன் முடிந்து போன ட்ரிப்ஸ் பாட்டிலைக் கழற்றி விட்டு புதிதாய் வேறொரு பாட்டிலை

**''தளபதியாரே..போருக்கு கிளம்பும் சமயம் பூனை குறுக்கே போகுதே..''**

**''இல்லேன்னா மட்டும் நாம ஜெயிச்சிடுவோ மாக்கும்..?''**

**-பர்வீன் யூனஸ், சென்னை.**



மாட்டி வைத்தாள்.

அந்த நைட் டியூட்டி நர்ஸ் சரியான சிடுமூஞ்சி சிஸ்டர்! வெடுக் வெடுக்னு பேசி நறுக்குனு வலியில உயிர் போற மாதிரி ஊசி போடு வாங்க

இதுக்குப்பேசாம இடுப்பு வலியையே தாங்கிக்கலாம்னு பல் லைக்கடிச்சுட்டு இருந்துவிட்டேன் சிஸ்டர்!''

அதற்கு எதையும் பேசாமல் புன்னகை மட்டும் பூத்தாள் வந் தனா. ''நீங்க எப்படி சிரிச்ச முகத்தோட இருக்கீங்க வலியே தெரி யாம எவ்ளோ நேக்கா ஊசி போடறீங்க உங்களைப்பார்த்தாலே பாதி வியாதி பறந்துவிடும் போலிருக்கு எப்படா வந்தனா சிஸ்டர் வரு வாங்கன்னு காத்திட்டிருக்கேன் நான் மட்டுமில்ல இங்க இருக்கிற மத்த பேஷன்ட்ஸ் கூட இப்படித்தான் பேசிக்கிறாங்க... உங்களுக்கு நல்ல கைராசி சிஸ்டர் கைராசி மட்டுமில்ல நல்ல முகராசி...''

''உங்க பாராட்டுக்கு நன்றி. நான் பெரிசா ஒண்ணும் செஞ்சுட லைம்மா என்னோட கடமையைத்தானே செய்கிறேன்.'' ''தன்னடக் கமா பேசறீங்க சிஸ்டர் அந்த நேரத்தில் வார்டு வாய் உள்ளே நுழைந் தான்'' சிஸ்டர் இந்தம்மாவோட ரிப்போர்ட் வந்திருக்கு இந்தாங்க அவன் தந்து விட்டுப்போன உறையிலிருந்து ரிப்போரிட்டை உருவினாள்.

''உங்களுக்கு சுகர் ரொம்ப சாஸ்தியா இருக்கேம்மா? தைராய்டு கூட இருக்கு கிரியேட் டினைன் பாயிண்ட்ஸ் ரொம்ப ரொம்ப கூடி இருக்கே?''

''அப்படீன்னா என்னம்மா... அந்த அம்மாள் அப்பாவியாய் கேட்டாள். உங்க சிறுநீரகங்கள் கடுமையா பாதிக்கப்பட்டிருக்கு லி பிடிட் புரோஃபைல் கூட அதாவது இதயத்துல ஏகப்பட்ட

**''முன்னூறு ரூபாய் பீஸ் கேட்கறீங்களே டாக்டர்...?''**

**''சும்மாவா...தங்கப் பேனாவுல மருந்து எழுதியிருக்கேன்ல...!''**

**-ஜே. தனலட்சுமி,கோவை.**



கெட்ட கொழுப்பு சேர்ந்து போச்சு நீங்க ஹை ரிஸ்க்ல இருக்கிறதா ரிப்போர்ட் வந்திருக்கு''

அந்த அம்மாள் மூன்று நாட்கள் முன்பு தான் பாத்ரூமில் வழுக்கி விழுந்து இங்கு வந்து சேர்ந்திருந்தாள் ''சிஸ்டர் எனக்கு சுகரே இல்லை சிறுநீரகம், தைராய்டு, இதய பாதிப்புன்னு என்னென் னமோ சொல்றீங்களே?''

விட்டால் நாள் கூட அக்குசெக்கை பயன்படுத்தி இந்தம்மா வின் கையில் குத்தி உடனடி ரத்தப்பரிசோதனை செய்தேனே? சுகர் நார்மலாகத் தானே இருந்தது. இரண்டை நாட்களில் சுகர் எப்படி நானூத்திப்பத்தைத் தாண்டியது? ஹாஸ்பிட்டலில் மருத்துவக்கண் காணிப்பில் இருக்கும் போது சுகர் எகிற வாய்ப்பே இல்லையே? ரிப்போர்ட்டில் ஏதே தவறு நடந்திருக்கிறது. சிறுநீரகங்கள் கடுமை யாக பாதிக்கப்படிருக்கிறதாக ரிப்போர்ட் வந்துள்ளதே அதுவும் தவ றாகத்தானே இருக்கும் அப்படியென்றால் லிபிட் புரோபைல் இதய பாதிப்பு என்பதும் தவறு தானே ரிப்போர்ட்டில் ஏதாவது ஒரு பரிசோ தனை முடிவு தவறாய் வந்தால் பரவாயில்லை எல்லா டெஸ்ட் ரிச ல்ட்டும் தவறாய் வந்தால் அதற்கு என்ன அர்த்தம்..

சாதாரணமான இடுப்பு வலிக்காக ஒரு பேஷண்ட் சிகிச்சை பெற் றுக்கொண்டு அந்த நோயாளிக்கு அடுக்கடுக்காய் எல்லா உறுப்பு களும் பாதிக்கப்பட்டதாய் கூறி அதற்கான ட்ரீட்மெண்ட்டை எடுக் கச் சொல்லி நிர்பந்திக்கப் போகிறார்கள்...

இதனால் தண்ணீரால் செலவளித்து...இந்த ஹாஸ்பிடலில் பணத்தைக் கொண்டு வந்து கொட்டட்டும் என்று தானே இந்த ஏற்பாடு ....

பாவம் அந்த பேஷண்ட் இல்லாத வியாதிகளைச் சொல்லி பயமுறுத்தினால் மனரீதியாக உடல் ரீதியாக பாதிக்கப்படுவாரே ....

**நகச்சுற்றுக்கு பரங்கிப்பட்டையை தண்ணீர் விட்டு உறைத்து எலுமிச்சம் பழச்சாறு கலந்து நகத்தின் மீது தடவி வந்தால் நகச் சுற்று வடிந்து குணமாகும்.**

**-சா. இரா. மணி, வந்தவாசி.**

**பற்கள் உறுதியுடன் திகழ பூண்டை வேகவைத்து வெந்நீரில் கலந்து வாய் கொப்பளித்துவந்தால் பற்களுடன் ஈறுகளும் பலமடையும்.**
**-சா. இரா. மணி, வந்தவாசி.**

இந்த ஹாஸ்பிடலைப் பற்றி எவ்வளவோ உயர்வாக நான் கருதியிருந்தேனே எதற்கும்... மீண்டும் அக்கு செக்கை பயன்படுத்தி இந்தம் மாவுக்கு சுகர் பரிசோதனை செய்து பார்த்து விடலாம்.

அவள் நினைத்தது சரிதான்... சுகர் 102 தான் இருந்தது பீதியுடன் அவனையே பார்த்துக்கொண்டிருந்த அந்தப்பெண்மணியின் கையை ஆதுரமாய் பற்றினாள் வந்தனா.. ''கவலை படாதீங்கம்மா... சுகர் உங்களுக்கு நார்மலாத்தான் இருக்கு உங்க உடம்புக்கு ஒண்ணுமில்லை...''

''அப்போ சிறுநீரக பாதிப்பு, இதயம் பாதிப்பு, தைராய்டு எல்லாம்... உங்களுக்கு நார்மல் தான் ரிப்போர்ட் தப்பா வந்திருக்கு...''

''என்னம்மா இது? இல்லாத நோயை எல்லாம் இருக்கிறதா சொல்றாங்களேம்மா ரொம்ப அநியாயமா இருக்கே நம்பி இந்த ஆஸ்பத்திரிக்கு வந்தா இப்படியே பண்ணுவாங்கயா அந்த அம்மாள் புலம்பினாள்.

''இதைப்பத்தி... நீங்க வேறயாருகிட்டேயும் டிஸ்கஸ் பண்ணிக்காதீங்க... வேற நர்ஸோ, டாக்டரோ வந்து அந்த ரிப்போர்ட்டுல் இப்படி வருந்திருக்கே அதுக்கு ட்ரீமென்ட் எடுத்துக்கிடறீங்களா?ன்னு டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்குப்போயிட்டு பணத்தைப் புரட்டிட்டு வர்றோம்னு சொல்லி சமாளிங்க...'' ''சிஸ்டர் நீங்க நல்லா இருக்கணும் உள்ளதை எடுத்துச் சொல்லி நல்ல விதமா ஐடியாவும் குடுத்துடீங்க நான் நல்லாயிருக்கணும் நீங்க மட்டும் உண்மையை சொல்லலைன்னா பயத்துலேயும் அதிர்ச்சியிலேயேயும் நிஜமாவே எனக்கு மாரடைப்பு வந்திருக்கும் சிஸ்டர்!

''ரிலாக்ஸ்டா இருங்கம்மா. தயவு செஞ்சு இதுல என் பேரை இழுத்து விட்டுடாதீங்க....''

''ஐயோ... என்ன சிஸ்டர் நீங்க? நான் யாரு கிட்டேயும் மூச்சே விட மாட்டேன்''

அந்த அம்மாளுக்கு பி.பி. பரிசோதித்து விட்டு கேஸ் ஷீட்டில் எழுதி வைத்து அந்த அறையை விட்டு வெளியேறினாள் வந்தனா.

விதி விகாரமாய் சிரித்தபடி.... அவளைப் பின் தொடர்ந்து வந்தது.

# 11

வந்தனாவின் தலைக்குள் வண்டு குடைந்தது. இந்த பிரபலமான ஹாஸ்பிடலில்... டாக்டர் முகேஷ் மட்டும் தான் மட்டமான ஈனப்பிறவி என்று நினைத் தேனே? இங்கு பெரிய அநியாயம் நடந்து கொண்டிருக்கிறதே? மருத்துவத் தொழில் உயிர் காக்கும் புனிதமான தொழிலாயிற்றே?

பணத்திற்காக.. விலை மதிப்பில்லாத உயிர்களோடு விளையாடு கிறார்களே? யார் எக்கேடு கெட்டு.. உயிரை விட்டால் என்ன? எங் களுக்கு கட்டு கட்டாய் பணம் வர வேண்டும். பணம் சம்பாதிப்பதற் காகத் தான்... ஹாஸ்பிடலையே கட்டி இருக்கிறார்கள் போலும்.!

மனிதாபிமானம் என்றால்... கிலோ என்ன விலை? என்று கேட்கும் கயவர்கள்.! 'ரமணா' படத்தில் இதைப் போன்று அக் கிரமங்களைப் பற்றி தோலுரித் துக் காட்டினார்களே? நேரடி யாக.. கண் கூடாகப் பார்க்கும் போது மனம் எரிமலையாய் குமுறுகிறது.

இந்த அநியாயத்தை என்னால் தட்டிக் கேட்க முடியுமா?

பணம் பலம் ஆள்பலம் செல்வாக்கு மிகுந்தவர்களிடம். தனி மனுஷி மோதிப் பார்க்க

**''உன் கணவர் ரொம்ப முன் ஜாக்கிரதைனு எப்படிச் செ ால்றே?''**

**''கிரைண்டர் இருக்குற ஹோ ட்டலா பாத்து தான் காசில்லாம சாப்பிட போவாரு...''**

**-பர்வீன் யூனஸ், சென்னை.**



முடியுமா?

எதற்கு வம்பை விலை குடுத்து வாங்கினாய் வந்தனா?

துஷ்டனைக் கண்டா. தூர விலகணும். கெட்டதைப் பார்த்தா... எட்டப் போயிடணும்! என்று அடிக்கடி சொல்வாரே அப்பா? அனு தினமும் அந்தப் பொறுக்கி முகேஷை சமாளிப்பதும் பெரும் பாடாய் இருக்கிறது.

சட்டென்று ரிஸைன் செய்தால்.. சர்ட்டிபிகேட்ஸை தராமல் இழுத்தடிப்பார்களே? மூன்று மாதத்திற்கு முன் நோட்டீஸ் தர வேண்டும் என்று ஒரு நிபந்தனைகள் விதித்திருக்கிறார்களே? பாவி கள்.! நாளைக்கே நோட்டீஸைக் கொடுத்து விடலாம். மூன்று மாதத் திற்குப் பல்லைக்கடித்துக் கொண்டு சமாளிக்க வேண்டியது தான்.... இப்போது இந்த அக்கிரமம் வெளியில் தெரிந்ததிலிருந்து தணல் மீது நின்று கொண்டிருப்பதைப் போன்று தவிப்பாய் இருக்கிறதே?

குமுதாவிடம் இதைப் பற்றிக் கூறினால்.. அவள் சட்டையே செய் யவில்லையே? இதெல்லாம்.. இப்போ எல்லா ஹாஸ்பிடல்லேயும் சகஜமா நடக்குதுடி.

இதுக்கு மேலேயும் நடக்குது... என்னைர் கேட்டா.. இது ஒரு பெரிய விஷயமே இல்லை.. ரிலாக்ஸ்டா இரு. அவசரப்பட்டு நோட் டீஸ் எதுவும் தராதே.... இங்கே வேலை கிடைச்சதே பெரிய விஷ யம்டி.. நீ ஆசைப்பட்டு தானே இங்கு வந்து சேர்ந்தே.. அதை மறந்து டாதே வந்தனா! என்கிறாளே குமுதா?

அவளுக்கு என்ன? அவளுக்கு ஒரு பிரச்சினையும் இல்லை.. மனதிலும் எந்த நெருடலும் இல்லை. அவள் இங்கு இருந்து விட்டுப் போகட்டும். என்னால்.. தாக்குப்பிடிக்கவே முடியாது. மூன்று மாதங் களை எப்படித்தள்ளப் போகிறோம் என்று நினைத்தாலே பிரமிப்

**அரிசி களைந்த நீரில் உருளை, சேனை, கருணை போன்ற கிழங்குகளை வேக வைத்தால் சத்து கூடும். கிழங்கின் சுவையும் அருமையாக இருக்கும்.**

**-ஆர். பிரபா, திருநெல்வேலி.**

பாக இருக்கிறது.

அப்பாவிடம் மனம்விட்டு எல்லாவற்றையும் கொட்டித் தீர்த்தால்.... நான் எடுத்த முடிவு சரிதான் என்று அப்பா ஒப்புக்கொள்வார்.

அதிலும் முகேஷ் விஷயம் தெரிய வந்தால் இப்பவே புறப்பட்டு வந்துவிடு என்று கூறி விடுவாரே?

முடிவுக்கு வந்தவளாய்... ஒரு வெள்ளைக் காகிதத்தை எடுத்து மளமளவென்று எழுதி முடித்து ஒரு உறையிலிட்டு ஹேண்ட் பேக்கில் வைத்தாள்.

'அப்பாடா' என்றொரு நிம்மதி ஜனித்தது நிஜம்! மறுநாள் கவரை அலுவலகத்தில் ஒப்படைத்தாள்.

முகேஷ் இதுவரை ஹாஸ்பிடலுக்கு வரவில்லை. அவன் ஆடி அசைந்து பத்தரை மணிக்கு தான் நிதானமாய் வருவான்.

கீழ் தளத்திலிருந்து ஜெனரல் வார்டில் நோயாளிகளை அவள் வரிசையாய் கவனித்துக் கொண்டிருந்தாள்.

கடைசி பெட்டிலிருந்த பேஷன்ட் அருகே சென்று அவருக்கு 'டெம்ப்ரேச்சர்' பார்த்துக் கொண்டிருந்தபோது... வார்டு பாய் மூச்சிரைக்க ஓடிவந்தான்.

''சிஸ்டர்! உங்களை முகேஷ் டாக்டர் உடனே வரச் சொன்னாரு.'' என்றான்.

கேஸ் ஷீட்டில் எழுதி வைத்துவிட்டு வேண்டா வெறுப்பாக முகேஷின் அறையை நோக்கிச் சென்றாள். அவனிடம் வந்ததும் வராததுமாய். வந்தனாவின் நோட்டீஸைப் பற்றி வத்தி வைத்து விட்டார்கள் போலும்!

''குட்மார்னிங் டாக்டர்!''

''மார்னிங்! என்ன வந்தனா? ஹாஸ்பிடலுக்குள்ளே நுழைஞ்சதுமே... எனக்கு ஷாக் கொடுத்துட்டே?''

''அது வந்து....''

பதில் சொல்ல முடியாமல் திணறினாள்.

அவளுக்கு பொய் பேச வராதே? உண்மையை இந்தப் பொறுக்கியிடம் சொல்லவும் முடியாதே?

"கம் அவுட் வந்தனா? இங்க என்ன பிரச்சினை உனக்கு?"

"ஒரு பிரச்சினையும் இல்ல சார்?"

"ரிஸைன் பண்றதுக்கு ஒரு காரணம் இருக்கணும் இல்ல?"

"எ... எங்கப்பாவுக்கு உடம்பு சரியில்ல சார்.! வயசானவரு... கவனிக்கவும் சமைச்சுப் போடவும் ஆள் இல்லாம தனியா கஷ்டப்படறாரு... அதனா..."

"எல்லாம் தெரிஞ்சுதானே.. இங்க வந்து சேர்ந்தே? சும்மா சப்பைக் கட்டு கட்டாதே வந்தனா! உண்மையான காரணத்தைச் சொல்லு.!"

"வந்து சேர்ந்ததிலேருந்து.. எனக்கு அப்பாவை நெனச்சு. மனசு சங்கடப்படுது... நிம்மதியாவே இருக்க முடியலை...."

"உங்கப்பாவுக்கு உடம்புக்கு சுகமில்லைன்னா.... நம்ம ஹாஸ்பிடல்லே அவரை அட்மிட் பண்ணலாமில்ல? அவருக்கு ராஜ வைத்தியம் பண்ணி குணப்படுத்திடலாமே?"

"இல்ல டாக்டர்! அது சரிப்பட்டு வராது... எங்கப்பாவே போன் பண்ணி ரிஸைன் பண்ணிட்டு வரச் சொல்லிட்டாரு..."

"பேசாம உங்கப்பாவை இங்க வரச் சொல்லிடேன். உங்களுக்கு தங்கறதுக்கு வீட்டை அரேஞ்ச் பண்ணிடறேன். இந்த ஹாஸ்பிடலுக்குப் பின்னாடி இருக்கிற கெஸ்ட் ஹவுஸ்லே தங்கிக்கோங்க..."

"இல்ல டாக்டர்.. திருப்போ

"உங்க படத்துல ஹீரோவை ஏன் கடைசியில சாகடிச்சீங்க?"

"டெய்லி ஷீட்டிங்குக்கு லேட்டா வந்து கடுப்பேத்தின ஆளை வேற எப்படி பழி வாங் கறதாம்?..."

**–பர்வீன் யூனுஸ், சென்னை.**



அருகம்புல் பறித்து துண்டுகளாக்கி நல்லெண்ணெயில் போட்டு வெயிலில் 10 நாட்கள் காய வைக்கவும். பின்னர் அந்த எண்ணெயை தலைக்கு தடவி குளித்து வந்தால் நரை நீங்கும்.

-ஆர். பிரபா, திருநெல்வேலி.

ரூர்லே சொந்த வீடு இருக்கு தான் வாழ்ந்த வீட்டை விட்டு வர்துக்கு அப்பா சம்மதிக்கவே மாட்டாரு... நான் ஏற்கனவே இதைப்பத்தி அவருகிட்டே கேட்டுப் பார்த்துட்டேன்...'' அவள் முற்றுப்புள்ளி வைப்பதிலேயே குறியாய் இருந்தாள். முகேஷ் அவளை முற்றுப் புள்ளி வைக்கவிடாமல் 'கமா' போட்டுக் கொண்டிருந்தான்.

''இப்படியொரு கேண்டிடேட்டை மிஸ் பண்றதுக்கு யாருக்குமே மனசு வராது. இங்கேயே நீ கன்டினியூ பண்ணினா.... உன்னோட பியூச்சர் பிரைட்டா இருக்கும். அதனால அவசரப்படாம நிதானமா யோசி.. ஏதாவதொரு வழி கிடைக்கும்... தொடர்ந்து நீ இங்கே தான் நீடிச்சு ஒர்க் பண்ணணும்.''

உத்தரவிடுவது போல் பேசினான் முகேஷ்.

''நீ இல்லாட்டி.. எனக்கு வலது கையே ஒடிஞ்ச மாதிரி இருக்குமே வந்தனா? என்னோட பீலிங்கை நீ புரிஞ்சுக்கவே மாட்டியா?'' கொஞ்சலாய் பேசினான் முகேஷ்.

அவளுக்குள் கோபம் கொந்தளித்தது.

'பளார்... பளார், என்று நான்கு அறைகள் விடலாமா? என்று கை பரபரத்தது.

''உன்னைப் போக விட மாட்டேன்.. ஐ மீன்.. இந்த ஹாஸ்பிடல் உன்னைப் போக விடாது'' என்று கூறிவிட்டு பகபகவென்று சிரித் தான்.

'ஒரிஜினல் சர்ட்டிபிகேட்ஸ் இவனிடம் மாட்டிக் கொண்டதே?

எப்படி நான் இங்கிருந்து போகப் போகிறேன்? என்ன செய்வது? திகில் அவளுக்குள் கிளை விட்டுப் படர்ந்தது.

# 12

இரு தினங்கள் கடந்திருக்கும்.

அன்று முகேஷ் வந்தவுடன் அவளுக்கு உத்தரவு பிறப்பித்தான்.

''நாளைக்கு எங்க பங்களாவுல உனக்கு டியூட்டி! என்னோட அப்பாவுக்கு உடம்பு சரியில்லை. பீவர் தான்..! கிட்டத்துல இருந்து கவனிச்சுக்கணும்..''

''டாக்டர்! நானா? நான் மட்டும் தனியாவா?'' பயந்து போனாள் வந்தனா.

''உன் கூட சீனியர் நர்ஸ் வருவாங்க... எங்கப்பா இந்த ஹாஸ்பிடலோட எம்.டி.! தெரியுமில்ல? அவரை கவனிக்கிறதுக்கு.. நான் கை சொடுக்கினா.. ஆயிரம் பேர் ஓடி வருவாங்க.

ஆனா நான் உன்னை செலக்ட் பண்ணியிருக்கேன். என் கிட்டேயிருந்து உனக்கு ஸ்பெஷல் சலுகைகள் கிடைச்சுட்டிருக்கு... ஏன் அதைப் புரிஞ்சுக்க மாட்டேங்கிறே?''

''ஓ.கே. டாக்டர்!''

''குட்..''

எல்லாம் என் தலையெழுத்து.. இன்னும் மூன்று மாதங்களுக்கு எனக்கு அவஸ்தை தான்...

சீனியர் நர்ஸ் தான் துணைக்கு வருகிறாரே? அப்புறம் என்ன? யார் துணைக்கு வந்தாலும் சரி... வராவிட்டாலும் சரி... தைரியமாய் எதிர்கொள்ள வேண்டியது தான்.!

தனக்குத் தானே சமாதானப்படுத்திக் கொண்டாள். என்னதான் சமாதானப்படுத்திக் கொண்டாலும்.. மனம் திக் திக் என்று அடித்துக்

**வாழை இலையில் சாப்பிட்டால் உணவுக்கு கூடுதல் மணத்தை தருவதோடு உடலுக்கு குளிர்ச்சி தரும். ஆயுளை அதிகரிக்கும் தன்மை கொண்டது.**

**-சு. கண்ணகி, வேலூர்.**

கொள்ளத்தான் செய்தது.

'பேசாமல் இன்றே பெட்டி படுக்கையைத் தூக்கிக் கொண்டு ஊருக்குப் போய் விடலாமா? சர்ட்டிபிகேட்ஸ் போனால் போகட்டும் என்று போய் விட்டால் என்ன? வருணை ஒரு தலையாய் நேசிக்கி றேன். வருணுக்கு மனதில் இடமளித்து விட்டு வேறு யாருக்காவது நான் கழுத்தை நீட்ட முடியுமா?

நான் திருமணமே செய்து கொள்ளப் போவதில்லை. சொந்தக் காலில் நின்று சுயமாய் சம்பாதித்து தான் காலத்தை கடத்தியாக வேண்டும். அதற்கு.. சர்ட்டிபிகேட்ஸ் இருந்தால் தானே வேறு வேலையில் நான் சேர முடியும்? மூன்று மாதங்களுக்கு பொறுமை யாய் இருந்து சர்ட்டிபிகேட்ஸைப் பெற்றுக் கொண்டு வெளியேறும் வழியைப் பார்க்க வேண்டும்.

வேறு வழி இல்லை.

மறுநாள் மருத்துவமனையின் வளாகத்தில் ஒரு பெரிய படகுக் கார் காத்துக் கொண்டிருந்தது.

இவளும் சீனியர் நர்சுமாய் காரில் ஏறிக் கொண்டனர். பாண் டிச்சேரி கடலோரமாய்... ஏகாந்தமாய் பிரமாண்டமாய் இருந்த பெரிய பங்களாவின் போர்ட்டிகோவில் போய் கார் நின்றது.

அந்த எம்.டி.க்கு லேசான காய்ச்சல் தான். ''இது சாதாரணமான வைரஸ் பீவர் தான். நானும் ஒரு டாக்டர் தானே? இதைப் போயி முகேஷ் பெரிசுபடுத்திட்டானே? நான் டேப்ளட்ஸ் போட்டுக்கிட்டு ரெஸ்ட் எடுக்கிறேன். நீங்க கொஞ்ச நேரம் இருந்துட்டு கிளம் புங்க....'' என்று கூறிவிட்டு தனது அறைக்குள் புகுந்து கொண்டார்.

வீட்டு வேலைக்காரனிடம் பங்களா முழுவதையும் சுற்றிக் காட் டும்படி முகேஷ் உத்தரவிட்டிருந்தான் போலும். எதற்கு இந்த வீண் வேலை. தனக்குள் முனகிக் கொண்டாள். வேறு வழியின்றி இருவரும் அந்த வேலைக்காரனைப் பின் தொடர்ந்து பங்களா முழு வதும் சுற்றி வந்தனர்.

''அப்போ நாம்ப கிளம்பலாமா சிஸ்டர்?''

வந்தனாவுக்கு இருப்பு கொள்ளாமல்... கேட்டு விட்டாள்.

மீண்டும் காரிலேறி மருத்துவமனைக்கே வந்து விட்டனர். வந்து இறங்கிய செய்தி. மறுகணமே முகேஷின் செவிக்கு எட்டிவிட்டது.

வந்தனாவுக்கு அழைப்பு விடுத்தான் முகேஷ்.

'சே! தடிப்பயல்.. பொறுக்கி ராஸ்கல்.. இப்போ எதுக்காக கூப்பிட றான்னு தெரியலையே?'

மனதிக்குள் வசைமாரி பொழிந்தபடி முகேஷின் அறைக்குச் சென் றாள்.

''வா வந்தனா! டேக் யுவர் ஸீட்!''

ஒரு நாளும் இல்லாத திருநாளாய் எதற்கு என்னை அமரச் சொல் கிறான்?

''பரவாயில்ல டாக்டர்! சொல்லுங்க..''

''இது நாள் வரை சுத்தி வளைச்சுப் பேசி. என் மனசைக் கோடி காட்டினேன். நீ புரிஞ்சுக்கலை. நீ சரின்னு ஒரு வார்த்தை சொல்லு. உன்னைக் காலமெல்லாம் மகாராணி மாதிரி வச்சுக் காப்பாத்தறேன். ஐ லைக் யூ ஸோ மச்! இந்த மாதிரியான வரத்துக்காக. எத்தனை பேரு காத்துட்டிருக்காங்க தெரியுமா? யூ ஆர் ஸோ லக்கி!''

பேசியபடி எழுந்து டேபிளை சுற்றி வந்து வந்தனாவின் சமீபமாய் நின்றான்.

**''இவன் தலைவரோட பையனா?''**

**''எப்படி கண்டுபிடிச்சீங்க..?''**

**''தமிழில அதிகம் விற்பனை ஆகும் பத்திரிகை எதுனு கேட்டா குற்றப் பத்திரிகைங்கறானே''**

**-பர்வீன் யூனுஸ், சென்னை.**



''மகாராணி மாதிரி வச்சுக் காப்பாத்தறேன்னு சொல்றீங்க. கீப்பா வச்சுக்கப் போறீங்களா?''

பளிச்சென்று கேட்டுவிட்டு.. உறுத்துப்பார்த்தாள்.

''எனக்கு கல்யாணம் ஆகி நாலு வயசுல பொண்ணு இருக்கா. ரெண்டாவது கல் யாணம் பண்ணினா.. அது சட்டப்படி குற்றமாச்சே?

''அதனால சட்டத்திற்குப்பு றம்பா. உங்க ஆசை நாயகியா இருக்கச் சொல்றீங்களா?''

''என்னோட பங்களாவைப் பார்த்தேயில்ல? அதே மாதிரி பங்களாவுல உன்னை ராணி

மாதிரி வச்சு.. தங்க நகைகளாலே தலையிலேருந்து கால்வரை இழைச்சு அழகு பார்ப்பேன்.

ஆசை நாயகின்னு ஏன் சொல்றே? என்னோட அபிமான தேவதைன்னு நெனச்சு சந்தோஷப்படு.''

''ஸ்டாப் இட்! கேட்கவே நாராசமா இருக்கு. இதுவே வேற யாராச்சும் இருந்திருந்தா. முகத்துல அறைஞ்சுட்டுப் போயிருப்பேன். இதுக்கு வேற ஆளைப் பாருங்க.. உங்க திசைக்கு ஒரு கும்பிடு!.. சே..! என்னோட சுப்பிரீயர் அத்தாரிட்டிங்கிற தால.. உங்களை சும்மா விடறேன்..''

ஆள் காட்டி விரலை நீட்டி எச்சரித்து விட்டு.. விருட்டென்று வெளியேறினாள்.

## 13

**நே**ற்று மாலையில்..தொழிலதிபர் சிவசங்கர் அரவிந்த் அன்னை ஆசிரமத்திற்கு வந்திருந்தார்.

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அவர் இங்கு வந்து தியானம் செய்துவிட்டு போவது வழக்கம்.

நேற்றைய தினம் அவருக்கு லேசான தலை சுற்றல் கை கால்களில் ஒரு பட படப்பு..

சட்டென்று அவர் இந்த மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெற்றுக் கொண்டார்.

''தொழிலதிபர் என்பதால் வி.ஐ.பி. பேஷன்ட் என்ற அந்தஸ்தோடு தடபுடலாய்.. அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

டாக்டர்கள் குழு நர்ஸ் குழு என்று பட்டாளமாய் சூழ்ந்து அவரை

***சா**ம்பார் நன்கு கொதித்து இறக்கியதும் அதில் ஒரு ஸ்பூன் தேங்காய் எண்ணெய், கறிவேப்பிலை கலந்து மூடி வைக்கவும். மணம், சுவை கூடும்.*

**-ஆர். பிரபா, திருநெல்வேலி.**

**சிறு நீரக் கோளாறு உள்ளவர்கள் சல்பா மாத்திரைகளை அதிகம் சாப்பிடக் கூடாது. அதிகமாக தண்ணீர் பருக வேண்டும்.**

**-கே. கவிதா, வேலூர்.**

கவனித்துக் கொண்டனர்.

சிவசங்கரின் பார்வை.. ஒரே ஒரு இளம் பெண் மீது தான் நிலைத்திருந்தது.

அவள்.. வேறு யாருமில்லை!

வந்தனா தான்.

சிவசங்கருக்கு தமது மகன் வருணை நினைத்து பெரிய கவலை..

வர வர அவன் போக்கு சரியில்லை.

ஊர் ஊராக சுற்றித்திரிகிறான்.

சித்தம்போக்கு சிவன் போக்கு என்று இருக்கிறான். எதிலும் பட்டும் படாமலும் கல்யாணத்திற்கு சம்மதிக்காமலேயே இருக்கிறானே?''

அவன் ஊரில் இல்லாத போது.. ஒரு நாள் அவனது அறைக்குள் புகுந்தார்.

வந்தனாவின் ஆளுயர ஓவியத்தைக் கண் கொட்டாமல் பார்த்தார்.''

யார் இந்தப் பெண்?

ஒரு வேளை.. வருணின் கற்பனையில் உதித்த அழகியோ?

''அல்லது.. வருண் இவளை எங்கோ சந்தித்து மனதைப் பறி கொடுத்து விட்டானா?''

''அப்படியென்றால்.. இதைப் பற்றி என்னிடம் சொல்வதற்கு அவனுக்கு என்ன தயக்கம்.''

''ஒரு வேளை.. இந்தப் பெண் வருணின் காதலை ஏற்றுக் கொள்ளவில்லையோ?''

''அப்புறம் என்ன தடை அவனுக்கு? ஏன் என்னிடம் இதைப் பற்றி அவன் சொல்லவில்லை.''

''இன்று இரவு அவனிடமிருந்து, போன் வரும்போது இந்த ஓவியத்தைப் பற்றி அவனிடம் கேட்டு விட வேண்டியது தான்..''

''கேட்டால் உண்மையைச் சொல்வானா? என்று தெரிய வில்லையே?''

''கடைசியில் நான் சந்தேகப்பட்டது போலவே.. அப்பா! அது என்னோட கற்பனையில் வரைஞ்ச ஓவியம் அப்பா..! என்று அந்தப் பேச்சுக்கே முற்றுப் புள்ளி வைத்து விட்டானே?''

'' அந்த ஓவியத்திலிருந்த பெண்.. நர்ஸ் உடையில் இந்த ஹாஸ்பிட் லில் இருக்கிறாளே?''

''அவள் தானா இவள்?''

''அல்லது அவளது ஜாடையிலிருக்கும் வேறொரு பெண்ணா?''

சிவசங்கர் தனது பி.ஏ.விடம் உத்தரவைப் பிறப்பித்தார்.

''அந்தப் பெண்ணின் புள்ளி விவரங்களை சேகரித்துக் கொண்டு வரும்படி கட்டளையிட்டிருந்தார்.''

பி.ஏ. அவசரமாய் ஓடினான்.

பணம் பாதாளம் வரைக்கும் பாயும் என்று சொல்வார்கள் பணக் காரர்கள் நினைத்தால்.. நொடிப் பொழுதில் நினைத்த காரியம் ஈடேறும்.

பி.ஏ...வந்தனாவின் பயோடேட்டாவையே கலெக்ட் பண்ணிக் கொண்டு வந்து விட்டிருந்தான்.

அவளது செல் போன் நம்பரிலிருந்து வீட்டு முகவரியிலிருந்து அனைத்து விவரங்களும் அடங்கியிருந்ததை ஒரு பார்வை பார்த்துக் கொண்டார்.

பி.பி. கூடியதால் சின்ன தலை சுற்றல் தான் அன்றிரவே.. அவர் ஆஸ்பத்திரியை விட்டு புறப்பட்டு விட்டிருந்தார்.

ரிசப்ஷனில்.. கேஸ் ஷீட்டை வைத்துக் கொண்டு வந்தனா யாரோ ஒரு வெளி நோயாளிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

ஏதோ மாத்திரையைக் காட்டி அந்த நோயாளி கேட்டதற்கு.. பொறு மையாய் மரியாதையாய் பதில் சொல்லிய வண்ணம் இருந்தாள்.

நின்று நிதானித்து அவளை ஏற இறங்க சிவசங்கர் ஒரு கணம் பார்த்தார். அவர் தன்னைக் கூர்ந்து பார்ப்பதை வந்தனா கவனிக்கவே இல்லை.

''தான் உண்டு தன் வேலை உண்டு என்று அவள் கடமையிலேயே கண்ணாய் இருந்த விதம்.. அவருக்கு நிரம்பவே பிடித்திருந்தது.''

''முகத்தில் ஒரு திருப்தி பரவ..யோசனையுடன் அவளைத் தாண்டி.. ஆஸ்பத்திரி வளாகத்திலிருந்த காரில் ஏறினார்.. ''பெயர் என்ன? வந்தனாவா?''

''வருண்.. வந்தனா..!''

''பெயர் பொருத்தம் நன்றாய் தான் இருக்கிறது.''

''பெயரில் மட்டுமல்ல.. உருவத்திலும் இருவருக்குமே நல்ல ஜோடிப் பொருத்தம் தான்..''

''வந்தனாவைப் பற்றி வருணிடம். போனில் சொல்லலாமா?''

''ஊகூம் இதை நான் நேரடியாகப் பேச வேண்டும். ஒன்று அவன் இவளைக் காதலித்திருக்க வேண்டும் ஏதோஒரு தடை அவனுக்கு இருக்கிறது.''

''அது என்ன? என்று தெரிந்து கொள்ள வேண்டும். அல்லது.. நிஜமாகவே.. வந்தனா அவனது கற்பனை ஓவியமாய் இருந்து விட்டால்..''

''பரவாயில்லை..''

''கற்பனையோ கை வந்ததோ?''

''சொர்க்கத்தில் காணாத சுகமோ சுகம். என்று கவிஞர் பாடி வச்ச மாதிரி உன் ஓவியப் பெண்ணைக் கண்டுபிடித்து நேரில் கொண்டு வந்துவிட்டேன்.''

''கண்டிப்பாய் நீ இவளைக் கல்யாணம் செய்தே தீர வேண்டும் என்று முரண்டு பிடித்து விட வேண்டியது தான்.''

''இனி அவனை.. இப்படியே விட்டு வைக்கக் கூடாது. சந்திரா! நீ தான் தெய்வமா இருந்து நம்ம பையனோட கல்யாணத்தை நடத்தி வைக்கணும்.''

''நம்ம வம்சத்துக்கு வாரிசு தழைக்கணும், வருண் சந்தோஷமா அமோகமா வாழணும்.'' மானசீகமாய் மனைவி சந்திராவிடம்

**மாத விலக்கு காலத்தில் இரத்தம் அதிகம் வெளியேறுவது கூடாது. இப்படி உதிரப்போக்கு அதிகமாக இருந்தால் தூள் செய்த கடுக்காயை பனை வெல்லத்தோடு சேர்த்து ஒரு சிறு உருண்டையை சாப்பிட்டு வத்தால் இரத்தப் போக்கு குறையும்.**

**-கே. பிரபாவதி, மேலகிருஷ்ணன்புதூர்.**

பேசினார்.. சிவசங்கர்.''

# 14

**கோ**பம் கொந்தளிக்க.. நேராக ஹாஸ்டலுக்குப் போய் விட்டாள் வந்தனா..

அப்பாவிடம் முகேஷ் நடந்து கொண்டதைப் பற்றிச் சொல்லி விடலாமா? என்று போனை எடுத்தாள்.

''வேண்டாம் நேரில் சென்று சொல்லிக் கொள்ளலாம் சர்ட்டிபிகேட்ஸ் கிடைக்காவிட்டால்.. போய் தொலையட்டும் ஒரிஜினல் தொலைந்து விட்டது என்று கூறி யுனிவர்சிடிக்கு அப்ளை செய்து மாற்றுச் சான்றிதழுக்கு அலைந்து ஏற்பாடு செய்து கொள்ள வேண்டியது தான்.''

''வேறு வழியில்லை.''

''மணி என்ன? மதியம் இரண்டரை மணி..!

குமுதாவிடம் சொல்லிக் கொண்டு கிளம்பி விடலாம். நான்கு மணிக்கு பஸ் இருக்கிறது. அதைப் பிடித்தால் எட்டு மணிக்குப் போய் விடலாம்.''

''துணிமணிகளை மடக்கி பேக்கிங் செய்ய வேண்டியது தான்.''

குமுதாவுக்கு போன் செய்து பேசினாள்.

பத்தே நிமிடங்களில் குமுதா ஓடோடி வந்து விட்டாள். வந்தனா! உங்கப்பாவுக்கு போன்

''என் கணவர் வேலைக்காரி கிட்ட கெஞ்சி கூத்தாடி வேலை வாங்கிடுவார்''

''பரவாயில்லையே... என் கணவர் கொஞ்சி கூத்தாடி இல்லே வேலை வாங்கறார்?...''

-பர்வீன் யூனுஸ், சென்னை.



பண்ணிட்டியாடி? இல்லைடி.. இனிமே தான் பண்ணணும்.''

''நல்லதா போச்சு..''

சூட்கேஸில் புடவை, சுடிதார்களை அடுக்கிக் கொண்டிருந்த வள்.. நிமிர்ந்து பார்த்தாள்.

''என்னடி சொல்றே?''

''நீ உங்க ஊருக்குப் போக வேணாம்...?''

''பின்னே? ஐயோ.. இனி ஒரு நிமிஷம் கூட என்னால இந்த நரகத்துல இருக்க முடியாது..''

''இங்க இருக்க வேணாம்.. என் கூட எங்க ஊருக்கு வா..''

''எதுக்கு''

''திருவள்ளூருக்கு அப்பாவுக்கு மாற்றலாகி இருக்குல்ல? அது தான்டி எங்க சொந்த ஊரு..! ஊர்லே எங்க குல தெய்வம் பவானி அம்மனுக்கு திருவிழா... நாங்க குடும்பத்தோட போயி பொங்கல் வைப்போம்..

நீயும் வா வந்தனா! திருவிழாவைப் பார்த்த மாதிரி இருக்கும். பொங்கல் வச்சுட்டு

ரெண்டே நாள்லே திரும்பிடலாம்.. நீ நேரா உங்க வீட்டுக்குப் போயிடு.. நான் ஹாஸ்டலுக்கு வந்துடறேன்.''

''எதுக்கு இந்த திடீர் முடிவு?''

''நான் ஏற்கனவே இதைப்பத்தி உன்கிட்டே சொல்லி லீவு போட் டுட்டு உன்னையும் கூட் டிட்டுப் போற ஐடியாவுல தான் இருந் தேன்.''

''அப்பா கிட்டே சொல்றேன்.. அவர் கிட்டே சம்மதம் வாங்கிட்டு வேணா வர்றேன்.''

வந்தனா செல் போனை கையிலெடுத்தாள்.. ''ஏண்டி என் மேல நம்பிக்கை இல்லையா? போன சம்மர் லீவுலே திருவள்ளூரில் பத்து நாள்.தங்கலையா?

எங்க வீட்டுக்கு வரதுக்கு இப்படி தயங்கறே? அஞ்சு வருஷமா பழகறோம்.

நம்ம நட்புக்கு நீ தர்ற மரியாதை இது தானா?''

**கொய்யா இலைக் கொழுந்துகளை உண்டால் நன்கு பசியெடுக்கும்.**

**-கே. கவிதா, வேலூர்.**

அப்பாவுக்கு போயிட்டு வந்து நேர்லே சொல்லிக்க வேண்டியது தானே? இவ்ளோ ஆசை ஆசையா கூப்பிடறேன். என்ன மனசை இப்படி நோகடிக்கிறியே? நான் கொஞ்சம் கூட இதை எதிர்பார்க்கலைடி..

குமுதாவின் குரல் தழுதழுத்தது.

அவளது விழிகளில் கண்ணீர் தளும் பியதைப் பார்த்ததும். பாகாய் மனம் கரைந்து விட்டாள் வந்தனா.

''அடடா என்ன சொல்லிட்டேன்னு இப்படி எமோஷனலா ஆகறே? சரி டி. நான் வரேன்.

உங்க ஊருக்குப் போயிட்டு வந்து.. மொத்தமா சேர்த்து வச்சு அப்பாகிட்டே சொல்லிக்கிறேன்.''

''அப்படி வா வழிக்கு நானும் பேக் பண்ணிடறேன்.'' சந்தோஷமாய் துணிமணிகளை எடுக்கலானாள் குமுதா. இப்படியொரு திருவிழாவை வந்தனா இதுவரை நேரில் பார்த்ததில்லை.

மயிலாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம் என்று கோலா கலமாய் இருந்ததை வேடிக்கை பார்த்துவிட்டு சகலத்தையும் மறந்துவிட்டு குழந்தையாய் குதூகலித்தாள்.

பொங்கல் வைத்து முடித்து பவானி அம்மனை தரிசித்தபோது வந்தனாவின் கண்கள் குளமாகின.

''எனக்கு நல்ல இடத்துல வேலை கிடைக்கணும் அப்பா, வருண் நல்லாயிருக்கணும் எனக்கு நீ தாம்மா துணை.''

மனதார வேண்டிக் கொண்டபோது அவளது வலது கண் துடித்தது. ''பெண்களுக்கு வலது கண் துடித்தால் அது கெட்ட சகுனம் ஆயிற்றே.''

''கெட்டது ஏதோ நடக்கப் போகிறதோ?''

பயத்தில் மனம் குட்டையாய் குழம்பியது.

15

இரவு ஏழு மணிக்கெல்லாம் கோவிலிருந்து வீட்டிற்கு வந்து விட்டார்கள்.

ஏழரைக்குள் சாப்பிட்டு முடித்தனர்.

''ஊருக்கு ஒதுக்குப்புறத்துல ஏகாந்தமா இருக்குடி உங்க வீடு என்றாள்.'' வந்தனா.

''கிளம்பு வந்தனா! உன்னை ஒரு இடத்துக்கு கூட்டிட்டுப் போறேன்.''

''வேணாம்டி ரொம்ப நேரமா நின்று வேடிக்கை பார்த்ததில் கால் வலிக்குது.''

''உன்னோட வேலை விஷயமா ஒருத்தரைப் பார்த்துட்டு வரலாம்.''

''அவங்க மனசு வச்சா. இந்தியாவுல எந்த ஊர்ல வேணும்னாலும் உனக்கு வேலை ஏற்பாடு செய்து தருவாங்க.''

''அவ்ளோ செல்வாக்கு உள்ளவங்களா? என் கிட்டே ஒரிஜினல் சர்ட்டிவிகேட்ஸ் இல்லையே? அக்செப்ட் பண்ணிப்பாங்களா?''

ஆர்வமாய் வெகுளியாய் கேட்டாள் வந்தனா..

''வா போகலாம்.''

இருவரும் நடந்தார்கள்.

''அவங்க வீடு எங்கே இருக்கு? கூப்பிடு தொலைவுல ஒரு வீட்டையும் காணோம்?''

''அதோ தூரத்துல தெரியுது பாரு அந்த பங்களா தான்.''

தூரத்தில் விளக்கு வெளிச்சத்தோட தெரிந்த பங்களாவைப் பார்த்

**முருங்கைக் கீரையுடன் தேங்காய், துவரம்பருப்பு ஆகியவற்றை சேர்த்து பொரியல் செய்து நாள்தோறும் சாப்பிட்டால் தாய்மார்களுக்கு தாய்ப்பால் சுரக்கும்.**

**-சு. கண்ணகி, வேலூர்.**

தபோது சில்லென்று பயம் பிடரியை வருடியது.

''காலையில் பார்த்துக்கலாமேடி.''

''அவங்க காலையில கிளம்பிப் போயிடுவாங்க. அவங்க ரொம்ப பிஸியானவங்க விட்டா பிடிக்க முடியாது டி.''

''நான் இருக்கேனில்ல.. ஏன் பயப்படறே?''

சவுக்கு மரங்கள் காற்றில் பேயாட்டம் போட்டன.

''வடநாட்டு பாணியில் மாராப்பு போட்டு புடவை கட்டியிருந்த.. நடுத்தர வயதைத் தாண்டிய பெண்மணி கதவைத் திறந்தாள்.''

வெற்றிலை போட்டு சிவப்பேறிய உதடுகள்.

''ஆவோ பேட்டி! அந்தர் ஆவோ!''

குமுதாவைப் பார்த்து பரிச்சயமாய் சிரித்தாள்.

''உள்ளே போடி.. ஏன் தயங்கறே? தயக்கமாய் உள்ளே மூன்றடிகள் எடுத்து வைத்தாள் வந்தனா.

அந்த பங்களாவின் அமைப்பு அந்த பெண்மணியின் தோற்றம் அந்த சூழ்நிலை எல்லாமாய் சேர்ந்து வந்தனாவை மிரள வைத்தது.

''குமுதா வாடி போகலாம்..'' எனக்கு ஒரு வேலையும் வேணாம். யார் தயவும் தேவையில்லை.. என்ற படி திரும்பிப் பார்த்தாள்.

அங்கே குமுதாவைக்காணோம்.

அந்த வடநாட்டுப் பெண்மணி சிரித்தபடி ஒரு அறைக்குள் புகுந்தாள்.

மாடிப் படிகளில் நிதானமாய் இறங்கி வந்து கொண்டிருந்தான். முகேஷ்.

அவனைப் பார்த்ததும் வந்தனாவுக்கு சகலமும் புரிந்துவிட்டது.

''குமுதா பச்சைத்துரோகியாய் மாறி என் முதுகில் குத்திவிட்டாளே?''

**''இது முதியோர்களுக்கான பட்டி மன்றம்னு எப்படி சொல்றே?''**

**''கவர்ச்சியில் மிஞ்சி நிற்பது சரோஜா தேவியா... அஞ்சலி தேவியானு பேசுறாங்களே...''**

**-பர்வீன் யூனுஸ், சென்னை.**



''யாரையோ விரும்புவதாகக் கூறினாளே? அது அப்பட்டமான பொய்.''

''அடிக்கடி செயின், பிரேஸ்லெட் எல்லாம் காதலன் அவளுக்கு பரிசாய் முகேஷ் தான் முன்கூட்டியே அவளுக்கு போட்டிருந் தானோ?''

''இப்பேர்ப்பட்ட துரோகம் இழைப்பதற்கு முகேஷ் தான் முன் கூட்டியே அவளுக்கு தந்திருக்கிறான்.''

''பாவி.. நம்பி வந்தவளை இப்படியா மோசம் செய்வது படு குழியில் நரகத்தில் என்னைத் தள்ளிவிட்டு விட்டுப் போய் விட் டாளே?''

''இத்தனை வருஷமாய் பழகியும் அவளுக்குள் இருந்த வஞ்சம் எனக்குப் புரியவில்லையே?''

''அப்பாவிடம் போனில் ஒரு வார்த்தை கூட சொல்லாமல் கிளம்பி வந்தது எவ்வளவு பெரிய பிசகு.''

''சற்று நேரத்திற்கு முன் அம்மனின் சன்னிதானத்தில் வலது கண் துடித்ததே?''

''இதற்குத் தானா?''

''கடவுளே. என்ன செய்யப்போகிறேன் நான்.'' இதிலிருந்து எப் படி மீளப் போகிறேன்.''

கண நேரத்தில் ஓராயிரம் எண்ண அலைகள் எழும்பி அவளது இதயச் சுவரில் மோதி சிதறின.

பயத்தில் இதயத்துடிப்பு முரசொலியாய் அதிர்ந்தது.

''என்ன வந்தனா? என்னோட ஆசை நாயகியா இருக்க மாட் டேன்னு சொன்னியே?''

''அதுக்கு மட்டும் நீ சம்மதிச்சிருந்தா.. சொகுசு வாழ்க்கை வாழ்ந் திருக்கலாம். அதனால தான் திட்டம் போட்டு உன்னை இந்தக் குழி யில் தள்ளிட்டேன்.''

''ஆசைப்பட்டதை அடையாம நான் விட்டதே இல்லை. அதனால உன்னை இரையாக்கிக்கப் போறேன். நாளைக்கு காலையிலேர்ந்து நீ பல பேருக்கு இரையாவே..''

''காலையில் விடியறதுக்குள்ளே...உன்னை கண்காணாத இடத் துக்கு கூட்டிட்டு போயிடுவாங்க.

இந்தியாவுல இருக்கிற பல மாநிலங்களுக்கும் உன்னை மாத்தி மாத்தி கூட்டிப்போய்...''

கட கடவென்று அரக்கனைப்போல் சிரித்தான், முகேஷ்.

''நீச புத்திக்காரனே! நீ உருப்படுவியா?''

''திட்டு...நல்லா திட்டு...! உன் சாபம் பலிக்கப் போறதில்ல...''

அருகில் நெருங்கி வந்தான்.

''இந்த பாவம் சும்மா விடாதுடா...உன் வம்சம் விளங்காதுடா...நாயே..!''

''இன்னும் என்னென்ன திட்டணுமோ திட்டு. டார்லிங்!''

பக்கவாட்டிலிருந்த அறைக்கு அவள் திமிறத் திமிற இழுத்துப் போனான்.

அறைக்கு வெளியே சிறு மேஜையில் பித்தளை பூ ஜாடி வைக்கப்பட்டு இடுந்தது. ஒரு கூடை நிறைய பழங்கள்..பழம் நறுக்கும் கத்தி..!

பலங்கொண்ட மட்டும் தனது கூரிய நகங்களால் அவனது கன்னங்களில் பிறாண்டினாள்.

''ஸ் ஆ...ஆ...''

வலியில் அலறி... அவனது பிடியை தளர்த்தினான். வெறி கொண்டவளை போல முகத்தில் குத்தினாள்.

அந்த வடநாட்டு பெண்மணி சத்தம் கேட்டு ஓடோடி வந்தாள்.

பித்தளை ஜாடியை தூக்கி அவளது மண்டையில் ஓங்கி ஒரு போடு போட்டாள்.

''ஊப்...''

தலையில் பிடித்தவாறு சரிந்தாள் அவள்.

சட்டென்று பழம் நறுக்கும் கத்தியை எடுத்து கொண்டாள்.

ஹாலின் இடதுபுறத்திலிருந்த அறைக்கும் இரண்டு தடியர்கள்

**காரட்டை துருவி, அரைத்து பாலுடன் கலந்து முகத்தில் தடவி காய்ந்த பிறகு கழுவிவர, முகம் புது பொலிவுடன் விளங்கும்.**

**-கே. பிரபாவதி, மேலகிருஷ்ணன்புதூர்.**

**அடக்கம், சத்தியம், கற்பு மூன்றும் பெண்களைப் பாதுகாக்கும் தேவதைகள்.**

**-ஹால்டன், கே.விஜயலட்சுமி, தி.மலை.**

தண்ணியடித்து கொண்டிருந்தார்கள் போலும்.

போதை மிதக்கும் விழிகளோடு தள்ளாட்டமாய் வந்தனர்.

''இனி சமாளிப்பது கஷ்டம்! இவர்களிடம் சிக்கினால் காலத்திற்குள் நரகத்தில் கிடந்து உழல வேண்டியது தான்..''

மானாய் தாவி ஓடினாள்.

வெளி வாசற்கதவை திறந்து அவள் அசுர வேகத்தில் ஓடியதை பார்த்து முகேஷ் கத்தினான்.

''டேய்... தீ வட்டி தயடியன்களா? அவளை பிடிங்கடா''

நல்ல போதையில் இருந்ததால் அவர்களால் வேகமாய் துரத்த முடியவில்லை. வாசற்படியிலேயே தள்ளாடிக்கொண்டு நின்றனர்.

பங்களாவின் வாசலை தாண்டி இறங்கி இருபதடி தூரம் ஓடியிருப்பாள்.

பின்னால் திரும்பித் திரும்பி பார்த்தபடி ஓடியவள், யார் மீதோ மோதிக்கொண்டாள்.

இருட்டில் யார் அது? என்று தெரியவில்லை.

மோதியதுமே...அவளது தைரியம் மாயமாய் மறைந்து விட்டது.

''ஐயையோ..மாட்டிக்கொண்டோமே? இதற்கு செத்து விடலாமே?''

பயத்தில் வீலென்று அலறியபடி மூர்ச்சையானாள் வந்தனா.

***''கடல் அலை நம்ப ரமேஷை இழுத்துக்கிட்டுப்போனது லேர்ந்து எனக்கு ஒண்ணு தெரியுதுடா மச்சி.''***

***''என்னடா...?''***

***''கண்டிப்பா அது பெண் அலையாத்தாண்டாஇருக்கணும்!''***

**-சீர்காழி வி ரேவதி.**



16

வந்தனாவின் அழகிய இமைகள் மூடிக்கிடந்தன.

மயக்கம் மெல்லத் தெளிந்தது.

மூடிய இமைகளுக்குள் விழிக் கோளங்கள் அங்கும் இங்கும் உருண்டன.

இமைகள் ஒவ்வொன்றும் பாறாங்கல்லாய் கனத்தன.

சிரமப்பட்டு விழிகளை மலர்த்தினாள்.

"இந்த அறை விசாலமாய் இருக்கிறதே? கண்டிப்பாய் இது ஏதோவொரு பங்களா தான். நான் எங்கு இருக்கிறேன்? யார் மீதோ மோதினேனே? அந்தப்பாவியின் ஆளாய்தான் இருக்க வேண்டும் கடவுளே! இப்படி அகப்பட்டு கொண்டேனே? வருணுக்கு என் மனதில் இடமளித்தேன். அதனால் வேறொருவருக்கு கழுத்தை நீட்டாமல் காலமெல்லாம் கன்னிப் பெண்ணாய் வருணின் நினைவோடு வாழ முடிவெடுத்தேனே? கடைசியில் சாக்கடையிலா நான் விழ வேண்டும்? ஊகூம்... இந்த உடம்பு கறை படுவதற்குள் இதிலிருந்து தப்பிக்க வேண்டும். தப்பிக்க மார்க்கம் இல்லை என்றால் உயிரை விட்டுவிட வேண்டியதுதான்..! ஏற்கனவே பத்ரகாளி போல் ஆங்காரமாய் முகேஷை பிறாண்டி காயப்படுத்தி ஓடியிருக்கிறேன். அதனால்... அவர்கள் இப்போது வெகு உஷாராய் இருப்பார்கள். பாதுகாப்பை பலப்படுத்தி இருப்பார்கள். தப்பிக்கவே முடியாது... அறையில் யாரும் இல்லை. அறைக்கதவு சாற்றப்பட்டிருக்கிறது. இதென்ன? பக்கவாட்டில்? பால்கனி கதவுபோல் இருக்கிறதே? "

"பயத்தில், அதிர்ச்சியில் காய்ச்சல் வந்து தொலைந்து விட்டது. நாக்கு கசந்து... கண்களில் எரிச்சல்... உடல் நடுங்கி தொலைக்கிறதே!"

பல்லைக் கடித்து பலத்தை வரவழைத்து கொண்டு மெல்ல எழுந்து நடந்தாள்.

பால்கனி கதவை மெதுவாய் திறந்தாள்.

''வேறு வழியில்லை. தப்பிக்கவும் முடியாது. இதிலிருந்து குதித்தால்... கண்டிப்பாய் மண்டை உடையும். கபாலம் பிளந்து செத்து தொலையலாம். மானத்தை காத்துக்கொள்ள... இது மட்டுமாவது வழி கிடைத்ததே!''

மனதில் சிறு நிம்மதி ஜனித்தது.

சேலைத்தலைப்பை இழுத்து இடுப்பில் செருகிக் கொண்டாள்.

குதிப்பதற்கு முன் கீழே பார்த்தாள்.

பரந்த தோட்டம் பச்சை பசேலென்று கண்ணை கட்டிப்போட்டது.

''இது யாருடைய பங்களா? தோட்டத்தில் அலங்கார ஊஞ்சலில் அமர்ந்தபடி பேப்பர் படித்து கொண்டிருக்கிறாரே? அவர் யார்? எங்கேயோ பார்த்தாற்போல் இருக்கிறதே? யாராய் இருந்தால் எனக்கென்ன? மானம் பறிபோவதற்குள்... போய் விடலாம்''

''பாவம் அப்பா எப்படி இருக்கிறாரோ? இப்படியொதுருகதி நேர்ந்ததை கடைசிவரைக்கும் அப்பா தெரிந்து கொள்ளப்போவதில்லை. குமுதாவுக்கு கடவுள் நிச்சயம் தகுந்த தண்டனை தரப்போகிறார்''

''என் பாவம் அவளை விட்டு வைக்காது...''

''வருண்! ஐ லவ் யூ வருண்...''

''கடைசியா உங்க நெனப்போட நான் இந்த உலகத்தை விட்டு போறேன்...!''

தனக்கு நெகிழ்வாய் பேசியவள் குதிக்க போனாள்.

அந்த பெரியவர் அவளை பார்த்து சிநேகமாய் கையை அசைத்தார்.

''சே கிழவன்! இந்த வயதில் இவனுக்கு பெண்ணாசையை பாரேன்...பாவி...!''

முன்காலைத்தூக்கி குதிக்க யத்தனித்தாள்.

''குட்மார்னிங் வந்தனா..! நீ பாதுகாப்பான எடத்துல தான்

**முட்டைகோஸ் வேகவைத்த தண்ணீரை வடிகட்டி ஆறவைத்து அதைக்கொண்டு முகம் கழுவினால் முகம் பளிச் என்று இருக்கும்.**

**-சு. கண்ணகி, வேலூர்.**

இருக்கே... யூ டோண்ட் ஒர்ரி...!''

அலங்க மலங்க விழித்தாள் வந்தனா.

விழிகளில் நீர்த்திரையிட்டு மறைத்ததால் அவரது உருவம் மங்கலாய் தெரிந்தது.

கண்ணீரை துடைத்து கண்களை கசக்கி விட்டுக்கொண்டு பார்த் தாள்.

''அந்த ஆபத்திலேர்ந்து உன்னை மீட்டாச்சு. நான் யாருன்னு தெரி யுதா?''

கேட்டபடி நடந்து வந்தார் அந்த பெரியவர்.

''ஹாஸ்பிட்டலுக்கு வந்த வி.ஐ.பி. பேஷண்ட் தானே நீங்க?''

ஆச்சர்யத்துடன் கேட்டாள் வந்தனா.

''என்னை எப்படி இவர் மீட்டார்?''

''நான் ஆபத்துல மாட்டிக்கொண்டது இவருக்கு எப்படி தெரியும்?''

''இவ்வளவு பெரிய ரிஸ்க் எடுத்து என்னை காப்பாற்றி இருக்கி றாரே!''

''இத்தனை அக்கறையுடன் இவர் செயல்பட்டதற்கு என்ன காரணம்?''

கணநேரத்தில் மனதில் நிறைய கேள்விகள் முளைவிட் டன.

''கதவு திறந்துதானிருக்கும். வெளியே வர்றியா? இல்ல நான் மாடிக்கு வரவா?''

''இல்லைங்க ஐயா! நானே இறங்கி வர்றேன்.''

''நிதானமா வா..''

பெருத்த நிம்மதி மனதில் பரவ ஆவலாய் இறங்கி வந்தாள் வந்தனா.

**''உன் மனைவி தப்பு செய் தாளா என்ன அடிக்கடி சாரி சொல் கிறாள்?''**

**''சேரி, சேலை வேண்டும்னு அப்படி சிம்பாலிக்கா சொல் கிறாள்!''**

**-காசிதாசன்,திருவண்ணா மலை.**



அவர் அதே ஊஞ்சலில் போய் அமர்ந்திருந்தார்.

''இப்படி உட்காரும்மா''

''பரவாயில்லைங்க ஐயா!''

''அம்மா உட்காரும்மா... ஏற்கனவே உனக்கு பயத்துல காய்ச்சல் கண்டிருக்கு. டாக்டர் ஊசி போட்டு போனாரு..''

''நன்றின்னு ஒரு வார்த்தையில சொல்லி முடிச்சா அது சரியா இருக்காதுங்க ஐயா!''

''ஒரு பொண்ணுக்கு உயிரைவிட மானம் தானே ரொம்ப பெரிசு?''

''என்னை அந்த நரகத்திலிருந்து மீட்டதுக்கு ஆயிரம் நன்றிங்க ஐயா!''

''என் உயிர் இருக்கிற வரைக்கும் இந்த பேருதவியை நான் மறக்க மாட்டேன்''

அவரது பாதம் தொட்டு பணிந்தாள் வந்தனா.

''சவுபாக்கியவதியா இரும்மா..''

**''மனைவிக்கு கராத்தே கத்து கொடுத்தது தப்பா போச்சா -ஏன்?''**

**''முன்னே கையால அடிச்சவ... இப்ப பெல்டால அடிக்கிறா...''**

**-பர்வீன் யூனுஸ், சென்னை.**



அவளது உச்சந்தலை தொட்டு ஆசீர்வதித்தார்.

''உட்காரும்மா''

மறுக்காமல் பவ்யமாய் ஓரமாய் அமர்ந்தாள்.

''கொஞ்ச நேரத்திற்கு முன் இவரை போய் தப்பாக நினைத்தோமே! என்ன மதியீனம்?''

''ஒரு நல்லவரை நம்பாமல் சந்தேகிக்கிறேன். ஆனால் குமுதாவை பசுந்தோல் போர்த்திய புலியை நம்பி மோசம் போக இருந்தேனே!''

''என்ன முட்டாள்தனம்? சே...!''

தன்னைத்தானே கடிந்து

கொண்டாள் வந்தனா.

''நான் ஆபத்துல மாட்டிக்கிட்டது உங்களுக்கு எப்படி தெரியும்? என் பேரை சரியா சொல்லி கூப்பிட்டீங்க? ரொம்ப ஆச்சரியமா இருக்கு ஐயா!''

''உன்னைப்பத்தின அத்தனை புள்ளி விவரங்களும் எனக்கு அத்து படி! என் பேர் சிவசங்கர்''

''நீங்க ஒரு பெரிய தொழிலதிபர்னு ஹாஸ்பிடல்ல பேசிக்கிட் டாங்க ஐயா!''

''என்னோட டீடெய்ல்ஸ் உங்களுக்கு எப்படி?''

பாதியில் நிறுத்திவிட்டு அவரை ஏறிட்டு பார்த்தாள்.

''அதெல்லாம் இருக்கட்டும். உனக்கு துரோகம் பண்ணினாளே உன் தோழி! அவதானே உன்னை அங்கே கூட்டிட்டு போனா?''

''ஆமாங்க ஐயா..! ஆருயிர் தோழி நம்பிட்டிருந்தேன். அஞ்சு வருஷ பழக்கம். நல்ல நட்புக்கு துரோகம் பண்ணிட்டா!''

கண்களில் கண்ணீர்க்குளம் கட்டியது.

''கமிஷனர் கிட்டே அவளை பத்தி சொல்லியாச்சு. இந்நேரம் அவ ளோட குடும்பத்தையே ரவுண்ட் அப் பண்ணியிருப்பாங்க. உன்னை நேர்ல வந்து ஒரு சைன் போட சென்னாரு. நீ என்ன சொல்றே?''

''அவ என்னை பணத்துக்காக கொலை பண்ணியிருந்தாக்கூட மன்னிச்சு விட்டிருப்பேன். ஆனா...அவ... படு நரகத்துல தள்ளி னாளே!'' ''அதை என்னால மறக்கவே முடியாது. கண்டிப்பா சைன் பண்றேன் சார்!''

''குட்..!''

''அப்போ... நார்த் இந்தியன் லேடி...முகேஷ்.. அந்த தடிய னுங்க...? அந்த லேடியோட மண்டையில் அடிச்சு போட்டுட்டு ஓடி வந்தேன் ஐயா!''

**கொத்தமல்லி இலையை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து அதில் வெல்லம் போட்டு பருகினால் உடல் சூடு தணியும். அஜீரணம் ஏற்படாது.**

**-சு. கண்ணகி, வேலூர்.**

**உடல் எடை குறைவாக இருக்கிறவர்கள், தினமும் ஒரு பிடி வேர்கடலையை வெல்லம் சேர்த்து சாப்பிட்டு வந்தால் உடல் எடை கூடும்.**

**-சு. கண்ணகி, வேலூர்.**

''அவங்களையும் சேர்த்துதான் கம்ப்ளைண்ட் பண்ணி இருக்கேன். நீ சரின்னு சொன்னா... எப்.ஐ.ஆர். பைல் பண்ணிடு வாங்க...முகேஷ் ஜாலமா பேசி நழுவ பார்த்தான்...

நீ நகத்தால கீழ காயப்படுத்தியிருக்கே. அது நல்ல எவிடென்ஸ்.. முகத்துல புலி பிறாண்டினாப்பல நிறைய காயம் இருந்ததால் அவன் வகையா சிக்க கிட்டான்''

''உங்களை மாதிரி பெரியவங்க சப்போர்ட் எனக்கு கிடைச்சது பெரிய பாக்கியம் ஐயா!''

''முகேஷ் மாதிரியான பொறுக்கிகளுக்கு சமுதாயத்துல தகுந்த தண்டனை கிடைக்கணும். பெண்களை போக பொருளா பார்க்கிற பாவிகளுக்கு இது ஒரு பாடமா இருக்கணும். பைல் பண்ண சொல் லுங்க..''

''ஈவ் டீசிங் பண்றவங்களுக்கே சரியான தண்டனை தரணும்னு அரசு ஆணை பிறப்பிச்சிருக்கே? இவ்ளோ பெரிய காரியம் செய்த வங்களுக்கு கண்டிப்பா நல்ல தண்டனை கிடைக்கும்''

''உங்க வீட்டுக்கு போன் பண்ணி சொல்லிடலாம்னு நெனச்சேன். உன்னை கேட்டுக்கிட்டு அப்புறமா பேசிக்கலாம்னு இருந்துட் டேன்''

''நல்ல காலம் ஐயா! அப்பாவால இதை ஜீரணிக்கவே முடியாது. அவரு கிட்டே நேர்ல நிதானமாக பக்குவமாத்தான் இந்த விஷ யத்தை சொல்லணும்''

''பொண்ணுங்க இப்படித்தான் இருக்கணும். நிதானமா யோசிச்சு தான் எதையும் செய்யணும்.''

''செய்தித்தாள்லே வர்ற சம்பவங்களை வாசிக்கிறப்போ சில சமயம் திகைப்பா இருக்கும். இப்படிக்கூடவா நடக்கும்னு நெனச் சிருக்கேன். என் வாழ்க்கையிலேயும் அப்படிப்பட்ட சம்பவங்கள்

நடந்துபோச்சு''

தழுதழுப்பாய் பேசினாள் வந்தனா.

''சேதாரம் இல்லாமல் மீண்டுட்டே இல்ல? அதை நெனச்சு சந்தோஷப்படும்மா''

''குமுதாவை நெச்சாலே மனசு கொதிக்குதுங்க ஐயா!''

''நீ இயல்புக்கு திரும்பறதுக்கு கொஞ்சம் நாளாகும். காலம் எப்பேர்ப்பட்ட காயத்தையும் ஆத்திடும்னுட சொல்வாங்க''

''ஐயா! இன்னமும் நான் கேட்டதுக்கு நீங்க பதிலே சொல்லலையே?''

''பதிலா? வா என் கூட..!''

புன்னகையுடன் எழுந்து தோட்டத்தை கடந்து பங்களாவுக்குள் சென்றார் சிவசங்கர்.

''என்னது இது? புதிரா இருக்கே?''

தனக்குள் முணு முணுத்தபடி பின் தொடர்ந்தாள் வந்தனா.

## 17

அந்த பிரம்மாண்டமான அறைக்குள் புகுந்தார் சிவசங்கர்.

வந்தனா தயக்கத்துடன் அறை வாசலருகே நின்று விட்டாள்.

''வா வந்தனா! நீ கேட்டதுக்கான பதில் இங்கே இருக்கு. வந்து பாரேன்..''

குழப்ப முலாம் பூசிக்கொண்ட முகத்துடன் உள்ளே நுழைந்தவள்... வியப்பின் விளிம்பிற்கே சென்று விட்டாள்.

ஆளுயரத்தில் அவளது ஓவியம்!

கண்ணாடியில் தன்னையே பார்த்து கொண்டது போல் அவ்வளவு தத்ரூபமாய் இருந்தது.

திருமலை வையாவூரில் வருணின் கரத்தால் தானமாய் தந்த

பட்டுப்புடவையை அவள் கட்டியிருப்பது போல் ஓவியம் இருக்கிறதே?

''இங்கு எப்படி வந்தது எனன் ஓவியம்?''

''இதை வரைந்தது வருண் தானா?''

''ஆம்... அவர் 'நானொரு ஓவியம்' என்று கூறினாரே?''

''அப்படியானால்... இதுஅவரது பங்களாவா?''

''வருண்... சிவசங்கர் ஐயாவின் மகனா?''

''இது எல்லாவற்றையும்விட... வருண் என்னை நேசிக்கிறார் போலிருக்கிறதே?'' நேசிப்பதால் தானே நேர்த்தியாய் என்னை ஓவியமாய் தீட்டியிருக்கிறார்.

''நான் அவரை மனதார நேசிப்பதுபோல்... அவரும் என்னை விரும்புகிறாரா?''

''கடவுளே..! எப்பேர்ப்பட்ட பாக்கியம் இது?''

''மனதில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்குகிறதே? இந்த காதலை ஏன் என்னிடம் அவர் வெளிப்படுத்தவில்லை. மனதிற்குள்ளேயே ஏன் பூட்டி வைத்துக்கொண்டார்?''

***''செல் நம்பரை மாத்தினா தலைவர் பிரதமராயிடுவார்னு ஜோசியர் சொன்னாரே... தலைவர் மாத்திட்டாரா?''***

***''ஜெயிலர் மாத்த விட மாட்டேங்கிறாராம்...''***

**-பர்வீன் யூனுஸ், சென்னை.**



மகிழ்ச்சி தாளாமல் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் ஊற்றெடுத்தது.

அவளையும் அறியாமல் அந்த ஓவியத்தின் அருகே சென்று நின்றாள்.

அந்த ஓவியத்தை ஆசையாய் மிருதுவாய் வருடிப்பார்த்தாள்.

''நான் ரொம்பக் குடுத்து வச்சவ வருண்!'

தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

''என்ன வந்தனா? உனக்கு பதில் கிடைச்சாச்சா?''

''ஐயா...!''

அதற்கு மேல் அவளுக்கு பேச நாக்கு எழும்பவில்லை.

''என் மகனோட மனசுல நீ இருக்கேன்னு புரிஞ்சுகிட்டேன். இந்த ஓவியம் தான் எனக்குப் புரிய வச்சது. நான் அவன்கிட்டே ஒரு நண்பன் மாதிரி பழகக்கூடியவன். அவனோட விருப்பத்துக்கு நான் என்னிக்குமே முட்டுக்கட்டை போடாதவன். அப்புறம் ஏன் இதை மூடி மறைச்சான்னு தெரியலை.. ஹாஸ்பிடல்லே உன்னை நேர்ல பார்த்ததும் எனக்கு சந்தோஷம் தாங்கலை. காணக்கிடைக்காத பொக்கிஷம் கிடைச்ச மாதிரி அப்படி ஒரு சந்தோஷம். என் மனசுக்குள்ளே ஏதோ ஒண்ணு சொல்லுச்சு. உன்னை மிஸ் பண்ணிடக்கூடாதேன்னு ஒரு பரிதவிப்பு..!

பி.ஏ., கிட்டே சொல்லி டிடெய்ல்ஸ் கலெக்ட் பண்ணச்சொன்னேன். அத்தோட என் மனசு திருப்திப்படலை. உன்னை நிழல் மாதிரி பாலோ பண்றதுக்கு ஒரு ஆள் மூலமா ஏற்பாடு பண்ணினேன். அது என்னமோ தெரியலை. என் மகன் கிட்டே பேசி கல்யாணத்துக்கு சம்மதிக்க வைக்கிற வரைக்கும். உன்னை பத்திரமா கவனமா பாத்துக்கணும்னு உள் மனசுல ஒரு பீலிங்..!

அப்படி பாலோ பண்ணினது நல்லதா போச்சு! நீயும் உன் தோழியும் பஸ் ஸ்டாண்டுக்குப் போன தகவல் எனக்கு வந்துச்சு..! அதுலேயும் உன் தோழி தனியா ரகசியமா தூரமா போய் நின்னு யாருக்கோ போன் பண்ணியிருக்கா. அதைப்பார்த்ததும் டவுட் வந்து அந்த ஆள் எனக்கு சொன்னான். அந்தப் பொண்ணு முகத்துல கபடம் தெரியுது. முழிக்கிற முழியே சரியில்லைன்னு சொன்னதும் நான் உஷாராயிட்டேன். நம்ம ஆட்களோட எதுக்கும்

**பெண்களில் சிலருக்கு முகம் மெலிந்து கன்னங்களில் பள்ளம் விழுந்து காணப்படும். இப்படி இருந்தால் முகத்தின் அழகு கெடும். ஆகையால் தினமும் இவர்கள் காய்ந்த பாதாம் எண்ணெய்யைக் கொஞ்சம் எடுத்து முகத்தில் நன்றாகத் தேய்த்து விட்டு இரவில் தூங்க வேண்டும். இப்படி சில நாட்கள் செய்து வர முகம் சகஜ நிலைக்கு திரும்பி பொலிவுடன் திகழும்.**

**-கே. பிரபாவதி, மேல்கிருஷ்ணன்புதூர்.**

நீங்க தயாரா இருங்க.. வந்தனாவை ரொம்ப ஜாக்கிரதையா பார்த்துக் கோங்கடான்னு சொல்லிட்டேன். அவங்களும் ரொம்பக் கச்சிதமா நடந்துக்கிட்டாங்க.. நம்ம ஆள் மேல தான். நீ ஓடி வந்து மோதியி ருக்கே..'' என்று கூறிவிட்டுப் புன்னகைத்தார்.

''ஐயா! அன்னிக்கு உங்க புள்ளை தான் என் உயிரைக் காப்பாத்தி னார். நீங்க என்னோட மானத்தைக் காப்பாத்திட்டீங்க'' கைகளைக் கூப்பினாள் வந்தனா.

''இட்ஸ் ஓகே வந்தனா! அவனை எப்போ எங்கே சந்திச்சே?'' என்று கேட்டார்.

நடந்ததை விலாவாரியாகச் சொன்னாள்.

''என்ன காரணத்தாலே என்னை. குடும்பத்தை விட்டு. அடிக்கடி ரிமோட்டா எங்கேயோ போயிடறான்னு தெரியலையே? அவன் கிட்டேயிருந்து போன் வந்தா. கட் அண்ட்ரைட்டா பேசி உடனே கிளம்பி வரச் சொல்றேன். நீ வருத்தப்படாதேம்மா..''

தொடர்ந்து வந்த மூன்று நாட்களிலும் டென்ஷன் எகிறியது.

வருணிடமிருந்து போன் வரவே இல்லை. நான்காம் நாள் காலை யில் அவனிடமிருந்து போன் வந்தது.

''அப்பா! வெள்ளிமலை எஸ்டேட்டுக்குப் போயிருந்தேன். சிக்னல் கிடைக்கலைப்பா.. வந்துட்டே இருக்கேன். இன்னிக்கு இருட்டறதுக்குள்ளே வீட்டுக்கு வந்துருவேன்'' என்றான்.

வந்தனாவுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.

அப்பாவுக்கு போன் செய்தாள்.

எதைப்பற்றியும் அவரிடம் சொல்லாமல் கேஷுவலாச நலம் விசா ரித்து விட்டு வைத்து விட்டாள்.

''வருண் வரட்டும். ஒட்டு மொத்தமாய் சந்தோஷ செய்தியை சேர்த்து சொல்லிக் கொள்ளலாம்'' என்று இருந்து விட்டாள்.

மாலை ஆறு மணி வாக்கில். அவனது கார் போர்ட்டிகோவில் வந்து நின்றது.

ஹாலில் சிவசங்கர் அமர்ந்திருந்தார்.

''என்னப்பா வருண்? எதையோ பறி கொடுத்தாப்போல இருக்கே?

நீ வர்ற வரைக்கும் எனக்கு உயிரே இல்ல இனிமே சிக்னல் கிடைக் காத எடங்களுக்கு ரிமோட்டா போகவே போகாதே..!'' என்றார்.

''சரிப்பா... சாரிப்பா..''

நெகிழ்வாய் ஆதுரமாய் அவரது கையைப் பற்றினான் வருண்.

''போ..! உன் ரூமுக்குப் போய் ரிலாக்ஸ் பண்ணிட்டு வா நாம சேர்ந்து சாப்பிடலாம்..''

பிரயாணக் களைப்பு.. ஒரு தூக்கம்போட்டு எழுந்து கொள்ளலாம் என்ற நினைப்பில் அறைக்குள் நுழைந்து கதவைச் சாற்றியவன் அதிர்ந்தே போனான். வந்தனாவின் ஆளுயர ஓவியத்தின் அருகே.. நிஜ வந்தனா நின்று கொண்டிருந்தாள். தழையப் பின்னியிருந்த கூந் தலில் முல்லைச்சரம் சூட்டி.. விழிகளில் காதல் பொங்க.. வருணை இமை கொட்டாமல் பார்த்தாள் வந்தனா.

வருணுக்கு.. இது கனவா? நனவா? என்ற ஐயப்பாடு தான் வந் தது.

வழக்கம்போல் இது கற்பனை தான், கனவு தான் என்று பெரு மூச்செறிந்தான். மறுகணம்...

'' ஐ லவ் யூ ஸோ மச்!'' விசும் பியபடி ஓடி வந்து அவனது மார் பில் பூமாலையாய் சாய்ந்து விட் டாள்.

இன்னமும் நம்ப முடியாமல் தனக்குத் தானே கிள்ளிப் பார்த் தான். வலித்தது.

''மை காட்..!''

எனன தான் கட்டுப்படுத்தி னாலும்.. காட்டாற்று வெள்ள மாய் பொங்கி வரும் காதலுக்கு அணை போட முடியாமல்..

''மை டார்லிங்..! என் கண்ணே..! என்னைத் தேடி இங்

**''தலைவரை ஜொள்ளு பார்ட்டினு ஏன் சொல்றே?''**

**''மகளிரணி கூட்டத்துல எல்லோரையும் கேட்வாக் பண்ண வச்சி ரசிக்கறாரே...''**

**-பர்வீன் யூனுஸ், சென்னை.**



கேயே வந்துட்டியா?''

பிரேமையுடன் அவளது நெற்றில கன்னங்களில் இதழ்களால் ஒற்றி தோள் பட்டையில் முகம் புதைத்தான்.

## 18

குபீரென்று அந்த நினைவு வந்தது.

சட்டென்று தன்னிலை மீண்ட வருண் வந்தனாவை தன்னிடமிருந்து விலக்கினான்.

இரண்டடி பின்னுக்குத் தள்ளி நின்றான்.

''வந்தனா.. வ.. வந்தனா! நான் உனக்கேத்தவன் இல்ல.. போயிடு...!''

''எ.. என்ன சொல்றீங்க வருண்? எதுக்காக இப்படிப் பேசறீங்க? உங்க மனசுல நானிருக்கேன். அதுக்கு சாட்சி இந்த ஓவியம்.. அப்புறம் ஏன் முரண்பாடா பேசறீங்க?''

''நீ நல்லாயிருக்கணும். காலத்துக்கும் பூ பொட்டோட மங்களகரமா காட்சியளிக்கணும்..''

''புரியலை வருண்...!''

''என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா.. நீ பட்ட மரமாயிடுவே வந்தனா!''

''உங்க கிட்டே என் மனசைப் பறி கொடுத்துட்டேன் வருண்..! என் மனசுல நீங்க தான் இருக்கீங்க.. ஏன் என் மனசை நோகடிக்கிறீங்க?''

''ஐயோ.. நான் ஒரு கேன்ஸர்

**''தலைவர் வயசானவங்க ஓட்டுக்களை கவரப் பாக்கறார்னு எப்படிச் சொல்றே?''**

**''முதியோர் கல்வி கற்பவர்களுக்கு எஜீகேஷன் லோன் வழங்கப்படும்னு பேசறாரே...''**

**-பர்வீன் யூனுஸ், சென்னை.**



பேஷன்ட்..! நான் நாட்களை எண்ணிக்கிட்டிருக்கேன் வந்தனா..!''

''பொய் சொல்லாதீங்க வருண்! உங்களைப் பார்த்தா பேஷன்ட் மாதிரியா இருக்கு..?''

''இது நிஜம் தான் வந்தனா..!''

''நான் நம்ப மாட்டேன்..''

''சத்தியம் வந்தனா..!''

''இல்ல வருண். உங்களை மாதிரி உத்தமருக்கு அந்த நோய் நிச்சயமா வராது. வரவும் கூடாது. தயவு செஞ்சு உண்மையைச் சொல்லுங்க..''

தேம்பி விட்டாள் வந்தனா.

அன்று கோவிலில் வைத்து.. நான் ஒரு அல்ப ஆயுசுக்காரன் என்று வருண் கூறியது ஞாபகத்திற்கு வந்தது.

'ஒருவேலை இவர் சொல்வது உண்மையா? அவளது உள் மனம் புலம்பியது. ''அப்பாவுக்கு தெரிஞ்சா அதிர்ச்சியில் உயிரை விட்டுருவாருன்னு தான் அவர் கிட்டே மறைச்சேன்

இந்தக் குடும்பத்துக்கு என்ன சாபக்கேடோ தெரியலை வந்தனா! ஒரே வருஷத்துல மூணு உசுரை இழந்தோம். இதோ நான் போயிட்டே இருக்கேன்.''

''ஐயோ.. நாராசமா இருக்கே? உங்களுக்கு எத்தனை வருஷமா இந்த நோய் இருக்கு?''

''வருஷம் எல்லாம் இல்ல.. சமீபகாலமாகத்தான் நாலஞ்சு மாசமா..''

''வெயிட் லாஸ் இருக்கா?''

''இல்ல..''

''பெயின் இருக்கா?''

''இல்ல..''

''உங்களுக்குள்ளே எந்த மாற்றமும் தெரியலையா?''

''தெரியலை ஆனா இதை மனசுல வச்சுக்கிட்டுத் தான் நான் என் காதலை வெளிப்படுத்தாம இருந்தேன்.''

''புரியுது வருண் இது ஆரம்பக் கட்டமா இருந்தா கண்டிப்பா குணப்படுத்திடலாம் வருண்!

என்ன டிரீட்மென்ட் எடுத்துக்கிடறீங்க? டாக்டர்ஸ் என்ன

டேப்ளட்ஸ் குடுத்தாங்க? பிரிஸ்க்ரிப்ஷனை எனக்கு காட்டுங்க..''

துக்கத்தை விழுங்கியபடி கையை நீட்டினாள்.

''நமக்கு விதி இவ்ளோ சீக்கிரமா வந்துருச்சேங்கிற விரக்தியில.. நான் டிரீட்மென்டே எடுத்துக்கலை. கேன்ஸர் முத்திப் போன நிலைமையில இருக்கிறதா ரிப்போர்ட்டில் வந்தது. எந்த மருந்தும் மாத்திரையும் எடுத்துக்காம விட்டுட்டேன்.''

''இவ்ளோ படிச்சிருந்தும்.. இப்படி நடந்துக்கலாமா வருண்?''

''இரு வரேன்!'' என்ற வருண். ரிப்போர்ட்டை உருவி அவளிடம் தந்தான்.

கை விரல்கள் நடுங்க அந்த உறையை உற்றுப் பார்த்தாள்.

வருண் என்ற பெயர் டைப் செய்யப்பட்டிருந்தது.

''வருண்! எனக்கு தெரிஞ்சு நிறைய எடங்கள்லே ரிப்போர்ட் தப்பா பிரின்ட் ஆகியிருக்கு. இதுவும் அப்படி நடந்திருக்கலாம் இல்லையா? எதுக்கும் இன்னொரு தடவை செக் பண்ணிக்கலாமே வருண்?''

''சரி! ரிப்போர்ட்டுல மறுபடியும் எனக்கு கேன்ஸர் தான்னு உறுதிப்படுத்திட்டா நீ எனக்காக ஒரு ஹெல்ப் பண்ணணும்''

''உத்தரவிடுங்க வருண்! செய்யக்காத்திருக்கேன்''

''நீ என்னை மறந்துட்டு உனக்கு வேறொரு வாழ்க்கையை அமைச்சுக்கணும்''


**கண்மணி சந்தா**

**கண்மணி**

**உங்கள் இல்லம் தேடி வர.**

**1 ஆண்டு சந்தா : ரூ 600**

**6 மாத சந்தா : ரூ 300**

சந்தா அனுப்ப
வேண்டிய முகவரி:

**நிர்வாகி**
**தேவியின் கண்மணி,**
**246, அண்ணாசாலை,**
**சென்னை - 600 006**


''உங்களுக்கு கேன்ஸர் இருந்தா தானே? அதைப்பத்தி யோசிக்கணும்..''

''எப்படி இவ்ளோ உறுதியா சொல்றே?''

''காரணம் நானொரு நர்ஸ். கேன்ஸர் பேஷன்ட்ஸை நான் பார்த்திருக்கேன். உங்களைப் பார்த்தா அதுக்கான அறிகுறியே தெரியலை அந்த நம்பிக்கையில பேசறேன். அதுவும் தவிர. தாயார் சன்னதியில வச்சு மங்கலப் பொருட்கள் அத்த

னையும் உங்கம்மா இறந்த நாழிகையில உங்க கையால தானமா தந்தீங்களே? அந்தப் புண்ணியவதியோட ஆத்மா உங்களைக் காப்பாத்தும்கிற நம்பிக்கை நீண்ட ஆயுளைத் தரும்கிற நம்பிக்கை''

''சரி உன் இஷ்டப்படி நாளைக்கு 'செக்அப்' பண்ணிடலாம்''

இரவெல்லாம் வந்தனா தூங்கவில்லை.

விடியற்காலையிலிருந்து பச்சைத்தண்ணீர் பல்லில் படாமல் பூஜையறையிலேயே பழியாய் கிடந்தாள்.

''வந்தனா! நீயும் வர்றியா?'' அவன் கேட்டபோது தலையை ஆட்டி மறுத்துவிட்டிருந்தாள். வேறு வழியின்றி சிவசங்கரிடம் விஷயத்தைப் போட்டு உடைத்து விட்டிருந்தார்கள்.

''வந்தனா சொன்ன மாதிரி.. உனக்கு ஒண்ணும் இருக்காது வருண்! உங்கம்மா தெய்வமா இருநது ரட்சிப்பா...''

தழுதழுத்தார் சிவசங்கர்.

''ரிசல்ட்டை கையில் வாங்கிட்டு தான் வருவேன்.''

பூஜையறையில் கண்ணீர் தாரை தாரையாய் வழிய பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாள் வந்தனா.

மாலை ஐந்து மணி ஆன போதும் கூட அவள் பூஜை அறையை விட்டு நகரவில்லை.

''அம்மா தாயே! இந்த அபலைக்கு தயவு காட்டம்மா..''

அழுதழுது சுருண்டு படுத்தே விட்டாள் வந்தனா. சிவசங்கர் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தார்.

ஆறு மணி வாக்கில் வருணின் கார் வந்தது. திக் திக் என்று இதயம் அடித்துக் கொண்டது. வாசலில் சிவசங்கர் நின்று கண்ணீர் மல்க மகனை ஏறிட்டார்.''

ஒன்றும் பேசாமல் அவரது பாதங்களைத் தொட்டான்

**''நான் என் காதலிக்கு எழுதிய கடிதம் அவளோட அரசியல்வாதி அப்பா கிட்ட மாட்டிக்கிடுச்சி''**

**''அய்யய்யோ.. அப்புறம் என்ன ஆச்சு?''**

**''ஒண்ணும் ஆகல.. அவருக்குத் தான் எழுத படிக்கத் தெரியாதே''**

**-பர்வீன் யூனுஸ், சென்னை.**



வருண்.. புரிந்து கொண்டார் அப்பா..

சந்தோஷமாய் மகனைத் தழுவி முதுகில் தட்டிக் கொடுத்து விட்டு நாசூக்காய் நகர்ந்து விட்டார்.

''வந்தனா.''

வாரி சுருட்டிக் கொண்ட எழுந்தாள்.

அவளுக்கு தள்ளாடியது.

பூஜை அறைக்கதவைப் பிடித்துக் கொண்டு அவனை ஊன்றிப் பார்த்தாள்.

வேண்டுமென்றே சோகமாய் முகத்தை வைத்துக் கொண்டிருந் தான்.

''வருண்! எ.. என்னாச்சு?'' சோகமாய் பார்வையைத் தழைத்தபடி இருந்தான்.

அவனது தாடையைத் தொட்டு நிமிர்த்தினாள்.

''பேசுங்க வருண்.''

அவளது பரிதாபமான சோகமான முகத்தைப் பார்த்ததும் அதற்கு மேல் அவளைத் தவிக்க விட மனம் வரவில்லை.

''உன்னோட நம்பிக்கை வீண் போகலை வந்தனா. நான் நார்ம லாத்தான் இருக்கேன்.''

''அப்பாடா.. என் வயித்துலபாலை வார்த்தீங்க.. அப்புறம் ஏன் சோகமா முகத்தை வச்சுக்கிட்டு டென்ஷன் பண்ணி னீங்க.''

''சாரிடா..''

அவளது கரத்தைப் பிடித்து தன் கன்னத்தில் பதித்துக் கொண் டான். மங்களகரமாய் நெற்றியில் குங்குமப் பொட்டு வைத்திருந் தாள்.

''நீங்க வந்து சொல்றதுக்கு முன்னாடியே எனக்கு விஷயம்

**''உன் புருசனை ஏமாளின்னு திட்றியே கல்யாணத்துக்குப் போன இடத்துல செருப்பை தொலைச்சுட்டு வந்துட்டாரா?''**

**''போகும்போது வெறுங்காலோடு தான் போனாரு... ஆனா பழைய செருப்பை மாட்டிக் கிட்டு வந்திருக்காரே!''**

**-சீர்காழி வி ரேவதி.**



தெரிஞ்சு போச்சு.''

''அது எப்படி? நான் போன் கூடப் பண்ணலையே? பார்த்திப னைக் கூட நான் கூட்டிட்டுப் போகலையே? எப்படி தெரியும்.''

''அஞ்சு மணி வாக்கில. உங்கம்மா படத்தில மாலையிலிருந்து சாத்தின ஒரு பூ உதிர்ந்து என் உச்சந்தலையில் விழுந்துச்சு. அப்பவே எனக்கு புரிஞ்சு போச்சு..''

அழுதழுது உன் முகமே வீங்கிப் போச்சே? ''ஐ லவ் யூடா'' அவளை இழுத்து ஆரத் தழுவிக் கொண்டான்.

''ஐ டூ லவ் யூ வருண்.'' அவளது தளிர்க் கரங்கள் அவனது கழுத் தில் மாலையாயின.

கண்ணீர் கறை படிந்த கன்னத்தில் அழுந்த முத்தமிட்டான் வருண்.

''குங்குமப்பொட்டின் மங்களம் நெஞ்சம் இரண்டின் சங்கமம்..''

எங்கிருந்தோ காற்றில் மிதந்து வந்த இனிய பாடல் சுகமாய் அவர் களது செவியை ஸ்பரிசித்தது.

**முற்றும்**

# அறிவிப்பு

***18.12.1213 இதழுக்கான பட்டுச்சேலை பரிசு பெற்றவர்களின் விபரம் அடுத்த இதழில் வெளிவரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.***

**-ஆசிரியர்**

# டிப்ஸ்:

நெல்லிக்காய்களை தொடர்ந்து சாப்பிட்டுவந்தால்பற்களும்,ஈறுகளும் பலம் அடையும்.

**-காசிதாசன், திருவண்ணாமலை.**





நல்ல நினைவாற்றல் வளர தினந்தோறும் தேங்காய் பால் சாப்பிட்டு வரலாம்.

**-காசிதாசன், திருவண்ணாமலை.**

துளசியிலைகளைச் சிறிதளவு மெல்லியதுணியில்கட்டிஸ்டவ்விற்குள் போட்டுவைத்தால்மண்ணெண்ணெய் சீக்கிரம் தீராது.

**-காசிதாசன், திருவண்ணாமலை.**





## வெளியூர்ப்பயணங்களில் வயிறு கெடாமலிருக்க!

சீரகத்தையும்சுக்கையும்பொடித்துக்குடிக்கும் தண்ணீரில் சேர்த்துக் கொதிக்க வைத்துக் குடிக்கலாம். குளிர் காலத்தில் சாப்பிடும் உணவுகள்எளிதில்ஜீரணமாகும்.வாயுத்தொல்லை ஏற்படாமலிருக்கும். வெளியூர்ப் பயணங்கள் செல்லும்போது ஜீரக, சுக்குப் பொடியையோ அவைகலந்து கொதிக்கவைத்த வெந்நீரையோ எடுத்துச்செல்லலாம் வெளியில் சாப்பிடும் உணவுகளால் வயிறு கெடாமலிருக்கும்.

**-பி. மீனலோசினி, சென்னை.**

## குளிர்காலத்தில் ஜுசைத் தவிர்க்க வேண்டும்!

குளிர்காலத்தில் கூலான ஜுஸ் வகைகளைச் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது. அல்லது அவசியமென்றால் வீட்டிலேயே ஆறவைத்த வெந்நீரில் ஜுஸ் செய்து சாப்பிடலாம். சூப் வகைகளை வீட்டிலேயே தயாரித்துச் சாப்பிடலாம். அதில் நறுக்கிய ஓமவல்லித்துண்டுகள் துளசி துண்டுகளை சாப்பிடும்போது சேர்த்துப் பருகலாம். ஜீரகம், சுக்குப்பொடி சேர்த்துக் கொதிக்க வைத்த வெந்நீரை [ருசிக்கேற்ப சேர்த்தால்] சுவை, மணம் கூடும் எளிதில் ஜீரணமுமாகும்.

**-பி. மீனலோசினி, சென்னை.**

உருளைக் கிழங்கை இரண்டாக வெட்டி கரும்புள்ளிமேல் தடவி வர அவை மறைந்துவிடும்.

எலுமிச்சை பழச்சாறும், தக்காளிச் சாறும் கலந்துபின் கழுத்தில் தேய்த்தால் பின் கழுத்து கறுப்பு நிறம் மாறும்.

**-கே. பிரபாவதி, மேலகிருஷ்ணன்புதூர்.**





இளநீரைப் பருகி, அதன் வழுக்கையை முகத்தில் தடவி வந்தால் முகப்பருக்கள் நீங்கும்.

**-கே. கவிதா, வேலூர்.**

சூப்பர்டேஸ்ட்டி ஸ்வீட் 1 1/2 கப் திருவாதிரைக்களி மீதியிருந்தது அதில் 2 டேபிள் ஸ்பூன் கிஸ்மிஸ் திராட்சை 2 டேபிள் ஸ்பூன் கொட்டையெடுத்த, பேரீச்சம்பழத்துண்டுகளைக் கலந்தேன். வடைகளாகத் தட்டி குக்கரில் ஆவியில் வேகவைத்தெடுத்தேன் சுவை சூப்பரோ சூப்பர் தான்!

**-பி. மீனலோசினி, சென்னை.**



# என்னைப் பற்றி

வாசக நெஞ்சங்களுக்கு வணக்கம்!

'நெஞ்சம் இரண்டின் சங்கமம்' நாவலின் நாயகி வந்தனா... கள்ளம் கபடம் அறியாதவள். பல வருடங்களாய் பழகினாலும் ஒரு சிலரின் உண்மையான சொரூபத்தை நம்மால் புரிந்து கொள்ள இயலாது. 'எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ?' என்பார்கள்.

நேசமாய் பழகி வந்த தோழியே வந்தனாவை... அதல பாதாளத்தில் தள்ளி விடுகின்றாள். அந்த அதல பாதாளத்தில் இருந்து அவள் எப்படி மீண்டாள்? அவளது காதல் கை கூடியதா? வாசித்து தெரிந்து கொள்ளுங்கள்.

இந்த மென்மையான காதல் கதை... உங்கள் மனதை மயிலிறகாய் வருடும் என்று நம்புகிறேன்.

உங்கள்
லட்சுமி பிரபா எம்.ஏ., பி.எட்.,

# கோலங்கள்



21 புள்ளி 1 முடிய
(நேர்புள்ளி)
**-டி.ராஜராஜேஸ்வரி, சேலம்.**



19 புள்ளி 10-ல்
நிறுத்தவும் (இடைப்புள்ளி)
**-ஆர். உதயவள்ளி, சென்னை.**



15 புள்ளி 5 வரிசை, 5-ல்
நிறுத்தவும் (நேர்புள்ளி)
**-எஸ்.பி.சுசீலாதேவி,
சென்னை.**



11 புள்ளி 6-ல் நிறுத்தவும் (இடைப்புள்ளி)

**-கே. ஜீவரத்தினம், கொண்டலம்பட்டி.**



ரங்கோலி:

**-எஸ். ஜெயஸ்ரீ சாய், புதுச்சேரி.**



ரங்கோலி:

**-எஸ். சரோஜா, மும்பை.**

Deviyin KANMANI-Tamil Weekly 08-01-2014 Regd.No. TN/CH(C)/360/12-14 Registered With Registrar of News papers for India Under No.49510/89 published every Wednesday of every Week.

